www.padippakam.com

நவம்பர் 2008
ரூ. 7.00

# புதிய ஜனநாயகம்



## ஈழம்:

## ஜெயாவின் "புலி" பூச்சாண்டி!
## கருணாநிதியின் கோழைத்தனம்!

படிப்பகம்

www.padippakam.com

# அம்பானியின் கனவைத் தகர்த்த விவசாயிகளின் எழுச்சி!

மராட்டிய மாநிலம் ராய்காட் மாவட்டத்தின் பென் பகுதி, நெல் சாகுபடிக்குப் பெயர் போனது. வளமான இப்பகுதிக்குப் பாசன வசதி செய்துதர வேண்டும் என்பது இங்குள்ள விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கை. இதற்காகத் திட்டமிடப்பட்ட ஹேமாவதி அணையின் கட்டுமானப் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன. பாசன வாய்க்கால்கள் அமைக்கும் பணி கூட முடிந்துவிட்டது.

எண்பதுகளின் கடைசியில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் நிறைவேறினால், அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள் பலன் பெறும். இதன் மூலம் தங்களது நிலம் செழித்து வாழ்வு வளம் பெறும் என கடந்த 20 வருடங்களாகக் எதிர்பார்த்துக் காத்துக் கிடந்த விவசாயிகளின் தலையில் இடியாக வந்திறங்கியது மராட்டிய அரசின் நிலப் பறிமுதல் ஆணை. ரிலையன்ஸின் மகாமும்பை சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்காக இப்பகுதியில் உள்ள 22 கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களை பறிமுதல் செய்யப்போவதாக 2006-ஆம் ஆண்டு அரசு அறிவித்தது.

மகாமும்பை 10,000 ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும், இந்தியாவிலேயே மிகப்பெரிய சிறப்புப் பொருளாதார மண்டலம். இது மின் உற்பத்தி நிலையங்கள், தொழிற்சாலைகள், குடியிருப்புகள், நட்சத்திர விடுதிகள், வணிகவளாகங்கள் என அனைத்தும் தன்னுள் அடக்கிய தனி சாம்ராஜ்யம், முகேஷ் அம்பானியின் கனவு சாம்ராஜ்யம். அம்பானியின் இந்தக் கனவுக்காக மராட்டிய அரசு கொடுக்க உள்ள 10,000 ஏக்கர் நிலமோ ஏழை விவசாயிகளுடையது.

அரசின் இந்த அராஜகச் செயல், விவசாயிகளின் கோபத்தைக் கிளறிவிட்டது. தங்களது கிராமம் பாசன வசதி பெற்றுச் செழிப்புடன் பூத்துக் குலுங்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கனவு. ஆனால், அவர்களின் கனவைச் சிதைக்கும் வகையில் அவ்வட்டாரத்தையே அம்பானி கைப்பற்றுவதை எவ்வாறு அவர்களால் சகித்துக் கொள்ள முடியும்? 320 கோடி ரூபாய் செலவில் விவசாயிகளின் நலனுக்காகக் கட்டப்பட்ட ஹேமாவதி அணையை அம்பானி பயன்படுத்திக் கொள்ளையடிப்பதை அவர்களால் எப்படி அனுமதிக்க முடியும்?

தங்களது வயலில் நன்கு விளைந்து நிற்கும் நெற்பயிரைச் சுட்டிக்காட்டிப் பேசும் ஒவ்வொரு விவசாயியும், ''இது எங்களுடைய பூமி; இதனை விட்டு நாங்கள் வெளியேறுவது என்பது எப்போதும் நடக்காது'' என்று ஆவேசமாகக் கூறுகின்றனர்.

அரசின் நிலப்பறிமுதல் ஆணைக்கெதிராக கிளர்ந்தெழுந்த விவசாயிகள், பல்வேறு அமைப்புகளின் கீழ் அணிதிரண்டு போராடத் தொடங்கினர். 2006-ஆம் ஆண்டு செப்டம்பரில் பெலாப்பூரில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கூடி பிரம்மாண்டமானதொரு பேரணியை நடத்தியதோடு, விவசாயத்தையும் விவசாயிகளின் வாழ்வையும் சூறையாடும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை நாட்டை விட்டே விரட்டியடிப்போம் எனச் சூளுரைத்தனர். அன்று முதல் கடந்த இரண்டரை ஆண்டுகளாக நாற்பதுக்கும் மேற்பட்ட போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இதுவரை சுமார் 139 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு அனுமதியளித்து, அம்மாநிலத்தை பன்னாட்டு நிறுவனங்களின் வேட்டைக்காடாக மாற்றி வருகிற மராட்டிய அரசோ, இம்மண்டலங்களுக்கெதிரான போராட்டங்களைத் தொடர்ந்து நசுக்கி வந்தது. விவசாயிகளின் வீரியமிக்க போராட்டங்களோ ஒடுக்குமுறைகளையும் தாண்டித் தொடர்ந்தன. இந்தப் போராட்டங்களால் நெருக்கடிக்குள்ளான அரசு, சி.பொ.ம.வுக்கு நிலங்கள் கையகப்படுத்துவது குறித்து விவசாயிகளின் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்துவதாக அறிவித்தது. இது போன்ற வாக்கெடுப்பு நடத்தப்படுவது இந்தியாவிலேயே இதுதான் முதல் முறையாகும்.

இந்த வாக்கெடுப்புக்கான அறிவிப்பு வந்தவுடன், ரிலையன்ஸ் நிறுவனம் ஒவ்வொரு கிராமத்திலும் தனது கைக்கூலிகள் மூலம் விவசாயிகளை ஏய்க்கும் பிரச்சாரத்தைக் கட்ட

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்கு எதிராகப் பாட்டுப் பாடி பிரச்சாரத்தில் ஈடுபட்ட ராய்காட் மாவட்ட தாய்மார்கள்.





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 1**

நவம்பர் 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 94446 32561


ஈழம்:

# ஜெயாவின் "புலி" பூச்சாண்டி! கருணாநிதியின் கோழைத்தனம்!

"கடந்த ஒரு மாத காலமாக ஈழத் தமிழ் மக்களுக்கு எதிரான போர்த் தாக்கு தலைச் சிங்கள இனவெறி அரசு தீவிரப்படுத்தியிருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்பதைவிட, ஒட்டுமொத்த தமிழினத்தையும் வேரோடு அழிக்கும் கொடூரப் போரை நடத்தி வருகிறது, பாசிச சிங்கள அரசு. பல்குழல் பீரங்கிகளையும் அதி நவீனத் துப்பாக்கிகளையும் கொண்டும் விமானத் தாக்குதல் மூலமாகவும் கிளி நொச்சி பகுதியில் குண்டுமழை பொழிந்தும், கிளிநொச்சி நகரைத் தரைமட்டமாக்கி யும் இறுதித் தாக்குதலுக்கான மூர்க்கத்துடன் சிங்கள இனவெறி பிடித்த இராணுவம் களமிறங்கியிருக்கிறது.

குண்டு வீச்சுத் தாக்குதலால் பிணமாகிக் கிடக்கும் பள்ளி செல்லும் குழந்தைகள், இரத்தக் கறையுடன் வீதியில் இறைந்து கிடக்கும் புத்தகங்கள், குவியல் குவியலாகப் பிணங்கள், படுகாயமடைந்து சிகிச்சை பெற வசதியின்றித் தவிக்கும் பச்சிளம் குழந் தைகள், வீடிழந்து-படுகாயமடைந்து சொந்த மண்ணிலே அகதிகளாகிக் காடுகளில் ஒளிந்து வாழும் அவலத்தில் தமிழ் மக்கள், உணவோ மருத்துவமோ கிடைக்காமல் பட்டினியாலும் நோயினாலும் பரிதவிக்கும் தாய்மார்கள், குழந்தைகள் — என ஈழத்தமிழர்கள் மாளாத் துயரில் சிக்கித் தவிக்கின்றனர்.

இந்த அநீதியான போருக்கு எவ்வித சர்வதேசத் தடையுமில்லை என்று கொக்க ரிக்கிறார், இலங்கை அதிபர் ராஜபக்ஷே. இலங்கை, சிங்கள நாடு என்பதை ஏற்றுக் கொண்டுதான் சிறுபான்மையினரான தமிழர்கள் வாழ வேண்டும் என்று வெளிப்ப டையாக பாசிச இனவெறியைக் கக்குகிறார், இராணுவத் தளபதி பொன்சேகா. தமிழ்த் தலைவர்களில் துரோகிகளையும் பிழைப்புவாதிகளையும் அடையாளம் கண்டு அவர்களுக்குப் பதவிகள் கொடுத்து விலைக்கு வாங்கியுள்ளதோடு, புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேறி சிங்கள அரசின் கைக்கூலியாகச் செயல்படும் கர்னல் கருணாவை எம்.பி.யாக நியமனம் செய்திருக்கிறது, ராஜபக்ஷே அரசு.

சிங்கள அரசின் இந்தத் திமிருக்கும் இனவெறிக்கும் மிக முக்கியமான காரணம், இந்திய அரசு அதற்கு உறுதுணையாக நிற்கிறது என்பதுதான். புலிகள் தொடுத்த எதிர்த்தாக்குதலில் இந்திய இராணுவ அதிகாரிகள் காயப்பட்டிருப்பது அம்பலமாகி, இந்தியா நேரடியாக சிங்கள இராணுவத்துடன் இணைந்து போரில் ஈடுபட்டுள்ள உண்மை உலகுக்குத் தெரிந்தது. மொத்தம் 265 இந்திய இராணுவ அதிகாரிகள் போர்க்களத்தில் இருப்பதாக இலங்கைப் பத்திரிகைகளே செய்தி வெளியிட் டுள்ளன. இலங்கை இராணுவத்திற்கு நவீன ராடார்களையும் போர்த்தளவாடங்க ளையும் கொடுத்து உதவியது மட்டுமின்றி, அவற்றை இயக்குவதற்கான தொழில் நுட்ப வல்லுநர்களையும் இந்திய அரசு அனுப்பி வைத்திருக்கிறது. இதுதவிர, இலங்கை அரசுக்குக் கடனுதவியாக ரூ. 400 கோடியைக் கொடுத்துள்ளது.

இவை குறித்த குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்ட பின்னரும், வாயே திறக்காமல் மவுனம் சாதித்தது மன்மோகன் சிங் அரசு. தமிழகத்தில் பல்வேறு கட்சிகளும் அமைப்புகளும் இப்பிரச்சினையை எழுப்பிய பிறகும் கருணாநிதி, இது குறித்து வாய் திறக்கவில்லை. பஜாரி அரசியல் நடத்தும் பாசிச ஜெயலலிதா, மன்மோகன் சிங்கையும் கருணாநிதியையும் அம்பலப்படுத்தி அறிக்கை வெளியிட்ட பிறகுதான் வேறுவழியின்றி கருணாநிதி வாய் திறந்தார்.

மன்மோகன் சிங்குடன் தொலைபேசியில் உரையாடியதாகவும், ஈழத் தமிழர் துயரம் பற்றி அவர் பரிவுடன் கேட்டதாகவும் கூறிய கருணாநிதி, ஈழத் தமிழர் மீதான தாக்குதலைத் தடுத்து நிறுத்துமாறு இலட்சக்கணக்கில் தந்தி அனுப்பக் கோரி னார். இலங்கைத் தூதரை அழைத்துப் பேசவேண்டும், அரசியல் தீர்வு காண வலியு றுத்த வேண்டும் எனப் பொதுக் கூட்டம் நடத்திக் கோரிக்கை வைத்தார். மைய அரசு இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை கருணாநிதி வேடிக்கை பார்த்துக் கொண்டி ருந்ததாகச் சாடி, அவர் ஏன் பதவி விலகவில்லை என்று பாசிச ஜெயா அம்பலப்படுத் தியதும், அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி இன்னும் இரண்டு வாரங்களுக்குள் ஈழத் தமிழர் மீதான போர்த் தாக்குதலை மைய அரசு தடுத்து நிறுத்த முயற்சிக்கா விடில் தமிழக எம்.பி.க்கள் பதவி விலகுவார்கள் என்று மிரட்டல் நாடகமாடினார். அதேநேரத்தில் போர் தொடரும் என்று வெளிப்படையாக இலங்கை அரசு அறிவித்த

படிப்பகம்

www.padippakam.com

பிறகும், மைய அரசை நிர்பந்திக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மைய அரசுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லாத வகையில் மனித சங்கிலி போராட்டம் நடத்திய கருணாநிதி, மைய அரசைக் கவிழ்க்கும் நோக்கமில்லை; மைய அரசை அவசரப்பட்டு யாரும் விமர்சிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். பதவிக்காகவும் சொத்து-சுகங்களுக்காகவும் இதைவிடக் கேவலமான முதுகெலும்பற்ற புழுவாய் யாரும் நடந்து கொள்ள முடியாது என்பதை கருணாநிதியின் பேச்சும் செயலும் நிரூபித்தன.

இதற்கிடையே ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து இராமேசுவரத்தில் பேரணி-பொதுக்கூட்டம் நடத்திய திரைப் படத் துறையினர், புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக காங்கிரசு கழிசடை எம்.எல்.ஏ. ஞானசேகரன் உசுப்பி விட்டார். உடனே பாசிச ஜெயா, ''பொடா சட்டம் இல்லாததால்தான் இப்படி புலி ஆதரவு - பிரிவினைவாதம் பேசுகிறார்கள். நான் ஆட்சியிலிருந்தால் இத்தேசத் துரோகிகளைக் கைது செய்திருப்பேன்'' என்று பெருங்கூச்சல் போட, அதற்கு பக்கமேளம் வாசித்துக் கொண்டு துக்ளக் ''சோ'', சுப்ரமணிய சாமி, பா.ஜ.க., காங்கிரசு, இந்து நாளேடு எனப் பார்ப்பன-பாசிச கும்பல் பிரிவினைவாதப் பீதியூட்டி பேயாட்டம் போடத் தொடங்கின. புலிகளை ஆதரித்து தனித் தமிழ்நாடு கோரிப் பேசிய ம.தி.மு.க. தலைவர் வைகோவைத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யுமாறு காங்கிரசு கழிசடைகள் ஊளையிட்டன. ஈழ விடுதலையை ஆதரிப்பதையும், சிங்கள இனவெறி அரசை எதிர்ப்பதையும்கூடத் தேசவிரோதச் செயலாகச் சித்தரித்து, பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டி, 90-களில் நடந்தது போல, மீண்டும் ஜெயா தலைமையிலான பாசிச ஆட்சியை நிறுவும் நோக்கத்துடன் பார்ப்பன-பாசிசக் கும்பல்கள் ஓரணியில் திரண்டு புலி பூச்சாண்டி காட்டி பீதியூட்டி வருகின்றன.

அவ்வளவுதான்! தொடை நடுங்கிய கருணாநிதி உடனடியாக வைகோவையும் கண்ணப்பனையும் கைது செய்து சிறையிலடைத்தார். திரைப்பட இயக்குனர்களான அமீர், சீமான் ஆகியோரை ஏன் இன்னும் கைது செய்யவில்லை என்று பாசிச ஜெயா கூச்சலிட்டதும், அவர்களையும் கைது செய்து சிறையிலடைத்துள்ளார். இலங்கை அதிபர் ராஜபக்ஷேவின்

**ஈழத் தமிழருக்கு சிங்கள அரசு மட்டுமல்ல, இந்திய அரசும்தான் எதிரி என்பதைப் புரிந்து கொண்டு போராடாதவரை ஈழத்தின் கண்ணீருக்கு விடிவே இல்லை.**

ஆலோசகரும் சகோதரருமான பாசில் ராஜபக்ஷே, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்தித்துப் பேசிய பிறகு, இலங்கைக்கு இந்தியா 800 டன் நிவாரணப் பொருட்களை அனுப்புவது; ஈழத்தமிழர் பாதுகாப்புக்கு உத்தரவாதம்; அமைதியான முறையில் பேச்சு வார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது; மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரமளிக்கும் அரசியல் சட்டத்தை இலங்கை அரசு செயல்படுத்த வலியுறுத்தல் ஆகியவற்றைக் கொண்ட கூட்டறிக்கை இலங்கை-இந்திய அரசுகளின் சார்பில் வெளியிடப்பட்டு, பிரணாப் முகர்ஜியும் கருணாநிதியைச் சந்தித்தார். ''மத்திய அரசை வேதனைக்குள்ளாக்கும் சிக்கலை உருவாக்க மாட்டோம்; அனைத்துக் கட்சித் தலைவர்கள் பேசி முடிவு செய்வோம்'' என்று கூறி தமிழக எம்.பி.க்கள் பதவி விலக மாட்டார்கள் என்பதைச் சூசகமாக அறிவித்து விட்டார், கருணாநிதி. ராமன் பாலம் விவகாரத்தில் சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டு பின்வாங்கியதைப் போல, இப்போதும் பார்ப்பன-பாசிசக் கும்பலுக்கு அஞ்சிப் பம்மிப் பதுங்கிவிட்டார்.

இந்தக் கூட்டறிக்கை எவ்வளவு மோசடியானது என்பதற்கு கிளிநொச்சியில இன்னமும் இலங்கை அரசு நடத்தி வரும் போர்த்தாக்குதலே சாட்சியம் கூறப் போதுமானது. ''பயங்கரவாதப் புலிகளுக்கு எதிராக இராணுவத் தீர்வு; ஈழத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு'' என்பதே தமது அரசின் கொள்கை என்கிறார் அதிபர் ராஜபக்ஷே. இலங்கையில் போர்நிறுத்தம் செய்வது பற்றி இந்த அறிக்கையில் எதுவுமே இல்லை.

**சிங்கள இனவெறி பயங்கரவாதம்: சிங்கள இராணுவம் நடத்திய போர்த் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்க் குழந்தைகள்.**



இவ்வளவுக்குப் பின்னரும் ஈழ ஆதரவாளர்களில் ஒரு பிரிவினர் இந்திய அரசின் தயவில் ஈழ விடுதலையைச் சாதிக்க முடியும் என்று நம்புகின்றனர். ''சீனாவும் பாகிஸ்தானும் இலங்கைக்கு இராணுவ உதவிகள் செய்து இந்தியாவுக்கு எதிரான தளமாகப் பயன்படுத்த முயற்சிக்கின்றன. இதனால் இந்தியாவுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது. சிங்களனை நம்புவதைவிட ஈழத் தமிழனை நம்புவதுதான் இந்திய நலனுக்கு ஏற்றது. எனவே ஈழ விடுதலையை இந்தியா ஆதரிக்க வேண்டும்'' என்கிறார் பழ.நெடுமாறன். இந்த வாதம் சரியானதென்றால், நேபாளத்தில் மாவோயிஸ்டுகளுக்கு எதிராக இந்தியா


படிப்பகம்

www.padippakam.com



**பாம்பும் சாகாமல், தடியும் நோகாமல்..... ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணைபோகும் இந்திய அரசை எதிர்க்காமல், எவ்வித நிர்ப்பந்தமும் கொடுக்காமல் முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த அனைத்துக் கட்சி ஆலோசனை கூட்டம்.**

செய்த சதிகளும் நியாயமாகி விடும். ஏனென்றால், நேபாள பிற்போக்கு மன்னராட்சியை ஆதரிக்காவிட்டால், அவர் சீனா பக்கம் சாய்ந்து இந்தியாவுக்கு ஆபத்தாகி விடும் என்று கூறித்தான் நேபாள மன்னராட்சியை இந்திய அரசு முட்டுக் கொடுத்து ஆதரித்தது. எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தியா வில் காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநில மக்களின் சுயநிர் ணய உரிமைப் போரை துப்பாக்கி முனையில் ஒடுக்கிவரும் இந்திய அரசு, ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீ கரிக்கும் என்று நம்பி ஏமாற முடியுமா?

நெடுமாறன் கதைப்பதைப் போலின்றி, இந்திய ஆளும் வர்க்கங்களின் நோக்கமும் நலனும் வேறானதாக இருக்கிறது. தென்கிழக்காசிய நாடுகளின் ''ஏசியான்'' **(ASEAN)** ஐரோப் பிய நாடுகளின் ''ஐரோப்பிய ஒன்றியம்'' **(EU)** போலவே, தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பை **(SAARC)** பொருளா தார ஒன்றியமாக உருவாக்கவே இந்திய ஆளும் வர்க்கங்கள் விரும்புகின்றன. இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகள் வெளிநாடுகளில் மூலதனமிட்டுள்ள வகையில், அவர்க ளுக்கு இலங்கை முக்கிய பொருளாதாரமாக உள்ளது. ஆயுத விற்பனை உள்ளிட்டு பொருளாதார - வர்த்தக உறவிலும் முக் கிய இடத்தை வகிக்கிறது. தேயிலை எஸ்டேட்டுகள், கட்டுமா னத் துறை, இலகுரக மோட்டார் வாகனங்கள் முதலானவற் றில் ஏற்கெனவே காலூன்றியுள்ள இந்தியத் தரகுப் பெருமுத லாளிகள், தற்போது தொலைதொடர்புத் துறையிலும் இலங் கையில் மூலதனமிட்டுள்ளனர். இந்தியப் பெருங்கடலில் இராணுவப் போர்த் தந்திர முக்கியத்துவம் வாய்ந்த திரிகோ ணமலை, கொழும்பு ஆகிய துறைமுகங்களும் கடல்வழித் தடங்களும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. தெற் காசியக் கூட்டமைப்பில் பாகிஸ்தானை எதிர்கொள்ள, அதற்க டுத்த பெரிய நாடான இலங்கையுடனான நட்புறவு இந்தியா வுக்கு அவசியமாக உள்ளது. இந்திய 'அமைதிப்படை' இலங் கையை ஆக்கிரமித்த போது பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் இந்திய-இலங்கை உறவுகள் தற்காலிகமாகப் பாதிக்கப்பட் டதே தவிர, மற்றபடி நீண்ட காலமாக இலங்கை ஆளும் வர்க் கங்கள் இந்தியாவுடன் நட்புறவையும் அதன் வட்டார மேலா திக்கத்தையும் ஆதரித்தே வந்துள்ளன.

இன்றைய உலகமயச் சூழலில் ஐரோப்பிய ஒன்றிய நாடுக ளில் உள்ளதைப் போல, இந்தியா-இலங்கை இடையே உள்ள வரி, கடவுச்சீட்டு கட்டுப்பாடுகளை அகற்றி நெருங்கி வர இந் திய-இலங்கை அரசுகள் திட்டமிட்டுள்ளன. இதற்காக ஒப்பந் தம்கூடக் கொள்கையளவில் ஏற்கப்பட்டுள்ளது. அண்மை யில் இலங்கையில் நடைபெற்ற ''சார்க்' மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், தெற்காசிய நாடுகளிடையே ஒரே நாணயமு றையை உருவாக்க வேண்டும் என்று குறிப் பிட்டுள்ளார்.

இப்படி இலங்கை அரசின் பக்கம் இந் தியா நிற்பதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. ஆனால், ஈழ விடுதலையை ஆதரிப்பதற்கு ஒரு காரணமும் இல்லை. இலங்கை மீது மேலாதிக்கம் செலுத்தவும் மிரட்டிப் பணிய வைப்பதற்கும் பகடைக் காயாகப் பயன்படுத்துவதற்கு வேண்டுமா னால், ஈழப் பிரச்சினையை இந்திய அரசு ஆத ரிக்கலாம்: இதை நம்பி இந்திய அரசிடம் ஆத ரவு கோருவதும் பெறுவதும் அப்பட்டமான துரோகமாகும்.

தற்போது தொடுக்கப்பட்டு வரும் தாக்கு தலில் சிங்கள இராணுவம் வெற்றி பெற்றால், தமிழர்கள் இலங்கையின் இரண்டாந்தரக் குடிமக்கள் என்பது சிங்கள இனவெறியர்களால் உறுதி செய்யப்படும. தெற்காசியப் பிராந்தியத்தில் எல்லா விடுதலைப் போராட்டங்களையும் நசுக்கி அழிப்பது என்ற இந்திய அரசின் நோக்கமும் நிறைவே றும். தமிழினத்தின் நியாய உரிமைக்கு வாய்திறக்கக் கூட முடியாதபடி பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டிக் கருப்புச் சட்டங்களும், ஒடுக்குமுறையும் ஏவப்படும். எனவே, சிங்கள இனவெறித் தாக்குதலுக்கு எதிராகவும் ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் போரா டுவது மட்டுமின்றி, இந்தியாவின் மேலாதிக்கத்துக்கு எதிராக வும் போராட்டங்கள் கட்டியமைக்கப்பட வேண்டும். ஈழத் தமிழருக்கு சிங்கள அரசு மட்டுமல்ல, இந்திய அரசும்தான் எதிரி என்பதைப் புரிந்து கொண்டு போராடாதவரை ஈழத் தின் கண்ணீருக்கு விடிவே இல்லை. •

**இலங்கை**

***அரசியல் பிரச்சினைகளை அறிய உதவும் நூல்கள்***

- **இலங்கையின் இன-வர்க்க முரண்பாடுகள்** - குமாரி ஜெயவர்த்தனா
- **இலங்கை: யுத்தத்தின் பரிணாமமும் உலகமயமாக்கலின் படையெடுப்பும்** - பி. இரயாகரன்
  (மலையகத் தமிழர்களின் தனிச்சிறப்பான வரலாறு உட்பட)
- **ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை** - எஸ்.எம். கோபாலரத்தினம்
  (இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவரின் தொகுப்பு)
- **ஏகாதிபத்திய மேலாதிக்கத்தின்கீழ் இலங்கை** - பி. இரயாகரன்

**கிடைக்குமிடம்:**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை, சென்னை - 600 002.**
**தொலைபேசி : 044-28412367**



படிப்பகம்

www.padippakam.com

# “ஈழத் தமிழினப் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்!”

## —நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் தமிழகம் தழுவிய போராட்டங்கள்.

“ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்'', ''கொலைவெறி பிடித்த மன்மோகன் சிங்கே, உன் டாடாவும், அம்பானியும் கொள்ளையடிக்க எங்கள் ஈழத் தமிழர் சாக வேண்டுமா?'' - விண்ணதிரும் முழக்கங்களை எழுப்பி, செங்கொடிகளையும், கண்டன முழக்கத் தட்டிகளையும் ஏந்தியபடி கடந்த 8.10.08 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை அண்ணாசாலையை மறித்து, நந்தனம் இராணுவம் எஸ்டேட் அலுவலகத்தை முற்றுகையிட்டுக் கைதாயினர், ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தோழர்கள்.

ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக ஒரு இறுதித் தாக்குதலுக்குரிய மூர்க்கத்துடன் இனப்படுகொலையை நடத்திவரும் சிங்கள இனவெறி அரசுக்கு, இந்திய அரசு கூட்டாளியாகவே செயல்படுகிறது என்பதை நாடே அறிந்த போதும்;

கசாப்புக்காரனிடமே காருண்யம் கோரும் கதையாக, கொலைகாரன் மன்மோகனிடமே, இங்குள்ள ஓட்டுக் கட்சிகள் ‘கோரிக்கை’ வைத்துக் கொண்டிருந்த சூழலில், மக்களின் போராட்டங்கள் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு எதிராக நடத்தப்பட வேண்டுமென்பதை அறிவிக்கும் வகையில் அமைந்தது சென்னை நந்தனம் இராணுவம் எஸ்டேட் அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திய போராட்டம்.

சென்னையில் மட்டுமின்றி, ம.க.இ.க, பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., வி.வி.மு., பெ.வி.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகள் கடந்த 8.10.08 அன்று தமிழகம் தழுவிய அளவில் திருச்சி பாலக்கரையிலும்; கோவை செஞ்சிலுவைச் சங்கம் முன்பாகவும்; தஞ்சை இரயிலடி எதிரிலும்; ஓசூர் ராம்நகர், அண்ணாசாலை அருகிலும்; தருமபுரி ராஜகோபால் பூங்கா முன்பாகவும்; கடலூரில் உழவர் சந்தை அருகிலும் திரளான மக்கள் பங்கேற்புடன் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தின.



ஓசூரில்...



கடலூரில்...



தஞ்சையில்...

போலீசின் அனுமதி மறுப்பு மற்றும் மழை காரணமாகத் தடைபட்ட பகுதிகளில் பேருந்து, ரயில் மற்றும் தெருமுனைப் பிரச்சாரங்களை முன்னெடுத்து செல்கின்றன. இதன் தொடர்ச்சியாக கடந்த 17.10.08 அன்று துறையூர் பேருந்து நிலையம் எதிரிலும், கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் எதிரிலும் கண்டன ஆர்ப்பாட்டத்தையும்; குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் தெருமுனைக் கூட்டத்தையும் நடத்தின.

திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் அருகில் கடந்த 20.10.08 அன்று ''ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணை நிற்கும் இந்திய அரசை முறியடிப்போம்! பார்ப்பன இந்து மதவெறியைத் தூண்டி அதிகாரத்தைக் கைப்பற்றத் துடிக்கும் பார்ப்பன பாசிஸ்டுகளின் சதியை முறியடிப்போம்'' என்கிற முழக்கத்தின் கீழ் மாபெரும் பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இனப்படுகொலையின் சூத்திரதாரியான இந்திய அரசின் குரல் வளையைப் பிடிக்கும் விதமாக தோழர் துரை. சண்முகம் அவர்களும், பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., இந்து முன்னணி உள்ளிட்ட இப்பார்ப்பன பாசிஸ்டுகளுக்கு எதிராய் உழைக்கும் மக்கள் அணிதிரள வேண்டிய அவசியத்தை விளக்கும் வகையில் பேரா.பெரியார்தாசன் அவர்களும் இப்பொதுக்கூட்டத்தில் உரையாற்றினர்.

பெருந்திரளான மக்கள் மற்றும் ஜனநாயக சக்திகளது ஊக்கமான ஆதரவைக் கொண்டு தமிழகமெங்கும் இவ்வமைப்புகளின் பிரச்சார இயக்கங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

– பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

# கொத்தடிமைத்தனத்தைத் தட்டிக் கேட்டால் பொய்வழக்கு!

## கரூர் அரசு கலைக் கல்லூரி நிர்வாகத்தின் அடாவடித்தனங்களுக்கு எதிராக பு.மா.இ.மு. ஆர்ப்பாட்டம்.

கரூர் தான்தோன்றிமலையில் இயங்கிவரும் அரசு கலைக் கல்லூரியில் புவியியல் துறைத் தலைவராகப் பணியாற்றிவரும் பாண்டியம்மாள், மாணவர்களைத் தொடர்ந்து அவமானப்படுத்திப் பழிவாங்கும் ''ஆண்டையம்மாள்'' என்று பேர் பெற்றவர். மாணவர்களை வாடா, போடா என ஒருமையில் ஏசுவது, கிராமப்புற மாணவர்களின் உருவ தோற்றத்தைக் கூறி அவமானப்படுத்துவது, ரெக்கார்டு நோட்டில் கையெழுத்து வாங்கச் செல்லும் மாணவர்களை மணிக்கணக்கில் நிற்க வைத்து அலட்சியப்படுத்துவது முதலான வக்கிரக் குணங்களைக் கொண்ட அவர், பிறரை இழிவுபடுத்தி சுய இன்பம் காணும் ஒரு ''சாடிஸ்ட்''. கல்லூரியில் ஆய்வக வசதிகள் இல்லாத நிலையில், அதற்கான கட்டணம் தொடர்ந்து வசூல் செய்யப்படுவதைப் பற்றி துறைத் தலைவரான அவரிடம் முறையிட்ட மாணவர்களைச் செய்முறைத் தேர்வில் தோல்வியடைந்ததாக அறிவித்தும், ''நீங்க படிக்கிற படிப்புக்கு இது ஒரு கேடா?'' என்று ஏளனமாகப் பேசியும் அவமானப்படுத்தியுள்ளார். பாண்டியம்மாளின் திமிரைக் கண்டித்தும், ஆய்வகம் அமைக்கக் கோரியும் கல்லூரி முதல்வரிடம் மாணவர்கள் மனு கொடுத்து முறையிட்ட பின்னரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.




இத்தகைய அவமானங்களையும் மனித உரிமை மீறல்களையும் சகித்துக் கொள்ள முடியாத இக்கல்லூரி மாணவர்கள், இப்பகுதியில் இயங்கி வரும் பு.மா.இ.மு.வில் தங்களை இணைத்து அமைப்பாக்கிக் கொண்டு, கடந்த 18.8.08 அன்று வகுப்புகளைப் புறக்கணித்து ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர். மறுநாள் காலை வழக்கம்போல் கல்லூரிக்குச் சென்ற மாணவர்களை வாயிலிலேயே நிறுத்தி, முன்னணியில் செயல்பட்ட ஐந்து மாணவர்களை இடைநீக்கம் செய்துள்ளதாக அறிவித்து, கல்லூரி நிர்வாகம் மிரட்டியது. எந்த விசாரணையுமின்றி அறிவிக்கப்பட்ட இந்த உத்தரவை அதிகார முறைகேடு என்று சாடிய கல்லூரி மாணவர்கள், உள்ளிருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கல்லூரி முதல்வரும் பாண்டியம்மாளும் இவர்களுக்கு தூண்டுகோலாக விளங்கும் வீரையனும் ''டேய்! நீங்களெல்லாம் டிகிரி வாங்க முடியாது; நாங்க நினைச்சா உங்களையெல்லாம் பெயிலாக்கிடுவோம்'' என்று ஆத்திரத்தில் மிரட்டிப் பார்த்தனர். அரண்டு போன நிர்வாகம் போலீசை வைத்து அச்சுறுத்திப் பார்த்தது. ஆனால், இவற்றுக்கெல்லாம் அஞ்சாமல் உறுதியாக நின்று மாணவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்ததும் விழிபிதுங்கிய அரசு, ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிட்டது. அவரோ, இரு தரப்பினரும் சமரசமாகப் போகச் சொல்லி உபதேசித்து விட்டு தனது விசாரணை நாடகத்தை முடித்துக் கொண்டார்.

பின்னர், போலீசு தூண்டுதலின் பேரில் கல்லூரி முதல்வர் ராஜேந்திரன், பாண்டியம்மாள், வீரையன் ஆகியோர், மாணவர்களின் நியாயமான போராட்டத்தை வழிநடத்திய பு.மா.இ.மு. தோழர்கள் இருவர் மீது கொலை மிரட்டல் விடுத்ததாக பொய் வழக்கு போட்டுள்ளனர். மீண்டும் வழக்கம் போலவே, கல்லூரியில் இவர்களது அதிகாரத் திமிர்களைகட்டத் தொடங்கி விட்டது. இதுபற்றி பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் மாணவர்கள் முறையிடச் சென்றபோது, அவர் மனுவைக் கூடப் பார்க்காமல் மாணவர்களை ஏசி விரட்டியுள்ளார்.

மக்கள் வரிப்பணத்தில் ஊதியமாகத் தின்று கொழுக்கும் இத்தகைய அதிகார வர்க்கம், மக்களுக்குப் பொறுப்பாகவும் நியாயமாகவும் செயல்படாது. மாணவர் போராட்டங்களை ஒடுக்கவும், தமது அதிகார முறைகேடுகளை நியாயப்படுத்தவும் 'தன்னாட்சி' அதிகாரத்தை எல்லா கல்லூரிகளும் செயல்படுத்துகின்றன. ஒப்பீட்டளவில் குறைந்த கட்டணத்தில் கல்வியளித்து வந்த அரசுக் கல்லூரிகளை சுயநிதிக் கல்லூரிகளாக மாற்றும் தனியார்மய சதிகளும் வேகமாக நடந்து வருகின்றன.

இந்த உண்மைகளை உழைக்கும் மக்களிடம் துண்டுப் பிரசுரம் மூலம் பிரச்சாரம் செய்த பு.மா.இ.மு., அதன் தொடர்ச்சியாக, 26.9.08 அன்று கரூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக மாணவர்-இளைஞர்களை அணிதிரட்டிப் போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. கல்லூரியில் புவியியல் துறை ஆய்வகம் அமைக்கவும், மாணவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதை எதிர்த்தும், பு.மா.இ.மு. தோழர்கள் மீது போடப்பட்டுள்ள பொய் வழக்கைத் திரும்பப் பெறக் கோரியும் தோழமை அமைப்புகளின் பங்கேற்போடு நடந்த இந்த ஆர்ப்பாட்டம், அடுத்து வரப்போகும் மாணவர் போராட்டத்தை முன்னறிவிப்பதாக அமைந்தது.

**– பு.ஜ. செய்தியாளர், கரூர்.**

www.padippakam.com

# ஆர்.எஸ்.எஸ். - இன் சைவப்புலி வேடம் கலைந்தது

## மலேகான் நகரில் நடந்த ஆர்.டி.எக்ஸ்.குண்டு வெடிப்பு, ஆர்.எஸ்.எஸ். இன் சதி என்பது நிரூபணமாகியுள்ளது.

மகாராஷ்டிராவின் மலேகான் நகரிலுள்ள பிகூ சதுக்கத்தில் அமைந்துள்ள மசூதி அருகே கடந்த செப்டம்பர் 29-ஆம் நாளன்று ஆர்.டி.எக்ஸ். வகைப்பட்ட குண்டுவெடித்து 5 பேர் கொல்லப்பட்டனர்; 80 பேர் படுகாயமடைந்தனர். அதே நாளில் குஜராத்திலுள்ள பனாஸ்கந்தா மாவட்டத்தின் மோடசா நகரின் சுகாபஜாரில் குண்டு வெடித்து ஒரு சிறுவன் கொல்லப்பட்டான்; 10 பேர் படுகாயமடைந்தனர்.

மலேகான் நகரில் குண்டு வெடிப்பு நிகழ்ந்த இடத்தில் ஒரு வெள்ளி நிற மோட்டார் சைக்கிள் சிதிலமடைந்து கிடந்தது. இரண்டு மர்ம நபர்கள் ஒரு பையை அந்த மோட்டார் சைக்கிளில் வைத்து விட்டுச் சென்றனர் என்றும் அவர்கள் தான் பயங்கரவாதிகள் என்றும் போலீசார் தமது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டனர். ரம்ஜான் பண்டிகைக்கு இரு நாட்கள் முன்னதாக மசூதி அருகே இக்குண்டு வெடிப்பு நடந்ததால், முஸ்லீம்கள் ஆத்திரமடைந்து தங்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டி ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு, போலீசார் மீது கல்லெறிந்து தாக்கவும் செய்தனர்.

ஏற்கெனவே மலேகான் நகரில் 2006-ஆம் ஆண்டில் முஸ்லீம்கள் மீது இந்துவெறியர்கள் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியுள்ளதால், மீண்டும் அதுபோன்ற தாக்குதல்கள் நிகழாமலிருக்க சிறுபான்மை முஸ்லீம்கள் பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடனேயே வாழ்ந்து வருகின்றனர். கடந்த செப்டம்பர் 29 அன்று, மசூதி அருகே வெற்றிலை-பாக்கு கடையை நடத்தி வரும் அன்சாரி என்ற முதியவர், தனது கடை எதிரே அனாதையாக ஒரு மோட்டார் சைக்கிள் நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டு, அக்கம்பக்கக் கடைக்காரர்களிடம் விசாரித்துப் பார்த்து யாரும் அதற்கு உரிமை கொண்டாடாத நிலையில், சந்தேகத்திற்கிடமான அந்த மோட்டார் சைக்கிள் பற்றி போலீசாருக்குத் தொலைபேசியில் தகவல் கொடுத்தார். ஆனால் போலீசார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்து ஐந்து பேர் கோரமாகக் கொல்லப்பட்டனர். இக்குண்டு வெடிப்பில் அன்சாரியும் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பாகிஸ்தானின் உளவு நிறுவனமான ஐ.எஸ்.ஐ.யின் இந்திய கைக்கூலிகள் இக்குண்டுவெடிப்பை நடத்தியிருக்கலாம் என்று தாம் சந்தேகிப்பதாக போலீசார் வழக்கம்போலவே கதை பரப்பினர். பார்ப்பன தேசிய பத்திரிகைகளோ இதற்கு கண்ணும் காதும் வைத்து இந்திய முஜாகிதீன் குழு, ''சிமி'' எனப்படும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் முதலான பாக். ஆதரவு பயங்கரவாதிகளே இக்குண்டு வெடிப்பை நிகழ்த்தியுள்ளனர் என்றும், சிறுபான்மை முஸ்லிம்களை அச்சுறுத்தி தமது தலைமையை ஏற்கச் செய்வதற்காகவே இப்பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் திரைக்கதை எழுதின.

மலேகான் குண்டு வெடிப்பு பற்றி புலன் விசாரணை செய்துவந்த மகாராஷ்டிராவின் பயங்கரவாத எதிர்ப்பு அதிரடிப் படை போலீசார், நீண்ட முயற்சிக்குப் பிறகு, தற்போது மூன்று பேரைக் கைது செய்துள்ளனர். அவர்கள் இஸ்லாமிய பயங்கரவாதிகளோ, பாக். உளவாளிகளோ அல்ல. காவியுடை தரித்த பெண் சன்னியாசியும் அவரது கூட்டாளிகளான ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளுமான இந்து வெறியர்கள்தான் அவர்கள்!



மலேகான் நகரில் நடந்த குண்டுவெடிப்பில் சேதமடைந்த உடைமைகளை அப்புறப்படுத்தும் முசுலீம்கள்.

கைது செய்யப்பட்டுள்ள பெண் சன்னியாசியான சாத்வி பிரக்யாசிங், சிவ் நாராயண் கோபால்சிங் கல்சங்ரா, ஷ்யாம் பவார்லால் சாகு ஆகிய மூவரும் தான் மலேகான் குண்டுவெடிப்பை நிகழ்த்திய பயங்கரவாதிகள் என்பது போலீசாரின் ஆரம்ப விசாரணையிலேயே நிரூபணமாகியுள்ளது. குண்டு வைக்கப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் சாத்வி பிரக்யாவினுடையது. குண்டு வெடிப்புக்குப் பிறகு அம்மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் பெயரை மாற்ற அவர் இரகசியமாக முயற்சித்துள்ளார். அதன் பதிவு எண் போலியானது. என்ஜின், சேசிஸ் எண்கள் தெரியாத வண்ணம் அதை


படிப்பகம்

www.padippakam.com


பசுந்தோல் போர்த்திய புலி:
இந்து பயங்கரவாதி பிரக்யா சிங்.

அவர் சிதைத்துள்ளார்.

குண்டு வெடிப்புக்குப் பிறகு குஜராத்திலுள்ள சூரத் நகருக்குச் சென்ற இந்த பெண் சன்னியாசி, அங்கு பக்தி நெறிப்படி வாழும் சன்னியாசியாக நாடகமாடியுள்ளார். 38 வயதாகும் இப்பெண் துறவி, ''ஜெய் வந்தேமாதரம் ஜன் கல்யாண் சமிதி'' என்ற அமைப்பை நடத்தி வருவதாகக் காட்டிக் கொண்டு இரகசியமாகப் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட மற்ற இருவரும் இந்திய இராணுவத்தில் ''மேஜர்'' பதவி வகித்து, ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ அதிகாரிகள். இவர்கள் இந்துவெறி பயங்கரவாத ஆர்.எஸ்.எஸ்.-இன் முன்னாள் இராணுவத்தினர் அணியைச் சேர்ந்தவர்கள். ஆர்.டி.எக்ஸ் வகை குண்டு தயாரிப்பதிலும் தொலைக்கட்டுப்பாட்டு தொழில்நுட்பத்தின் மூலம் குண்டுகளை வெடிக்கச் செய்வதிலும் இவர்கள் தேர்ச்சி பெற்றவர்கள்.

மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த இம்மூவரும் கூட்டுச் சேர்ந்து ''ராஷ்டிரிய ஜக்ரான் மன்ச்'' என்ற இந்துத்துவ அமைப்பை நிறுவிச் செயல்படுவதாகக் காட்டிக் கொண்டு, நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். இரகசிய வலைப்பின்னலைக் கொண்டு இயங்கிவந்த இப்பயங்கரவாதிகளின் கூட்டாளிகள் பற்றியும் இவர்களுக்கும் ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களுக்கும் உள்ள உறவைப் பற்றியும் மகாராஷ்டிரா பயங்கர எதிர்ப்பு அதிரடிப் படை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மலேகான் குண்டுவெடிப்பை நிகழ்த்திய இந்துவெறி பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டதும், பா.ஜ.க. தலைவர் வெங்கையா நாயுடு, ''இவர்களுக்கும் இந்துத்துவ அமைப்புகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை; அப்படி ஏதேனும் தொடர்பிருப்பதாக விசாரணைக்குப் பின் நிரூபணமானால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்'' என்று யோக்கிய சிகாமணியைப் போல பேசுகிறார். பா.ஜ.க விலிருந்து பிரிந்து சென்று பாரதீய ஜனசக்தி கட்சியைத் தொடங்கியுள்ள உமாபாரதியோ, ''சன்னியாசியாகிய சாத்வி பிரக்யா வன்முறையில் ஈடுபட எந்த அடிப்படையும் இல்லை; இது, இந்துத்துவ சக்திகளை இழிவுபடுத்தி அவமானப்படுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள சதி'' என்று குதிக்கிறார்.

மலேகான் குண்டு வெடிப்பு மட்டுமல்ல; நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடக்கும் குண்டு வெடிப்புகள் பலவற்றை இந்துவெறி பயங்கரவாதிகளே திட்டமிட்டு நடத்தியுள்ளனர் என்ற உண்மைகள் அடுத்தடுத்து அம்பலமாகி வருகின்றன.

ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங் தள் குண்டர்கள் கையிலே தடியும் திரிசூலமும் வைத்திருப்பதால் மட்டும் அவர்களைப் பயங்கரவாதிகள் என்று கருதுவதாக சிலர் நினைக்கலாம். இந்த ஆயுதங்கள் தனிநபர்களை தாக்கிப் படுகொலை செய்வதற்குத்தான் பயன்படும். ஆனால், இந்துவெறி பயங்கரவாதிகள், பெருந்திரளான கொலைவெறியாட்டம் போடவும் பயங்கரவாதப் படுகொலைகளை நிகழ்த்தவும் கையெறி குண்டுகள், நேரங் குறித்து வெடிக்கும் குண்டுகள் முதல் குண்டு வீசித் தாக்கும் ஏவுகணைகள் வரை அதிநவீன ஆயுதங்களைத் தயாரிக்கவும் கையாளவும் கற்றுத் தரும் பயிற்சி முகாம்களை இரகசியமாக நடத்துமளவுக்கு முன்னேறியுள்ளார்கள்.

இந்துத்துவ அமைப்புகளோடு தொடர்பில்லாததைப் போல காட்டிக் கொள்ள பல்வேறு பினாமி பெயர்களில் புதிய அமைப்புகளை நிறுவி, இரகசிய வலைப்பின்னலைக் கட்டியமைத்து இயக்கி வருகின்றனர். மும்பை, குஜராத்தில் நடந்த இந்துவெறி பயங்கரவாதப் படுகொலைகளிலும், அதன்பிறகு நடந்த பல்வேறு குண்டு வெடிப்புகளிலும் இவை நிரூபணமாகியுள்ளன.

இந்து பார்ப்பன பயங்கரவாதிகள் ''தெகல்கா'' வார ஏட்டுக்கு தமது சொந்த வார்த்தைகளில் அளித்த வாக்குமூலங்களே இவற்றுக்குச் சாட்சியமாக உள்ளன. மேலும், மகாராஷ்டிரா மாநிலத்தின் நாண்டெட் நகரில் ஏப்ரல் 2006 மற்றும் ஆகஸ்ட் 2007-இல் நடந்த குண்டு வெடிப்புகளை பஜ்ரங் தள் குண்டர்களே நிகழ்த்தியுள்ளனர் என்பதை அம்மாநிலப் போலீசே ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது.

இவ்வாண்டு ஆகஸ்டு 24-ஆம் தேதியன்று கான்பூரிலுள்ள ஒரு தனியார் விடுதியில் இரகசியமாக குண்டு தயாரித்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில் இருவர் மாண்டு போயினர். கான்பூர் நகர பஜ்ரங் தள் தலைவனான புபிந்தர் சிங்கும் அவனது கூட்டாளியுமே அவர்கள். இது பற்றி போலீசார் விசாரணை செய்து கொண்டிருந்த போது, விசாரணையைத் திசைதிருப்பும் நோக்கத்தோடு இந்துவெறியர்கள் ஒரு பீதியைக் கிளப்பினர்.

அதன்படி, தமிழக முதல்வர் கருணாநிதியின் தலையை வெட்டச் சொன்ன விசுவ இந்து பரிசத்தின் தலைவனும் முன்னாள் பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினருமான ராம் விலாஸ் வேதாந்தி, தனக்கு ''சிமி'' மற்றும் அல்-கய்தா பயங்கரவாதிகளிடமிருந்து தொலைபேசி மூலம் கொலைமிரட்டல் வந்துள்ளதாக அறிவித்தான். போலீசார் அத்தொலைபேசி எங்கிருந்து வந்துள்ளது என்பதை தொலைபேசித் துறையின் உதவியுடன் கண்டறிந்தனர். கத்ரா நகர பஜ்ரங் தள் தலைவன் ரமேஷ் திவாரி மற்றும் அவனது கூட்டாளிகளே இக்கொலை மிரட்டலை இஸ்லாமிய அமைப்புகளின் பெயரில் விடுத்துள்ளனர் என்பதைக் கண்டறிந்து அவர்களைக் கைது செய்துள்ளனர். கான்பூர் குண்டு வெடிப்பு விசாரணையைத் திசை திருப்பவும், வேதாந்திக்குக் கூடுதல் பாதுகாப்பு தரவும் இப்படிச் செய்யுமாறு மேலிடத் தலைவர்கள் தமக்குக் கட்டளையிட்டதாக அவர்கள் விசாரணையில் உண்மையைக் கக்கியுள்ளனர்.

பயங்கரவாதிகளால் நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்டுள்ளது என்று ஓயாமல் அலறுகிறது இந்திய அரசு. ஆம்; பேராபத்து ஏற்பட்டுள்ளது! அதுவும் காவியுடை தரித்த இந்துவெறி பயங்கரவாதிகளால் ஏற்பட்டுள்ளது என்பதையே அடுத்தடுத்து அம்பலமாகும் உண்மைகள் உணர்த்துகின்றன.

● இரணியன்

www.padippakam.com

### வீடும் போச்சு... வேலையும் போச்சு!

# அந்தோ பரிதாபம் அமெரிக்க மக்களின் வாழ்க்கை!

**வீடு ஜப்தி செய்யப்படுவதை எதிர்ப்போரில் சிலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; சிலர் போலீசால் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள்.**

"இந்த பூமியிலிருக்கும் ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் சுதந்திரம் எனும் உயரிய பரிசினை கடவுள் அளித்திருக்கிறார் என்று நாம் நம்புகிறோம். நமது மக்களின் தொழில் முனைவுத் திறனைத் தூண்டிவிடும் வல்லமையினை சந்தை கொண்டிருக்கிறது என்றும் நம்புகிறோம். ஆகையால் சுதந்திரத்திற்கு தியாகம் தேவைப்படுகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம்."

— ஜார்ஜ் டபிள்யூ. புஷ்.

அமெரிக்க மக்கள் படும் துன்பத்திற்கு அமெரிக்க அதிபர் புஷ் அளித்துள்ள வியாக்கியானம் இது. இதுவரை அமெரிக்கா கண்டிராத கோமாளி அதிபரான புஷ்ஷின் வாயிலிருந்து உதிர்ந்திருக்கும் சுதந்திரம், சந்தை, தியாகம் மூன்றும் அமெரிக்காவின் முரண்படும் சமூக இயக்கத்தினை தெளிவாக விளக்குகின்றன. சந்தையில் சூதாடுவதற்கு முதலாளிகளுக்கு சுதந்திரம்; அந்தச் சூதாட்டச் சுமையினை ஏற்பதற்காக வாழ்க்கையைத் தியாகம் செய்யவேண்டியது மக்களின் கடமை! சந்தையின் சுதந்திரத்தில் கொள்ளை இலாபம் அள்ள முயன்று திவாலான அமெரிக்க நிறுவனங்களைக் காப்பாற்ற அமெரிக்க அரசு 35 இலட்சம் கோடி ரூபாயை அள்ளி வழங்கியிருக்கிறது. ஆனால் இந்தப் பேரழிவில் சிக்கிய மக்களைக் காப்பாற்றுவதற்கு நிவாரணம் எதுவுமில்லை.

2001-இல் உலக வர்த்தக மையத் தாக்குதலுக்குப் பிறகு மீண்டுமொருமுறை பயங்கரவாதிகளின் தாக்குதல் நிகழலாம் என்றே அமெரிக்க அரசு மக்களை அச்சுறுத்தி வந்தது. அதற்கான புதிய சட்டங்கள், கெடுபிடிகள், சோதனைகள், கைதுகள், விசாரணைகள் எல்லாம் ஜரூராக நடந்து வந்தன. ஆனால் எதிர்பார்த்த தாக்குதல் பயங்கரவாதிகளிடமிருந்து வரவில்லை. நெருக்கடி என்ற பெயரில் தப்பித்துக்கொள்ளும் முதலாளித்துவ பயங்கரவாதத்திடமிருந்தே அந்த சுனாமி தாக்குதல் வந்தது.

கடந்த சில ஆண்டுகளாகவே இந்த சுனாமியின் அறிகுறிகள் அமெரிக்கப் பொருளாதாரத்தில் தெரிய ஆரம்பித்தன. ஐந்து சதவீதமாக இருந்த வேலையின்மையின் சதவீதம் பின்பு ஆறைத் தொட்டு தற்போது எட்டை நோக்கி அதிகரித்து வருகிறது. செப்டம்பர் மாதம் மட்டும் 1,59,000 அமெரிக்கர்கள் வேலையிழந்துள்ளனர். ரியல் எஸ்டேட், கட்டிடம் கட்டுதல் தொடர்பான தொழில்கள், சேவைத்துறை போன்றவை இந்த வேலையிழப்பில் பங்களித்துள்ளன. பல அமெரிக்க நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் கடந்த சில ஆண்டுகளாகவே ஆட்குறைப்புக்கான ஆண்டிலக்கை அமல்படுத்தி வந்தன.

இப்படி வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்கள் வேலையிழந்துள்ளனர். 28% அமெரிக்க மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்வதாகப் புள்ளி விவரங்கள் சொல்கின்றன. இதன்படி ஏறக்குறைய ஒரு கோடி குடும்பங்கள் வறியவர்களாக வாழ்வைக் கழிக்கின்றனர். பொதுவாக எல்லா அமெரிக்கர்களும் தங்கள் மாத வருமானத்தில் மூன்றிலொரு பங்கினை வீட்டு வாடகைக்கோ அல்லது கடனுக்கு வாங்கிய வீட்டிற்கு மாதத் தவணை கட்டுவதற்கோ செலவழிக்கின்றனர். இது போக நாற்பது சதவீதம்







தற்கொலை செய்து கொண்ட கார்த்திக் ராஜாராம் (இடது மேல்படம்); அவரால் சுட்டுக் கொல்லப் பட்ட அவரது மனைவி சுபஸ்ரீ (வலது மேல்படம்) மற்றும் மகன் கிருஷ்ணா.

மருத்துவ காப்பீட்டிற்குச் செலவழிக்கின்றனர். அமெரிக்காவில் காப்பீடு இல்லாமல் இருந்தால் சிகிச்சையின்றி சாக வேண்டியதுதான்.

அமெரிக்க மக்களின் வருமானம் அத்தனையும் முன் கூட்டியே திட்டமிட்ட இலக்குகளில் முதலாளிகளின் கைகளுக்கு போய்ச் சேருகிறது. சராசரியாகப் பத்து கடன் அட்டை வைத்திருக்கும் ஒவ்வொரு அமெரிக்கனும் தனது நிகழ்கால வருமானத்தை மட்டுமல்ல எதிர்கால வருமானத்தையும் முன் கூட்டியே செலவழிப்பதற்கு பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறான். கடனுக்கு மேல் கடன், கடனை வைத்துக் கடன், வீடு, வாகனங்களை வைத்துக் கடன், பத்திரங்களை வைத்துக் கடன், எதிர்காலத்தில் வீட்டின் மதிப்பு உயரும் என்ற மதிப்பீட்டில் பெறப்படும் கடன், மொத்தத்தில் முழு அமெரிக்காவுமே கடனில்தான் உயிர் வாழ்கிறது. ஒரு வயது வந்த அமெரிக்க மாணவன் உயர் கல்வி முடிப்பதற்குக்கூட குறைந்த பட்சம்

www.padippakam.com

பத்து இலட்சம் ரூபாய் கடன் தேவைப்படும்.

தற்போதைய திவாலுக்குக் காரணமாகக் கூறப்படும் வீட்டுக் கடன்தான் அமெரிக்க மக்களின் முக்கியமான வாழ்க்கைப் பிரச்சினையாக சமீப ஆண்டுகளில் மாறியிருக்கிறது. சொந்த வீடு வேண்டும் என்ற கனவு தவிர்க்க முடியாத போதையாக ஏற்றப்பட்டு, சராசரி அமெரிக்க நடுத்தர வர்க்கம் இந்த வலையில் சிக்கிக் கொள்கிறது. கடன் கட்ட முடியாமல் போகும் போது வீட்டை, கடன் கொடுத்த அடமான வங்கியிடம் ஒப்படைக்க வேண்டும். நமது ஊரில் சேட்டிடம் வாகனக்கடன் வாங்கி தவணை கட்டமுடியாத போது வண்டியை சேட்டு எடுத்துக் கொள்வது போலத்தான் இதுவும். இப்படி வீட்டை இழந்தவர்கள் ஐம்பது இலட்சம் பேர் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. 500 வீட்டுக்கொரு வீடு இந்த ஜப்தி நடவடிக்கையில் வருகிறது என்றால் இதன் சமூக பரிமாணத்தைப் புரிந்து கொள்ள முடியும். செங்கலும், மரமும், சிமெண்ட்டும் கொண்ட இந்த அஃறிணைப் பொருளுக்காக பல அமெரிக்கர்கள் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

இப்படி வாழ்வின் எல்லாத்துறைகளிலும், நேரங்களிலும் மக்களின் பணத்தை ஒட்டு மொத்தமாய் சுரண்டும் அளவுக்கு முதலாளிகளின் இலாப வெறி தலைவிரித்தாடுகிறது. தற்போதைய திவாலில் கூட மக்கள் அபரிமிதமாய் வட்டி கட்டிய பணம் ஒரு பிரிவு முதலாளிகளின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. அதை வைத்துச் சூதாடிய நிறுவனங்களுள் சில தோற்றதால் திவாலாகியிருக்கின்றன. ஆனால், இந்தச் சூதாட்டத்தில் எத்தனை மக்கள் வாழ்விழந்து, வீடிழந்து, திவாலாகியிருக்கின்றனர் என்ற விவரங்களைப் பற்றிப் பேசுவதற்கு மட்டும் யாரும் தயாராயில்லை. மற்ற சமூகங்களில் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகள் அந்த சமூகத்தின் மனநிலையைத் தீர்மானிக்கும் போது அமெரிக்க சமூகத்தில் மட்டும் பணமும், பணம் சார்ந்த பிரச்சினைகள் மட்டுமே மக்களின் உளவியல் சீர்கேடுகளை வடிவமைக்கின்றன. காதலும், விவாகரத்தும், உறவும், பிரிவும், மகிழ்ச்சியும், வேதனையும், கொலைகளும், தற்கொலைகளும் அங்கே பணத்தால் தீர்மானிக்கப்படுகின்றன.

•••

அமெரிக்க நிறுவனங்கள் திவாலான மறுநாளே அதற்கான முதல் பலி லாஸ் ஏஞ்செல்ஸ் நகரில் நடந்தேறியது. அக்டோபர் 4, அமெரிக்க வாழ் இந்தியரான 45 வயது கார்த்திக் ராஜாராம் தனது மனைவி, மாமியார், மூன்று மகன்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார். சோனி நிறுவனத்திலும், பின்னர் சொந்தமாகத் தொழில் தொடங்கியும் அதன் பிறகு பல மாதங்கள் வேலையின்றியும் இருந்த ராஜாராம் தனது சேமிப்பு அனைத்தையும் பங்குச் சந்தையில் முதலீடு செய்தார். பல நிறுவனங்கள் திவாலாகி பங்குச் சந்தை தலைகுப்புற கவிழ்ந்ததும் ராஜாராமும் நிலை குலைந்து போனார். மரணத்துக்கு முந்தைய அவரது கடிதங்களில் தான் உடைந்து போனதாகவும், உருகும் பொருளாதாரத்தில் தான் ஏராளமான நிதியை இழந்துபோனதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

திவாலாகிய அமெரிக்காவில் மக்களின் இந்தத் தற்கொலைகள் பல தீவிர வெளிப்பாடுகளில் ஒன்றுதானே தவிர, பல மாதங்களாகவே குறிப்பாக வீடு ஜப்தி செய்யும் நடவடிக்கைகளை எதிர்த்து கலவரங்கள், கைதுகள், கொலைகள், தற்கொலைகள் நடந்திருக்கின்றன. வலுக்கட்டாயமாக வீட்டிலிருந்து வெளியேற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் பல வன்முறையுடன்தான் நடந்திருக்கின்றன. இவற்றில் பல ஊடகங்களில் செய்தியாக வருவதில்லை என்பதிலிருந்து அமெரிக்க சமூகம் பல மாதங்களாகவே இந்த பொருளாதார பயங்கரவாதத்துடன்தான் வாழ்ந்திருக்கிறது என்பதை அறிய முடியும்.

பிப்ரவரி மாதத்தில் கொலார்டோ பகுதியில் ஒரு வீட்டு உரிமையாளர் தனது வீட்டை காலிசெய்யும் நோட்டீசைக் கண்டு தனது மணிக்கட்டை அறுத்துக் கொண்டு தற்கொலைக்கு முயன்றார். நோட்டீசை ஒட்டச் சென்ற போலீசால் அவர் காப்பாற்றப்பட்டாலும், அவரால் வீட்டைக் காப்பாற்ற முடியவில்லை. மார்ச் மாதம் புளோரிடா மாநிலத்தின் ஓசாலா பகுதியைச் சேர்ந்த ரோலண்ட் கோர் தனது வீட்டை அடமான வங்கிக்கு ஒப்படைக்கும் நிர்ப்பந்தத்தால் மனமுடைந்து மனைவியையும், வீட்டு நாயையும் கொன்று விட்டு வீட்டுக்கும் தீ வைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.




புதிய வீடுகள் ஏலத்திற்கு வருவதை அறிவிக்கும் விளம்பரம்.

ஏப்ரல் மாதத்தில் புளோரிடாவின் மரியன் கவுன்டி பகுதியில் ஒரு வீட்டைக் காலி செய்வதற்கு அறிவிப்புடன் சென்ற ரோபர்ட்டை அந்த வீட்டில் வசித்து வந்த பிராங்க் கொனார்டு துப்பாக்கியைக் காட்டி "எனது சொத்தை விட்டு நீ அகலுவதற்கு இரண்டு விநாடிகள் தருகிறேன், இல்லையென்றால் நீ மருத்துவமனைக்கு செல்ல வேண்டியிருக்கும்" என்று மிரட்டினார். பின்னர் பிராங்க் போலீசால் கைது செய்யப்பட்டார். ஜூன் மாதம் 3-ஆம் தேதி நியூ ஆர்லியன்ஸ் பகுதியில் காட்ரீனா தற்காலிக வசிப்பிடத்தில் வசித்து வந்த மின் ஷெவ்வை வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு அதிர

www.padippakam.com

டிப்படை வந்து கண்ணீர் புகைக் குண்டு வீசிப் பல மணிநேர நடவடிக்கைக்குப் பிறகு அவர் துப்பாக்கி வைத்திருந்தார் என்பதற்காக சுட்டுக் கொன்றது. ஏதோ அமெரிக்கப் படை ஈராக்கிலும், ஆப்கானிலும்தான் மக்களைச் சுட்டுக் கொல்கிறது என்பதல்ல, சொந்தநாட்டு மக்களிடமும் அப்படித்தான் நடந்து கொள்கிறது. இதே தேதியில் ஒரேகான் மாநிலத்தின் முல்ட்னோமா கவுன்டி பகுதியில் வசித்து வந்த ஒருவரை வீட்டிலிருந்து வெளியேற்றுவதற்குச் சென்ற போலீசின் முன் அந்த நபர் துப்பாக்கியால் தற்கொலை செய்து கொள்ள முயன்றார். அவரது துப்பாக்கியை பிடுங்கிய போலீசு பின்னர் அவரைக் கைது செய்தது.

இந்த ஆண்டு முழுவதும் வீட்டைக் காலி செய்யும் இந்தப் பயங்கரவாதமே அமெரிக்க மக்களின் மனச்சிதைவுக்கு காரணமாக இருந்தன என்று பல புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கலிபோர்னியாவில் இந்த மன அழுத்தங்களுக்கு தொலைபேசி மூலம் ஆறுதல் அளிக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஒன்று இத்தகைய பணநெருக்கடிகளால் வரும் அழைப்புகள் 200 சதம் அதிகரித்திருப்பதாகக் கூறுகிறது. சான்பிரான்சிஸ்கோ நகரின் மருத்துவமனை ஒன்றின் உளவியல் மருத்துவர் கடந்த ஆகஸ்டு மாதம் மட்டும் பொருளாதார நெருக்கடிகளினால் மனநிம்மதியிழந்து வரும் நோயாளிகளின் எண்ணிக்கை 69% அதிகரித்திருப்பதாகக் கூறுகிறார். இவற்றிலிருந்து முழு அமெரிக்காவுமே இந்தக் கொதி நிலையில் உழன்று கொண்டிருப்பதை அறிய முடியும். அமெரிக்காவை அச்சுறுத்துவதற்கு பின்லாடன் தேவையில்லை என்பதையும் இந்தச் செய்திகள் ஆணித்தரமாகக் கூறுகின்றன.



கொலராடோ மாநில அரசு டென்வர் நகரில் நடத்திய வேலைவாய்ப்பு முகாமை மொய்க்கும் அமெரிக்கர்கள்.

வீட்டை இழக்கப் போகும் இந்த ஜப்தி நடவடிக்கைகளுக்காக மனச்சிதைவு அடையும் எல்லோரும் மருத்துவமனைக்கு வருவதில்லை. ஸ்கேர்மென்டோ கவுன்டியின் காவல்துறை ஷெரிஃபின் உதவியாளர் மார்க் ஹெபெக்கர் பத்திரிகை ஒன்றில் பேட்டியளித்தபோது இந்த ஆண்டு வீடு காலி செய்யும் நடவடிக்கைகளுக்குச் செல்லும் போது இரண்டு உரிமையாளர்கள் தற்கொலை செய்திருக்கிறார்கள் என்று தெரிவித்திருக்கிறார். இவரது சக அலுவலர் ஒருவரின் அனுபவத்தில் தற்கொலை செய்து கொண்ட ஒருவர் தனது உடல் வீட்டில் எந்த இடத்தில் இருக்கிறது என்ற குறிப்பை எழுதியிருந்தாராம் என்றால் இதன் கொடூரத்தை யாரும் உணர முடியும். ஹாலிவுட் படங்களில் விதவிதமான வேற்றுக் கிரக "ஏலியன்ஸ்"கள் அமெரிக்கர்களை அச்சுறுத்துவதாக கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், எந்தத் திரைப்படமும் மக்களை உண்மையில் வதைக்கும் இந்த முதலாளித்துவ ஏலியன்ஸைப் பற்றி பேசுவதில்லை.

ஜூலை மாதம் புளோரிடாவின் மிடில்பர்க் பகுதியில் ஜார்ஜ் என்பவரின் வீட்டிற்கு ஜப்தி அறிவிப்பை ஒட்டச் சென்றது போலீசு. இதைக் கண்டவுடன் வீட்டின் தலைவர் ஜார்ஜும் அவரது மனைவி போனி மேக்னமும் கதவை அடைத்துக் கொண்டு நோட்டீசை வாங்க மறுத்தார்கள். எப்படியாவது வீட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்த ஜார்ஜ் தனது கையில் துப்பாக்கியிருப்பதாக மிரட்டினார். உண்மையில் அவரது கையில் ஆயுதமில்லை என்பதை அறிந்த போலீசு தங்களை மிரட்டியதாக அவரைக் கைது செய்தது. அந்த தம்பதியினரின் மகள் ராபின் சொல்கிறார், "இது எங்கள் வீடு, இது மட்டும்தான் எங்கள் வீடு, எனது தந்தை இராணுவத்தில் பணியாற்றியவர், தற்போது உடல்நலமில்லாதவர், அவரைப் போய் உதைத்து வீட்டை விட்டு வெளியேற்றுவேன் என்று சொன்னால் அது நியாயமா?"

சந்தைக்கு இலாபம் மட்டும்தான் நியாயம், மற்றெதுவும் அநியாயம்தான். ஈராக்கிலும், ஆப்கானிலும் போரில் ஈடுபட்டுத் திரும்பும் அமெரிக்க வீரர்கள் இரண்டு விதமான மனச்சிதைவை அடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஒன்று போரினால் வரும் விரக்தியும் இரண்டாவது பொருளாதாரப் பிரச்சினையால் வரும் நிம்மதியின்மையும் காரணமாம். குறைந்த பட்ச அமெரிக்க வாழ்க்கைத் தரத்திற்குத் தேவையான சம்பளம் கூட இல்லாமல் பல அமெரிக்க முன்னாள் இராணுவ வீரர்கள் கடனில் சிக்கி வீடுகளை இழந்து நிர்க்கதியாக வாழ்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தனது ஆக்கிரமிப்புக்கு உதவும் இராணுவ வீரர்களைக்கூட அமெரிக்கா கைவிடுகிறது என்றால், மற்ற மக்களின் கதி என்ன என்பதைக் கேள்வியின்றி புரிந்து கொள்ளலாம்.

புளோரிடாவின் பெனெல்லா பார்க்கில் வாழும் 44 வயது டல்லாஸ் கார்ட்டர் மனைவியைப் பிரிந்து குழந்தைகளோடு வாழும் ஒரு ஊனமுற்றவராவார். பார்த்துக் கொண்டிருந்த வேலையை இழந்து, கடனில் மூழ்கி இறுதியில் தனது வீட்டையும் பறிகொடுக்கும் நிலையில் போலீசுக்கு தொலைபேசி மூலம் பேசிய கார்ட்டர் தான் துப்பாக்கி வைத்திருப்பதாகவும், மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். உடன் விரைந்த போலீசு அவரைச் சரணடையுமாறு கேட்டது. பூட்டிய வீட்டில் துப்பாக்கியுடன் இருந்த கார்ட்டர் அதை மறுத்ததால் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டார். நமது ஊரில் போராடும் மக்களை போலீசு சுட்டுக் கொல்கிறது. இதுவே அமெரிக்காவில் தனித்தனி வீடுகளில் நடக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

கடனை அடைக்க முடியாத அமெரிக்க மக்கள் இப்படித்தான் தமது உயிரைக் கொடுத்து விடுதலை அடைகின்றனர். அமெரிக்க வாழ்க்கையில் ஒரு தனிமனிதனது விடுதலை இப்படித்தான் இருக்க முடியும் போல.

ஜூலை 23-ஆம் தேதி மாசூசெட்ஸ் மாநிலத்தின் டான்டன் பகுதியைச் சேர்ந்த காரலீன் என்ற பெண்மணியின் வீடு ஜப்தி செய்யப்பட்டு ஏலமிட இருக்கிறது. அதற்கு ஒன்றரை மணிநேரத்திற்கு முன்னர் அந்த அடமான நிறுவனத்திற்கு பேக்ஸ் அனுப்பிய காரலீன் அதில் தனது வீடு ஜப்தி செய்யப்படும் முன்பு தான் இறந்து விடுவேனென குறிப்பிடுகிறார். தனது மறைவுக்கு பிறகு தனது கணவன் மற்றும் மகனுடன் அந்த நிறுவனம் இணக்கமான உறவு வைக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடுகிறார் காரலீன். காரணம் அவர் மறைவுக்குப் பின் கிடைக்கும் ஆயுள் காப்பீட்டுப் பணத்தை வைத்து தனது கணவன் வீட்டை மீட்கலாம் என்றும் அந்தக் கடிதத்தில் நெஞ்சை உருக்கும் வண்ணம் எழுதும் காரலீன் சொன்னபடி துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொள்கிறார். அந்தப் பெண்மணியின் கணவரான ஜான் ''எங்களது நிதி விவகாரத்தை எனது மனைவிதான் கவனித்து வந்தாள், வீடு ஜப்தி செய்யப்படப்போவது கூட எனக்குத் தெரியாது, அதற்கான எந்த அடையாளத்தையும் அவள் காட்டிக் கொண்டதில்லை'' என்று கதறி அழுகிறார். இரக்கமற்ற முதலாளித்து சமூகத்தின் முன் ஒரு பேதைப் பெண் வேறு எப்படிப் போராடியிருக்கமுடியும்? வீட்டிற்கு விலையாக தனது உயிரைக் கொடுத்த காரலீன் அமெரிக்காவின் விதிவிலக்கல்ல, இப்படித்தான் பலர் தங்களது கடனுக்கு வழி தேடுகிறார்கள்.

மிச்சிகனின் பே சிட்டியில் வாழும் 56 வயது டேவிட்டும் அவரது மனைவி ஷெரானும் வீட்டை இழந்து தாங்கள் திவாலானவர்கள் என்பதற்காக மனு செய்திருக்கிறார்கள். அந்த மனுவில் அவர்கள் முறைப்படிச் செய்யவேண்டிய நடைமுறைகளை செய்யவில்லை என்பதால் அவர்களது கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. இதனால் மனமுடைந்த டேவிட் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு மன்னிப்பு கடிதத்தை எழுதிவிட்டு தனது மனைவியை சமையல் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு, வீட்டிற்கு தீவைத்து எரித்த பிறகு மனைவியின் அருகில் தனது கழுத்தை அறுத்து தற்கொலை செய்துகொள்கிறார். தங்களைத் திவாலானவர்கள் என்று அறிவித்துக் கொண்டதால் அமெரிக்க நிறுவனங்கள் அடைந்த ஆதாயங்களுக்கு மத்தியில் தன்னை திவாலானவன் என்று அறிவிக்க முடியாத அமெரிக்க குடிமகனின் கோரமான முடிவு இது.

மின்னசோட்டாவின் ரோஸ்விலி பகுதியில் வாழும் சில்வியா சிஃபர்மேன் எனும் பெண்மணி இரண்டு சீனப்பெண் குழந்தைகளை தத்து எடுத்துவளர்க்கிறார். அவர்களுக்கு இப்போது வயது 11. தனது மகள்களின் வளர்ச்சியில் பூரிப்படையும் அந்தத் தாய் அதை இணையத்தில் அவரது வலைப்பூவில் பதிவு செய்கிறார். ஆனால் அமெரிக்காவில் எல்லோரையும் தாக்கிய அந்தச் சுனாமியில் தனது வேலையை இழந்து கடனில் மூழ்கிய சில்வியா தான் பாசமாக வளர்த்த இருமகள்களையும் வேறுவழியின்றி கத்தியால் குத்துகிறார். ஒருமகள் ஆபத்திலிருந்து தப்பித்துவிட மற்றொரு மகள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் இருக்க சித்த பிரமையடைந்த சில்வியா போலீசு காவலில் இருக்கிறார். இனிமேல் தனது மகள்கள் வாழ்வதற்குத் தேவையான எவற்றையும் அளிக்கமுடியாது என்று பரிதவித்த ஒரு தாயின் கதையிது.

லாஸ் ஏஞ்செல்சில் கார்த்திக் ராஜாராம் தனது குடும்பத்தையும் தன்னையும் சுட்டுக் கொன்ற சம்பவத்திற்கு ஒருநாள் முன்னால் அடி போல்க் எனும் 90 வயது மூதாட்டி ஜப்தி செய்யப்பட்ட தனது வீட்டிலிருந்து தன்னை தூக்கி எறிவதை எப்படி நிறுத்துவது என்று யோசித்தார். அவருக்கு இருந்த ஒரே வழி துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொள்வதுதான். ஆனாலும் முதுமை காரணமாக சரியாக சுடமுடியாததால் காயமடைந்த அந்தப் பெண்மணி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நாடு முழுவதும் இச்சம்பவம் ஊடகங்களால் பேசப்பட்டதால் இந்த வீட்டை அடமானத்திற்கு எடுத்திருந்த பென்னி மா நிறுவனம் 'பெரிய மனதுடன்' அந்த வீட்டை அந்த மூதாட்டிக்கே திரும்ப ஒப்படைத்து விட்டது. பலவருடங்களாக வாழ்ந்த வீட்டை விட்டு ஒரு 90 வயது மூதாட்டி தூக்கி எறியப்பட இருக்கிறாள் என்றால் அமெரிக்க சமூகத்தின் இரக்கத்தை என்னவென்று அழைப்பது?

•••

**வே**லையின்மையும், கடனும், வீட்டை இழப்பதும் அமெரிக்க சமூகத்தைக் கரையான் போல அரித்து வருகின்றன. மற்ற துன்பங்களையெல்லாம் வேறு வழியின்றி சகித்துக் கொள்ளும் அமெரிக்க மக்கள் வீட்டை விட்டுத் துரத்தப்படுவதை மட்டும் பாரதூரமாக நிவாரணமற்ற வலியாக உணருகிறார்கள். இந்தக் கதைகள் அமெரிக்க வாழ்க்கையின் குறுக்குவெட்டுச் சித்திரம் மட்டுமே. மேலும் அமெரிக்க ஊடகங்களால்கூட பேசப்படாத கதைகளும் கூட. ஒவ்வொரு நாளும் வீட்டை விட்டு அப்புறப்படுத்தும் இந்த அநீதியை எதிர்த்துக் கொலைகளும் தற்கொலைகளும் சடங்காய் நடந்து வருகின்றன. பல இடங்களில் மக்கள் சிறு அமைப்புகளாக அணிதிரண்டு இந்த ஜப்தி நடவடிக்கையை தடுக்க நினைத்தாலும் அவை வெற்றிபெறவில்லை. முதலாளிகளின் உரிமையை நிலை நாட்ட வரும் போலீசு அவர்களைக் கைது செய்து சொத்துடைமையின் அதிகாரத்தை நிலை நாட்டுகிறது.

உலகமயமாக்கத்தால் விவசாயம் சீர்குலைந்து வாங்கிய கடனைக் கட்டமுடியாமல் இந்திய விவசாயிகள் பூச்சி மருந்து குடித்து தற்கொலை செய்கிறார்கள். வாங்கிய கடனைக் கட்ட முடியவில்லை என்ற மான உணர்ச்சியுடன் வாழும் இந்த விவசாயிகளின் பண்பு அமெரிக்க ஏழைகளுக்கும் இருக்கிறது. அங்கே துப்பாக்கிகள் மலிவாகக் கிடைப்பதால் பூச்சி மருந்துக்கு தேவையில்லை. அப்படித்தான் பலரது வாழ்வை வெடிமருந்துகள் தீர்த்து வைக்கின்றன. வீட்டின் மேல் பெற்ற கடனை அடைத்தும், அடைக்கமுடியாத போது வீட்டை விட்டு வெளியேறி அல்லது தனது உயிரைக் கொடுத்தாவது ஆயுள் காப்பீடு மூலம் வாங்கிய கடனை கட்ட நினைக்கும் இந்த மக்களின் நாட்டில்தான் முதலாளிகளின் சூதாட்ட நட்டத்திற்கு அமெரிக்க அரசு அள்ளிக் கொடுக்கிறது. நெஞ்சை உருக்கும் இந்தக் கதைகளை கேள்விப் படும்போது அமெரிக்கா சொர்க்கபுரி அல்ல என்பது எல்லோருக்கும் புரிய வரும். ஏழை நாடுகளை சுரண்டிக்கொழுக்கும் அமெரிக்க முதலாளிகள் சொந்த நாட்டு மக்களையும் விட்டு வைப்பதில்லை என்பதிலிருந்து உலகமயக் கொள்கை என்பது மூன்றாம் உலக நாடுகளை மட்டுமல்ல அமெரிக்காவையும் அரித்துத் தின்னும் விஷ ஜந்து என்பதை ஏற்றுக் கொள்வதில் இன்னும் சந்தேகம் இருக்கிறதா?

• இளநம்பி

# ஊரை அடித்து உலையில் போடும் கூட்டுக் களவாணிகள்

**அமெரிக்க முதலாளிகள் அடித்த வீட்டுக் கடன் கொள்ளையில், அமெரிக்க அரசு ஜாடிக்கேத்த மூடியாய்ச் செயல்பட்டுள்ளது.**

நேற்று வரை, புகழ் பெற்ற அமெரிக்க நிதி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளாக (C.E.O.) அறியப்பட்டவர்கள், இன்று அமெரிக்க மக்களால் கொள்ளைக்காரர்களாகக் காறி உமிழப்படுகிறார்கள். ''வீடிழந்து, கடனாளியாகித் தெருவில் நிற்கும் மக்களைக் கைதூக்கி விடு; இந்தக் கொள்ளைக் கும்பலைச் சிறையில் தள்ளு'' என்ற முழக்கங்கள் அமெரிக்காவில் திரும்பிய பக்கமெல்லாம் எதிரொலிக்கின்றன.

செத்துப் போன பங்குச்சந்தை சூதாட்டப் பேர்வழி அர்சத் மேத்தாதான் இந்தியாவின் நிதி மந்திரி; இன்னொரு சூதாட்டப் பேர்வழியான கேதான் பாரேக்தான் ரிசர்வ் வங்கியின் கவர்னர்; தமிழக மக்களின் சேமிப்பையெல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடிப் போன ''பிளேடு'' கம்பெனி அதிபர்கள்தான் நிதி ஆலோசகர்கள் - இப்படிப்பட்ட நிலைமையைக் கற்பனை செய்து பார்ப்பது கூட நமக்கு அச்சமூட்டுவதாக இருக்கும். ஆனால், அமெரிக்காவிலோ அர்சத் மேத்தாக்களுக்கெல்லாம் அப்பனான நிதிச் சந்தை சூதாடிகள்தான் - நாகரிகமாகச் சொல்வதென்றால் நிதி நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரிகளாக இருந்தவர்கள்தான் அந்நாட்டின் நிதியமைச்சராக, நிதித்துறை ஆலோசகர்களாகப் பதவி ஏற்கிறார்கள். இந்தச் சூதாடிகள் கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவையே சூதாட்ட விடுதியாக மாற்றி விட்டதோடு, பல்வேறு நாடுகளையும் இச்சூதாட்டத்தில் இழுத்துப் போட்டு விட்டார்கள் என்பதும்தான் இந்த ''நெருக்கடி'' உணர்த்தும் உண்மை.

இதற்கு அடுத்த ஆண்டு, நிதிச் சந்தையில் நடைபெறும் சூதாட்டங்களுள் ஒன்றான ''டெரிவேட்டிவ்'' (பங்குகள் மற்றும் உற்பத்திப் பொருட்கள் மீது நடைபெறும் சூதாட்டத்தின் மீது நடக்கும் சூதாட்டம்) மற்றும் வாராக் கடன்களைக் கைமாற்றிக் கொண்டே போகும் சூதாட்ட வர்த்தகம் ஆகிய இரண்டும், பங்கு பரிமாற்றக் கழகத்தின் கண்காணிப்பில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன.

அமெரிக்க முதலீட்டு வங்கிகள், தாங்கள் செய்யும் முதலீடுகள் நட்டமடைந்தால், அதனை ஈடு செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை முன்னிருப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற விதி இருந்து வந்தது. 2004-ஆம் ஆண்டில், இந்த விதி நீக்கப்பட்டு, முதலீட்டு வங்கிகள் இருப்பு வைத்துக் கொள்ளத் தேவையில்லை என்ற சலுகை நடைமுறைக்கு வந்தது. 2004-ஆம் ஆண்டு கோல்டுமேன் சாக்ஸ் என்ற முதலீட்டு வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த ஹென்றி ஜெ.பால்சன்தான் - இவர்தான் இப்பொழுது அமெரிக்க அரசின் நிதியமைச்சர் - இச்சலுகையை வாங்கிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

''சப்-பிரைம் லோன்'' சூதாட்டம் ஊதிப் பெருத்ததற்கும் இந்த மூன்று சலுகைகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. அதேசமயம், இச்சலுகைகள் நடைமுறையில் இல்லாத காலத்தில், அமெரிக்க நிதிச் சந்தை கட்டுப்பாடோடு, நாணயமாக நடந்து கொண்டதாகக் கற்பனை செய்து கொள்ளக் கூடாது.

### அமெரிக்க ஜனநாயகம்: சூதாடிகளின் ஏஜெண்ட்

1930-ஆம் ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரம் இந்த நெருக்கடியைப் போன்றதொரு வீழ்ச்சியைச் சந்தித்தபொழுது, கிளாஸ்-ஸ்டீகல் சட்டம் உருவாக்கப்பட்டு, வர்த்தக வங்கிகளும், முதலீட்டு வங்கிகளும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டன. 1930-க்கு முன்பு வங்கிகளே பங்குச் சந்தை தரகு நிறுவனங்களையும் நடத்தி வந்ததால், வர்த்தக வங்கிகள் பொதுமக்களிடமிருந்து பெறும் சேமிப்புகளைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு இச்சட்டம் உருவாக்கப்பட்டு, பொதுமக்களின் சேமிப்புகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் காப்பீடு நிறுவனமும் அமைக்கப்பட்டது. இச்சட்டம், 1999-ஆம் ஆண்டு பில் கிளிண்டன் அதிபராக இருந்த சமயத்தில் விலக்கிக் கொள்ளப்பட்டது.

''வங்கிகளை அல்ல, மக்களைக் கைதூக்கி விடு'' எனக் கோரி, அமெரிக்க ஏழைகள் நியூயார்க் நகரின் டைம்ஸ் சதுக்கத்தில் நடத்திய ஆர்ப்பாட்ட பேரணி.







www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

குறிப்பாக, இக்கட்டுப்பாடுகள் அனைத்தும் நடைமுறையில் இருந்த சமயத்தில்தான் ''லாங்-டெர்ம் கேப்பிடல் மேனேஜ்மெண்ட்'' என்ற முதலீட்டு நிறுவனமும், என்ரானும் குப்புறக் கவிழ்ந்தன. நியாயமாகப் பார்த்தால், இந்த நிறுவனங்கள் திவாலான பிறகு, கட்டுப்பாடும், கண்காணிப்பும் கடுமையாக இருந்திருக்க வேண்டும்; ஆனால், நடந்ததோ அதற்கு நேர் எதிரானது.




''முதலாளித்துவம் வீழ்ந்து விட்டது'' என அறிவிக்கும் பதாகையைத் தூக்கிப் பிடித்து ஆர்ப்பாட்டம் நடத்தும் அமெரிக்கத் தொழிலாளி.

அமெரிக்காவில் வங்கிகளின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் ரிசர்வ் வங்கி (Federal Reserve) அமெரிக்க அரசின் கட்டுப்பாட்டில் இயங்கவில்லை. வங்கி முதலாளிகளின் சங்கம்தான், அதற்குத் தலையாக இருந்து இயக்கி வருகிறது. கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் ''எல்லாம் நானே'' என உரைத்தது போல, அமெரிக்காவில் பங்குச் சந்தை சூதாடியே வங்கி முதலாளியாக இருக்கிறார்; அவரே போலீசாக (கண்காணிப்பாளராக) இருக்கிறார். அவரே நீதிபதியாகவும் (திவாலான பொருளாதாரத்தை மீட்கும் பொறுப்பு) இருக்கிறார்.

அமெரிக்க அரசு, சூதாடிகளின் மீது இருந்த அற்பமான கண்காணிப்புகளை விலக்கிக் கொண்டதோடு, சூதாட்டம் சூடாக நடைபெறுவதற்குத் தேவையான பணத்தையும் வாரிக் கொடுத்தது. அமெரிக்க பெடரல் வங்கியின் தலைவராக இருந்த ஆலன் கிரீன்ஸ்பான் அமெரிக்க அரசின் கருவூலத்தில் இருந்து வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான வட்டியை ஒரு சதவீதமாகக் குறைத்ததன் மூலம் டாலர் புழக்கத்தைத் தாராளமாக்கினார்.

இதேபொழுதில், அமெரிக்கப் பங்குச் சந்தை வாரியத்தின் வாராக் கடன்களைக் கண்காணிக்கும் பிரிவில் ஊழியர்களின் எண்ணிக்கை 100-இல் இருந்து ஒன்றாகக் குறைக்கப்பட்டது; ஊழல் தடுப்புப் பிரிவில் இருந்து 146 ஊழியர்கள் வெளியேற்றப்பட்டனர். சூதாடிகளுக்கு வழங்கப்பட்ட இச்சலுகைகளை நியாயப்படுத்துவதற்காக, ''அனைவருக்கும் வீடு'' என்ற கவர்ச்சி முழக்கம் அமெரிக்க மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டது. ஒரு பக்கம் பணத்தோடு சூதாடிகள்; இன்னொருபுறம் கடன் வாங்கி செலவு செய்யும் நாகரீகத்துக்கு ஆட்பட்டுப் போன மக்கள் - பஞ்சும் நெருப்பும் பற்றிக் கொண்ட பின்னணி இதுதான்.

**பேய் அரசாண்டால்...**

இந்த ''நெருக்கடி''யின் இரண்டாவது அத்தியாயம் - நிதி ஆதிக்கக் கும்பலைக் கைதூக்கி விடும் படலம், முதல் அத்தியாயத்தைவிட மிகவும் சுவையானது. மிரட்டல், கூட இருந்தே குழி பறித்தல், கழுத்தறுப்புப் போட்டியில் ஒரு நிறுவனம் இன்னொன்றை விழுங்குதல், அரசு தூக்கியெறிந்த எலும்புத் துண்டைக் கவ்விக் கொள்ள நாய்ச் சண்டை போடுதல் - என்ற முதலாளித்துவத்தின் நவரச 'நற்குணங்களையும்' இதில் காண முடிந்தது.

''சப்-பிரைம் லோன்'' சூதாட்டம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த சமயத்தில்தான் - 2006-இல் ஹென்றி ஜெ.பால்சன் என்பவர் அமெரிக்காவின் நிதி மந்திரியாக (Treasury Secretary) நியமிக்கப்பட்டார். அமெரிக்காவின் முன்னாள் அதிபர் நிக்சனின் காலத்தில் நடந்த ''வாட்டர் கேட்'' ஊழலின் முக்கியப் பங்காளியாக இருந்து தண்டிக்கப்பெற்ற ஜான் எர்லிச்மேன் என்ற அதிகாரியின் கீழ் நிர்வாகத்தின் நெளிவு சுளிவுகளைக் கற்றுக் கொண்டவர்தான் நிதி மந்திரி பால்சன். 1974-இல் கோல்டுமேன் சாக்ஸ் என்ற முதலீட்டு வங்கியில் நுழைந்த பால்சன், 1998-இல் ஒரு அதிரடிக் கவிழ்ப்பின் மூலம், அந்நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பதவியைக் கைப்பற்றினார். ஏறத்தாழ 53 கோடி அமெரிக்க டாலர்கள் பெறுமான கோல்டன் சாக்ஸ் நிறுவனப் பங்குகள் பால்சனிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ''முதலீடு செய்வதில் துணிந்து சவால்களைச் சந்திக்கக் கூடியவர்'' என முதலாளித்துவப் பத்திரிகைகள் பால்சனைப் புகழ்ந்து தள்ளுகின்றன. சுருக்கமாகச் சொன்னால், நிதி மந்திரி பால்சன் கைதேர்ந்த சூதாடி.


பால்சன், தனது அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு இந்த நெருக்கடியில் இருந்து கோல்டுமேன் சாக்ஸையும், அந் நிறுவனத்தில் இருந்த தனது முதலீட்டையும் பாதுகாத்துக் கொண்டதோடு, கோல்டுமேன் சாக்ஸுக்கு எதிரான முதலீட்டு வங்கிகளை ஒழித்தும் கட்டினார். லேமேன் பிரதர்ஸ் என்ற முதலீட்டு வங்கி திவாலாகவும்; ஜே.பி.மார்கன்சேஸ், பியர் ஸ்டெர்ன்ஸ் நிறுவனத்தையும்; பாங்க் ஆஃப் அமெரிக்கா, மெரில் லிஞ்ச் நிறுவனத்தைக் கையகப்படுத்தவும் அனுமதித்த பால்சன், இதன் மூலம் கோல்டுமேன் சாக்ஸை அமெரிக்காவின் மிகப் பெரிய முதலீட்டு வங்கிகளுள் ஒன்றாக மாற்றினார். இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு அமெரிக்க அரசின் ஆதரவோடு பல நிறுவனங்களை விழுங்கிய பாங்க் ஆப் அமெரிக்கா, ஜே.பி.மார்கன் சேஸ், சிட்டி குரூப் ஆகிய மூன்று வங்கிகளும், அமெரிக்காவின் மொத்த வங்கி சேமிப்பில் மூன்றில் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டுள்ளன. நெருக்கடிக்கு முன்பாக 21.4 சதவீதமாக இருந்த இம்மூன்று வங்கிகளின் சேமிப்பு, இன்று 30 சதவீதத்தை நெருங்கி விட்டது.

வங்கி முதலாளிகளைக் கைது செய்ய வேண்டும் என அமெரிக்க மக்கள் நடுத்தெருவில் இறங்கிப் போராடிக் கொண்டிருந்த பொழுது, அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ்ஷும், நிதி மந்திரி பால்சனும் அம்முதலாளிகளைக் கரையேற்ற 70,000 கோடி அமெரிக்க டாலர்களை அவர்களுக்கு மானியமாக வாரிக் கொடுக்கும் திட்டத்தைத் தீட்டிக் கொண்டிருந்தார்கள். அமெரிக்க நாடாளுமன்றம், மக்களின் போராட்டத்தால் இந்த மானியத்திற்கு ஒப்புதல் கொடுக்கத் தயங்கிய பொழுது, நிதி மந்திரி பால்சன், ''பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நிலைக்கு எங்களைத் தள்ளாதீர்கள்'' என்ற தொனியில் மிரட்டியிருக்கிறார். பால்சன் மிரட்டலாகச் சொன்னதை, வங்கி முதலாளிகள் பங்குச் சந்தையைக் கவிழ்த்துச் செய்து காட்டினார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்காவின் குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் ''வால் ஸ்ட்ரீட்'' சூதாடிகள் வீசி எறியும் எலும்புத் துண்டுக்குக் காத்துக் கிடக்கும் நாய்கள் என்பதால், தங்களின் முனகலைக் குறைத்துக் கொண்டு, சூதாடிகளுக்கு மானியம் வழங்கும் இத்திட்டத்திற்கு ஒப்புக் கொண்டு, அதற்காகத் தனிச் சட்டத்தையும் உருவாக்கினார்கள்.



கூட்டுக் களவாணிகள்:
அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் *(மேலே)*;
அமெரிக்க அரசின் நிதியமைச்சர்
ஹென்றி ஜெ.பால்சன் *(நடுவில்)*
மற்றும் அமெரிக்காவின் பெடரல்
ரிசர்வ் வங்கியின் முன்னாள் தலைவர்
ஆலன் கிரீன்ஸ்பான்.

இந்தச் சட்டம், ''மதிப்பிழந்து கிடக்கும் சொத்துக்களை, எந்த வங்கியிடமிருந்தும், என்ன விலை கொடுத்தும் வாங்குவதற்கான அதிகாரத்தை'' நிதி மந்திரி பால்சனுக்கு அளிக்கிறது. மேலும், ''பொருளாதாரச் சரிவைத் தடுக்கும் நோக்கங் கொண்ட'' பால்சனின் இந்த முடிவுகளை, எந்தவொரு நீதிமன்றமோ, அரசின் வேறெந்தப் பிரிவோ கேள்வி கேட்கவோ, அதனை மறுபரிசீலனை செய்யவோ உரிமை கிடையாது என்ற உள்விதியும் இச் சட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தை ''பொருளாதாரப் பொடா'' எனலாம். பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்திய அதிகாரிகளைத் தண்டிக்க முடியாது என்பது போல, இந்த மானியத் திட்டத்தை பால்சன் உள்நோக்கத்தோடு தவறாகப் பயன்படுத்தியிருந்தாலும், அவரை எதிர்காலத்தில் கூடத் தண்டித்துவிட முடியாது. ஊழலுக்கு, இதைவிட அதிகபட்ச சட்டபூர்வ பதுகாப்பை ஏற்படுத்தித் தந்துவிட முடியாது.

இந்த 70,000 கோடி டாலர் பெறுமான மானியத்தை பங்கு போட்டுக் கொள்வதில் அமெரிக்க வங்கிகளுக்கிடையே நாய் சண்டையே நடந்து வருகிறது. நிதிமந்திரி பால்சன், தான் பங்குதாரராக உள்ள கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனம் மற்றவர்களை விட முந்திக் கொள்ள வேண்டும் என்ற விதத்தில் காய்களை நகர்த்தி வருகிறார். இப்பொருளாதாரச் சரிவைத் தடுத்து நிறுத்துவதற்காக, நிதி அமைச்சகத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய துறைக்கு நீல் கஷ்காரி என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நிதி மந்திரி பால்சன், கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனத்தில் தலைமை நிர்வாக அதிகாரியாகக் குப்பை கொட்டிக் கொண்டிருந்தபொழுது, அந்நிறுவனத்தின் துணைத் தலைவராக இருந்து, பால்சனின் கையாளாகச் செயல்பட்டவர்தான் நீல் கஷ்காரி.

அமெரிக்க வங்கிகளிடம் அடமானமாகக் கிடக்கும் சொத்துக்களை மதிப்பீடு செய்வதற்காக நிதி அமைச்சகத்தில் உருவாக்கப்பட்டுள்ள துறைக்கு வில்லியம் கிராஸ் என்பவர் நியமிக்கப்படலாம் என்ற வதந்தி அடிபடுகிறது. வில்லியம் கிராஸ், பால்சனின் நெருங்கிய நண்பர் மட்டுமல்ல, திவாலாகிப் போன ஃபான்னி மே, ஃபிரட்டி மாக் என்ற இரு அடமான நிறுவனங்களை அமெரிக்க அரசு தேசியமயமாக்கிய பொழுது, அதன் மூலம் 1,700 கோடி அமெரிக்க டாலர்களை இலாபமாகச் சுருட்டிக் கொண்டத் திருட்டுப் பேர்வழி என்பதும் குறிப்பிடத் தக்கது.

**நிதி நிறுவன அதிபர்களின் ஒட்டுண்ணித்தனம்**

லேமேன் பிரதர்ஸ், மெரில் லிஞ்ச், பியர் ஸ்டெர்ன்ஸ் உள்ளிட்டுப் பல நிதி நிறுவனங்களும், வங்கிகளும் திவாலாகிப் போனதால், அந்நிறுவனங்களை நடத்தி வந்த முதலாளிகளும், உயர் அதிகாரிகளும் போண்டியாகிப் போனார்கள் எனக் கருத முடியாது. இச்சூதாடிகள் எரிகிற வீட்டில் இருந்து பிடுங்குவதில் கில்லாடிகள் என்பதால், நிதி நிறுவனங்கள் திவால் நிலையை நோக்கி நகர நகர, இவர்களின் சம்பளமும் போனசும் எகிறிக் கொண்டே போயின.

உலகெங்கிலும் 60,000 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு கடனை வாங்கிப் போட்டுத் திவாலாகி விட்ட லேமேன் பிரதர்ஸின் தலைமை நிர்வாக அதிகாரியான ரிச்சர்ட் ஃபல்ட், கடந்த எட்டாண்டுகளில் எடுத்துக் கொண்ட சம்பளம் மட்டும் 48 கோடி அமெரிக்க டாலர்கள்.

மெரில் லிஞ்ச் நிறுவனம் திவாலாகிக் கொண்டிருந்த சமயத்தில், அதன் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த ஜான் தாய்ன், கடந்த எட்டு-ஒன்பது மாதங்களுக்குள் எடுத்துக் கொண்ட சம்பளம் 85 கோடி அமெரிக்க டாலர்கள்.

இந்நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் மட்டும்தான் கொழுத்த சம்பளம் பெற்றார்கள் என்பதில்லை. நெல்லுக்குப் பாயும் நீர் புல்லுக்கும் புசிவதைப் போல, அமெரிக்காவின் மிக முக்கியமான ஐந்து நிதி நிறுவனங்களைச் (அதில் மூன்று திவாலாகி விட்டன) சேர்ந்த 1,85,000 ஊழியர்களுக்கு 2007-இல் மட்டும் சம்பளம் மற்றும் போனசாகச் சேர்த்து 6,600 கோடி அமெரிக்க டாலர்கள் கொட்டப்பட்டுள்ளது.

இத்தலைமை நிர்வாக அதிகாரிகள் உருவாக்கி நடத்திய சூதாட்டம்தான் இந்தப் பொருளாதார நெருக்கடியைத் தோற்றுவித்திருக்கிறது. எனினும், இக்கிரிமில் குற்றத்திற்காக எந்தவொரு தலைமை நிர்வாக அதிகாரி மீதும் வழக்குத் தொடரப்படவில்லை; இதைவிடக் கேவலமானது, அவர்கள் தங்கள் பதவியில் இருந்து விலகக்கூட நிர்பந்திக்கப்படவில்லை என்பதுதான்.

என்ரான் திவாலானதற்கு நிர்வாகத்தின் மோசடித்தனங்கள்தான் காரணம் எனக் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் தலைமை நிர்வாக அதிகாரிகள் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர். இப்படிப்பட்ட தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, தற்பொழுது அமெரிக்க நிறுவனங்களில் சேரும் சூதாடிகள், ''தங்களின் நிர்வாகத்தின் கீழ் ஏதேனும்



படிப்பகம்

www.padippakam.com




பாதகம் ஏற்பட்டால், அதற்குத் தங்களைப் பொறுப்பேற்கச் சொல்லக் கூடாது'' என ஒப்பந்தம் போட்டுக் கொண்டு சேரு கிறார்கள்.

### அமெரிக்க நாடாளுமன்றத்தின் வேசித்தனம்

இக்கேடுகெட்ட கிரிமினல்தனத்தையும், ஒட்டுண்ணித்த னமான சுரண்டலையும் தட்டிக் கேட்க வக்கற்ற அமெரிக்க நாடாளுமன்றம், இந்த ஊதாரித்தனத்தைக் குறைத்துக் கொள் ளுமாறு இச்சமூக விரோதக் கும்பலிடம் கெஞ்சுகிறது. உலகத் தில் எந்த மூலையில் ''தவறு'' நடந்தாலும் சண்டப் பிரசண்டம் செய்யும் பெரியண்ணன் ஜார்ஜ் புஷ், இச்சூதாடிக் கும்பலிடம் மண்டியிட்டுக் கிடக்கும் மர்மம் என்ன?

அமெரிக்காவின் அதிபர், அதன் நாடாளுமன்ற உறுப்பி னர்கள், மாநில கவர்னர்கள் உள்ளிட்டு அமெரிக்க ஆளும் கும்பலின் நுனி முதல் அடி வரையிலான அதிகார அங்கங்கள் அனைத்தும் வால்-ஸ்ட்ரீட் சூதாட்டக் கும்பலிடம் காசு வாங் கிக் கொண்டு தான் தங்களின் அரசியல் பிழைப்பை நடத்து கின்றனர். தற்பொழுது நிதி மந்திரியாக இருக்கும் பால்சன், கோல்டு மேன் சாக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றிய பொழுது, 1998 தொடங்கி 2006 முடியவுள்ள எட்டாண்டுகளில் குடிய ரசுக் கட்சிக்கு மட்டும் தனது சொந்தப் பணத்தில் இருந்து 3,36,000 அமெரிக்க டாலர்கள் நன்கொடையாகக் கொடுத் துள்ளார்.

பால்சன் கும்பல் தயாரித்த 70,000 கோடி அமெரிக்க டாலர் மானியத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதற்காக ஹிலாரி கிளிண்டனுக்கு 4,68,200 அமெரிக்க டாலர்; ஜனநா யகக் கட்சியின் அதிபர் வேட்பாளர் பாரக் ஒபாமாவிற்கு 6,91,930 அமெரிக்க டாலர்; குடியரசுக் கட்சியின் அதிபர் வேட்பாளர் ஜான் மெக்கெய்னுக்கு 2,08,395 அமெரிக்க டாலர் என அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக் கும் கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனம் ''நன்கொடை'' கொடுத் திருப்பதாகக் கூறப்படுகிறது.

''வால்-ஸ்ட்ரீட்'' சூதாடிகள் அரசியல்வாதிகளுக்கு இலஞ்சம், நன்கொடை கொடுப்பது ஒருபுறமிருக்க, அவர் களே தேர்தலில் நின்று வென்று நாடாளுமன்ற உறுப்பினர், கவர்னர், மேயர் பதவிகளைப் பிடித்து விடுகிறார்கள். அரசுப் பதவிகளை விலைக்கு வாங்குவதிலும் கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனம்தான் முன்னோடியாக இருப்பதாகக் கூறப்படுகி றது. அதன் முன்னாள் தலைவர் கோர்ஸைன் நியூ ஜெர்ஸி மாநிலத்தில் இருந்து செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோடு, தற்பொழுது அம்மாநில ஆளுநராகவும் இருக்கிறார். அந்நிறுவனத்தின் தலைவர்களாகப் பணியாற்றிய ஸ்டீபன் ஃப்ரைடுமேன், ராபர்ட் ருபின், ஜோஸுவா போல்டன் உள் ளிட்ட பலர் கிளிண்டன், புஷ் நிர்வாகங்களில் அதிகாரமிக்க பசையுள்ள பதவிகளில் ஒட்டிக் கொண்டிருந்தனர். மக்களால், மக்களுக்காக... என நீட்டிமுழக்கப்படும் மக்களாட்சியின் தத் துவம், அதன் பிறப்பிடமான அமெரிக்காவில் சூதாடிகளால், சூதாடிகளுக்காக, சூதாடிகளின் ஆட்சியாகவே இருக்கிறது.

உண்மை இப்படியிருக்க, அமர்த்யா சென் போன்ற அறி ஞர்கள் கூட பாராக் ஒபாமா ஆட்சியைப் பிடித்தால், அமெ ரிக்க மக்களின் பிரச்சினை தீர்ந்துவிடும் என்ற குருட்டு நம்பிக் கையை விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஒபா மாவோ தனது ஆலோசகராக ராபர்ட் ருபினை வைத்துக் கொண்டிருக்கிறார். கோல்டுமேன் சாக்ஸ் நிறுவனத்தின் முன் னாள் தலைமை நிர்வாக அதிகாரியான ருபின், சப்-பிரைம் லோன் சூதாட்டத்தைத் தொடங்கி வைத்த தளபதிகளுள் ஒரு வர்; இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு இலாபம டைந்துள்ள ''சிட்டி குரூப்'' வங்கியின் தற்போதைய தலைவர். எனவே, அமர்த்யா சென் போன்ற அறிஞர்களின் ஜோசியம், பூனையை மடியில் கட்டிக் கொண்டு சகுனம் பார்க்கும் முட் டாள்தனத்தைப் போன்றதுதான்!

### மார்க்சியமே உரைகல்

''முதலாளித்துவ உற்பத்தி முறையில், ஒரு நெருடிக்கடிக் கான தீர்வு இன்னொரு நெருக்கடிக்குத் தான் இட்டுச் செல் லும்; நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு, பெரிய நிறுவ னங்கள் சிறிய நிறுவனங்களை விழுங்கி, தமது ஏகபோக ஆதிக்கத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளும்; நாடாளு மன்ற என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மூடி மறைக்கும் திரை'' என மார்க்சியம் முன்னறிந்து கூறிய பல உண்மைகளை இந்த ''நெருக்கடி'' உலக மக்களின் முன்னே சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்து விட்டது. முதலாளித்து வம் உருவாக்கும் நெருக்கடிகளில் இருந்து உழைக்கும் மக்க ளைக் காப்பாற்ற சோசலிசம்தான் தீர்வு; உற்பத்தியின் மீதும் விநியோகத்தின் மீதும் உழைக்கும் மக்களின் கண்காணிப் பையும், கட்டுப்பாட்டையும் கொண்டு வருவதுதான் தீர்வு என்கிறது மார்க்சியம்.

ஆனால், முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களில் ஒரு சாரார், பங்குச் சந்தை சூதாட்டத்தைச் சட்டம் போட்டுக் கண்காணிக்க வேண்டும்; கள்ளனை விடக் காப்பாளன் திற மைசாலியாக இருக்க வேண்டும் எனத் தீர்ப்பு சொல்கிறார் கள். காகிதச் சட்டங்களின் மூலம் முதலாளித்துவத்தின் ஊழ லையும், மோசடித்தனத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம் என நம்புவது கடவுள் நம்பிக்கையைவிட மூடத்தன மானது. முதலாளித்துவச் சட்டங்கள், சுண்டெலியை வேண்டு மானால் பிடிக்குமேயொழிய, பெருச்சாளிகள் தப்பிப் போவ தைக் கண்டு கொள்ளாது.

பங்குச் சந்தை சூதாடிகளும், வங்கிகளும் 1930-இல் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க, கண்


படிப்பகம்

www.padippakam.com

காணிப்புச் சட்டங்கள் போடப்பட்டன. 1990-இல் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவைத் தடுக்க, பங்குச் சந்தையைக் கண்காணிக்கும் சட்டங்கள் நீக்கப்பட்டன. இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, ''மீண்டும் சட்டம்-கண்காணிப்பு'' என்பது கிழடு தட்டிப் போன தீர்வாகும்.

இன்னொரு பிரிவினரோ, ''சந்தை தவறு செய்யாது; பேராசையால் தான் இந்த நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாக''க் கண்டுபிடித்து, ''நிதி நிறுவனங்கள் பேராசையைத் துறக்க வேண்டும்'' என உபதேசித்து வருகிறார்கள். இந்த அறிவுரைக்கு முதலாளிகளின் பதில் என்ன தெரியுமா?

அமெரிக்காவின் மிகப் பெரிய காப்பீட்டு நிறுவனமான ''ஏ.ஐ.ஜி''-க்கு, 8,500 கோடி டாலர்களைக் கொடுத்து, அந்நிறுவனம் திவாலாகிவிடாமல் கை தூக்கி விட்டது, அமெரிக்க அரசு. இந்தப் பணம் கைக்குக் கிடைத்த மறுநிமிடமே, அந்நிறுவனம் முகவர்களின் கலந்தாய்வுக் கூட்டம் என்ற பெயரில், கலிபோர்னியா மாநிலத்தில் மொனார்க் கடற்கரையில் உள்ள ஆடம்பரமான செயிண்ட் ரேகிஸ் உல்லாச விடுதியில் 4,43,000 டாலர் செலவில் களிவெறியாட்டக் கூத்தை நடத்தியது. ஏ.ஐ.ஜி. அதிகாரிகள் மக்கள் பணத்தில் மஞ்சள் குளிப்பது வெளியே கசிந்தவுடன், அதற்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. இதனால், ஏ.ஐ.ஜி. மற்றொரு களியாட்டக் கூத்தை நடத்த முடியாமல் கைகழுவியது; எனினும், ''நிகழ்ச்சி ரத்தானது தங்களைச் சோர்வடையச் செய்துவிட்டதாக''க் குறைபட்டுக் கொண்டார்கள், அதன் அதிகாரிகள்.

ஊதாரித்தனத்தையும், ஒட்டுண்ணித்தனத்தையும் கைவிட மறுக்கும் இக்கும்பலை, ''சீட்டுக் கத்தரித்து வாழும் சுகஜீவிகள்'' என அடையாளம் காட்டினார், லெனின். இச்சமூக விரோதக் கும்பலைப் போதனைகளால் திருத்திவிட முடியாது. இவர்களையும், இவர்களைப் பாதுகாக்கும் ஏகாதிபத்திய சமூகக் கட்டமைப்பையும் தூக்கியெறியும் போராட்டமே தீர்வாகும்!

● செல்வம்

# தொழிற்சங்கம் அமைத்தால் வேலை நீக்கம்!

## வி.பி. மெடிக்கேர் நிர்வாகத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக பு.ஜ.தொ.மு. ஆர்ப்பாட்டம்.

ஓசூர் சிப்காட்-II தொழிற்பேட்டையிலுள்ள ''வி.பி. மெடிகேர் லிமிடெட்'' எனும் நிறுவனம், மருத்துவ இரசாயனத் தொழிற்சாலையாகும். இது, சர்க்கரை நோயாளிகளுக்கான இனிப்பு உள்ளிட்டு மூட்டுவலி மருந்து தயாரிப்பு - ஆராய்ச்சிக்கூடம் கொண்ட ஆலையாகும். இவ்வாலையில் 160 பேர் ஆராய்ச்சிக்கூட ஊழியர்கள் - கண்காணிப்பாளர்களாகவும், 75 பேர் தொழில்நுட்பத் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களாகவும், 130 பேர் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர்.

கடந்த நான்காண்டுகளாக இயங்கிவரும் இவ்வாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு 8 மணி நேர வேலை, மருத்துவ ஈட்டுறுதி, சேமநல நிதி முதலான எந்த உரிமையும் கிடையாது. நான்காண்டுகளாகத் தொடர்ந்து வேலை செய்த போதிலும் இவர்கள் நிரந்தரத் தொழிலாளர் அல்ல என்று கூறும் நிர்வாகம், அவர்களை எந்நேரமும் வேலைநீக்கம் செய்வதற்கேற்ப தன்னிச்சையாகவும் சட்ட விரோதமாகவும் விதிகளை வகுத்துக் கொண்டு, தொழிலாளர்களை மிரட்டிக் கொத்தடிமைகளாக நடத்தி வருகிறது.

தொடரும் இக்கொடுமைகளைக் கண்டு குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்து உரிமைகளுக்காகப் போராட முற்பட்டனர். இதையறிந்த நிர்வாகம், மூன்று தொழிலாளர்கள் மீது பொய்க்குற்றம் சாட்டி திடீரென வேலை நீக்கம் செய்தது. இவர்களில் பாதிக்கப்பட்ட பசவராஜ் என்ற தொழிலாளி, கிருஷ்ணகிரி மாவட்டத் தொழிலாளர் துறை ஆணையரிடம் தனக்கு நியாயம் கோரி முறையிட்டதோடு, ஓசூரில் இயங்கி வரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியிடமும் உதவி கோரினார். அதைத் தொடர்ந்து, ஆலை நிர்வாகத்திடம் பு.ஜ.தொ.மு. இரண்டு முறை பேச்சு வார்த்தை நடத்தியும், ஆலை நிர்வாகம் பழிவாங்கப்பட்ட தொழிலாளிகளை வேலையில் சேர்க்க மறுத்து அடாவடித்தனம் செய்தது. ஆலை நிர்வாகத்தின் திமிரையும், ஊழலையும், கொத்தடிமைத்தனத்தையும் உடனடியாக சுவரொட்டிப் பிரச்சாரம் மூலம் பு.ஜ.தொ.மு. அம்பலப்படுத்தியது. அதைத் தொடர்ந்து பழிவாங்கப்பட்ட தொழிலாளர்களோடு இதர ஆலைத் தொழிலாளர்களையும் அணிதிரட்டி, வி.பி. மெடிக்கேர் ஆலை வாயிலில் 13.10.08 அன்று வர்க்க உணர்வுமிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.




அரண்டு போன நிர்வாகம், உடனடியாக தொழிலாளர்களுக்கு மருத்துவ ஈட்டுறுதி, சேமநல நிதி முதலான உரிமைகளை வழங்கியுள்ளது. விரைவில் பணி நிரந்தர ஆணை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது. இதனால் உற்சாகமடைந்துள்ள தொழிலாளர்கள், பு.ஜ.தொ.மு.வில் நம்பிக்கையோடு அணிதிரண்டு வருகின்றனர். இவ்வாலையில் தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்ட தொழிற்சங்கத்தைக் கட்டியமைக்கவும், சட்டவிரோதமாகப் பழிவாங்கப்பட்டுள்ள தொழிலாளர்களை மீண்டும் பணியில் அமர்த்தவும், ஓசூர் பகுதியில் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள சட்ட விரோத கொத்தடிமைத்தனத்தை முறியடிக்கவும் பு.ஜ.தொ.மு. அடுத்தகட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகிறது.

- பு.ஜ. செய்தியாளர்



படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்தியக் கொள்ளையும் சி.பி.ஐ.-இன் மொன்னைத்தனமும்

''வளர்ச்சிய டைந்த நாடுகள் நேர்மையுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டால் மட்டுமே தற்போது ஏற்பட்டுள்ள சர்வதேசப் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்...''

''தற்போதைய சூழலில் உலக வங்கி மற்றும் சர்வதேச செலாவணி நிதியம் ஐ.எம்.எஃப். ஆகியன சுதந்திரமாக செயல்பட வேண்டியது அவசியம். வளரும் நாடுகளின் கோரிக்கைகள் மற்றும் கருத்துகள் ஐ.எம்.எஃப். மற்றும் உலக வங்கியில் எடுபடும் அளவுக்கு சீரமைப்புகள் இருக்க வேண்டும்...''


''வளரும் நாடுகளிலிருந்து கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பல லட்சம் கோடி டாலர்கள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது... இத்தகைய சூழலால் தற்போது படிப்படியாக முதலீடு குறைந்து வருகிறது...''

சூதாடி முதலாளித்துவம் அடித்த கொள்ளையின் விளைவாக, உலகம் முழுவதும் கொள்ளைநோய் போலப் பரவி வரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து உலக முதலாளித்துவத்தைக் காப்பாற்றும் பொருட்டு இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரமுகர் முன்வைத்திருக்கும் ஆலோசனைகள் இவை. அந்தப் பிரமுகர் யாராயிருக்கும் என்று யூகிக்க முடிகிறதா? மன்மோகன் சிங்? கமல்நாத்? அலுவாலியா? ப.சிதம்பரம்?

இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தேசியச் செயலர் டி.ராஜா என்பதுதான் சரியான விடை. நியூயார்கில் நடைபெற்ற ஐ.நா. பொதுக்குழுவின் நிதி மற்றும் பொருளாதாரக் குழுவின் கூட்டத்தில் அவர் ஆற்றிய உரையில் கண்டெடுத்த முத்துக்கள் இவை. (பார்க்க: தினமணி - 15.10.08)

நேர்மையான கொள்ளை! கொள்ளைக் கூட்டத்தின் ஒருங்கிணைந்த செயல்பாடு! இவை உலக முதலாளித்துவத்தைக் காப்பாற்ற ஒரு கம்யூனிஸ்டு முன்வைக்கும் ஆலோசனைகள். இதனைக் கேட்டு முன்வாயால் அழுவதா, பின்வாயால் சிரிப்பதா என்று தெரியவில்லை.

அமெரிக்க வர்த்தகச் சூதாடிகள் நடத்தியிருக்கும் இந்தக் கொள்ளையையும், அந்தக் கொள்ளையினால் திவாலான வங்கிகளை மீட்கும் பொருட்டு 700 பில்லியன் டாலர் மக்களின் வரிப்பணத்தை மேற்படி கொள்ளையர்களுக்கே கொட்டி அளக்கும் அமெரிக்க அரசின் கொள்கையையும் முதலாளித்துவ வெறியர்களாலேயே கூடச் சகித்துக் கொள்ள முடியவில்லை. இது பணக்காரர் நல அரசு என்கிறார் அமெரிக்க கோடீசுவர முதலீட்டாளர் ஜிம் ரோஜார்ஸ். இது பகற்கொள்ளை என்று அலறுகிறார்கள் அமெரிக்கப் பொருளாதார வல்லுநர்கள். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில் வளர்முக நாடுகளிலிருந்து ஏகாதிபத்தியங்கள் அடித்திருக்கும் கொள்ளை இலாபத்தை, கொள்ளை என்று சொல்வதற்கு திருவாளர் ராஜாவுக்கு நாக்கூசுகிறது. பல இலட்சம் கோடி டாலர்களைப் பரிமாற்றம் செய்திருக்கிறார்களாம்!




''சூதாட்ட முதலாளித்துவத்தை ஒழித்து, தொழில் முனைவு முதலாளித்துவத்தை வளர்க்க வேண்டும். டாலரை உலகச் செலாவணியாக்கிய பிரெட் அண்டு வுட்ஸ் ஏற்பாட்டை மாற்றியமைக்க வேண்டும்'' என்கிறார் பிரெஞ்சு அதிபர் சார்க்கோசி. சார்க்கோசி எதைக் கலைக்க வேண்டும் என்கிறாரோ, அதைப் பாதுகாக்க வழி சொல்லிக் கொடுக்கிறார் நம்மூர் கம்யூனிஸ்டு. டாலரை உலக நாணயமாகப் பாதுகாக்கும் பொருட்டும், ஏழை நாடுகளைக் கொள்ளையிட ஏற்பாடு செய்து கொடுக்கும் பொருட்டும் உருவாக்கப்பட்ட உலக வங்கி எனும் கந்து வட்டி நிறுவனத்தைச் சீரமைக்க வழி சொல்லிக் கொடுக்கிறார் ராஜா.

இந்த கம்யூ...னிஸ்டு கட்சியின் நாளேடு (ஜனசக்தி 20.10.08) 'உலகப் பொருளாதார நெருக்கடி: மார்க்சின் பக்கம் பார்வை திரும்புகிறது' என்று தலைப்பிட்டு ஒரு கட்டுரை வெளியிட்டிருக்கிறது. மார்க்ஸின் நூலான 'மூலதனத்தின்' விற்பனை உலகெங்கும் அதிகரித்திருப்பதாகவும், அறிவு ஜீவிகளும் மெத்தப் படித்தவர்களும் நிர்வாகிகளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகளைப் புரிந்து கொள்ள மார்க்ஸ் பக்கம் திரும்பியிருப்பதாகவும் கூறுகிறது, அந்தக் கட்டுரை.

அது கிடக்கட்டும். கட்சியின் செயலாளர் எந்தப் பக்கம் திரும்பியிருக்கிறார்? அவர் மேற்கு நோக்கி மண்டி போட்டு உலக வங்கியைப் பார்த்தல்லவா தொழுகை நடத்துகிறார்! வேறென்ன செய்ய முடியும்? கோட்டு சூட்டு போட்டு டை கட்டி, 'இந்தியாவின் பிரதிநிதி' என்ற கவுரவத்துடன் சான்றோர் அமர்ந்திருக்கும் அந்த அவையில், சரிசமமாக அமரும் வாய்ப்பை மன்மோகன் சிங் அரசு வழங்கியிருக்கும்போது, அங்கே போய் 'கம்யூனிசம், சோசலிசம், முதலாளித்துவக் கொள்ளை' என்று கீழ் மக்களின் கொள்கையை அவரால் எப்படிப் பேச முடியும்? அவருடைய சிரமம் புரிகிறது.

நம்முடைய சிரமத்தையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வலது இடது கம்யூனிஸ்டுகள் மார்க்சியத்தைத் திரிப்பதால் 'திருத்தல்வாதிகள்' என்று அழைத்தோம். பிறகு மக்களுக்குத் தெளிவாகப் புரியும்படி 'போலி கம்யூனிஸ்டுகள்' என்று பெயரிட்டோம். ஆனால், அவர்கள் போகும் வேகத்துக்கு நம்மால் ஈடு கொடுக்க முடியவில்லை. இப்பவும் கூட ராஜா என்ன சொல்கிறார் என்பது தெளிவாகப் புரிகிறது. ஆனால், அவருடைய கட்சியை என்ன பெயரிட்டு அழைப்பது என்பதுதான் புரியவில்லை. தமது கொள்கைக்குப் பொருத்தமான நல்லதொரு பெயரை அவர்களே சூட்டிக் கொண்டால் பேருதவியாக இருக்கும்.

• தொரட்டி



படிப்பகம்

www.padippakam.com

# மன்மோகன் சிங்: நவீன தருமன்

## நாட்டை வைத்துச் சூதாடினான் தருமன்; வங்கிப் பணத்தை வாரிக்கொடுத்துச் சூதாடச் சொல்கிறார், மன்மோகன்.

"நல்ல காலம் முடிந்தது" - இப்படி அலறுகிறது, இந்தியா-டுடே வார இதழ். 21,000 புள்ளிகளாக இருந்த பங்குச் சந்தை வளர்ச்சி, 10,000 புள்ளிகளுக்கும் கீழே சரிந்து விழுந்த பிறகு; பங்குச் சந்தை சூதாட்டத்தால் உலகக் கோடீசுவரர்களான இந்தியத் தரகு முதலாளிகளின் சொத்து மதிப்பு சடசடவெனச் சரியும்பொழுது, இப்படித்தான் ஓலமிட முடியும்.

பங்குச்சந்தையும், தகவல்-தொழில் நுட்பத்துறையும், ரியல் எஸ்டேட் வியாபாரமும், சுற்றுலா உள்ளிட்ட சேவைத் துறையும், ஏற்றுமதி சார்ந்த தொழில்களும் இந்தியாவை வல்லரசாக்கி வருவதாகக் கூறி வந்தார்கள். ஆனால், அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார சுனாமி இந்தத் தொழில்கள் அனைத்தையும் ஆட்டம் காண வைத்துவிட்டது; தாராளமயம் உருவாக்கியிருந்த நீர்க்குமிழி உடைந்து விட்டது. ஆளும்வர்க்கம் பீற்றிக் கொண்ட 9 சதவீத பொருளாதார வளர்ச்சி, வேரோ விழுதோ அற்ற வளர்ச்சி என்பது நிரூபணமாகிவிட்டது.

அரசு, பொருளாதாரத்தில் தலையீடு செய்வதை "லைசென்ஸ் ராஜ்ஜியம்", "கோட்டா ராஜ்ஜியம்" எனத் தூற்றிய முதலாளிகள், இன்று அரசாங்கம் உதவ வேண்டும் எனத் தட்டைத் திருப்பிப் போட்டுத் தட்டுகிறார்கள். ஆட்குறைப்புச் செய்வதன் மூலம், புதிய முதலீடுகளைச் செய்யாமல் பணத்தை இரும்புப் பெட்டிக்குள் பூட்டி வைத்துக் கொள்வதன் மூலம் அரசையும் மக்களையும் "பிளாக் மெயில்" செய்கிறார்கள். முதலாளிகளின் மிரட்டலுக்கு ஆடிப் போன மன்மோகன் - ப.சிதம்பரம் கூட்டணி 1,85,000 கோடி ரூபாயைச் சந்தையில் கொட்டுகிறது.

மனசாட்சியோடு கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள். ஏறத்தாழ ஒரு இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட பிறகு தான்; பல இலட்சக்கணக்கான விவசாயிகள் தாராளமயத்தால் ஓட்டாண்டியாகி, விவசாயத்தை விட்டு நகர்ப்புறங்களுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்த பிறகுதான், மன்மோகன் சிங் விவசாயக் கடன் தள்ளுபடி என்ற அரைகுறை திட்டத்தை அறிவித்தார்.

இப்பொருளாதார நெருக்கடியால் எந்தவொரு முதலாளியும் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரியவில்லை; எந்தவொரு முதலாளியும் ஓட்டாண்டியாகித் தெருவுக்கு வந்துவிடவில்லை. ஆனாலும் கடந்த அக். 6 தொடங்கி அக்.20-க்குள், இரண்டே வாரத்திற்குள் 1,85,000 கோடி ரூபாய், முதலாளிகள் வாரிக் கொள்ளும்படி சந்தையில் கொட்டப்பட்டது. இது, மன்மோகன்சிங்கின் சொந்தப் பணமோ, முதலாளிகளின் அப்பன் வீட்டுச் சொத்தோ அல்ல. இந்த 1,85,000 கோடி ரூபாயும் இந்திய மக்களின் சேமிப்புப் பணம்; மக்கள் அரசாங்கத்திற்கு வரியாகக் கட்டிய பணம்.

இந்திய முதலாளிகளும், அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் சுவிஸ் நாட்டு வங்கிகளில் போட்டு வைத்துள்ள கருப்புப் பணம் மட்டும் 55 இலட்சம் கோடி ரூபாய் என்றும்; கருப்புப் பணத்தை சுவிஸ் நாட்டு வங்கிகளில் பதுக்குவதில் இந்தியாதான் முதலிடத்தில் இருப்பதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன (தினமணி 16.10.2008) மன்மோகன் சிங் இந்தக் கருப்புப் பணத்தை முடக்கினால், பங்குச் சந்தையில் தற்போது ஏற்பட்டுள்ள 'நட்டத்தை' மட்டுமல்ல, இந்தியாவின் உள்நாட்டு-வெளிநாட்டுக் கடன்களைக் கூட அடைத்துவிட்டு நிம்மதியாக இருக்கலாம். ஊழல்-வரி ஏய்ப்பின் மூலம் குவிக்கப்பட்ட இந்தக் கருப்புப் பணத்தின் மீது கை வைக்கத் தயங்கும் மன்மோகன், பொதுமக்களின் சேமிப்பைப் பங்குச் சந்தை சூதாடிகளுக்காக வாரியிறைக்கிறார்.

மாணவர்களுக்குக் கல்விக் கடன் தர மறுக்கும் வங்கிகள்; சிறு தொழில்

**இந்தியத் தனியார் வங்கியான ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கி திவாலாகிவிடக் கூடும் என்ற அச்சத்தால், தங்கள் சேமிப்புகளை அவ்வங்கியில் இருந்து திரும்ப எடுக்க அலைமோதும் கூட்டம்.**






படிப்பகம்

www.padippakam.com

களுக்கு உரிய நேரத்தில் உதவ மறுக்கும் வங்கிகள்; விவசாயக் கடன் தர மறுக்கும் வங்கிகள், பங்குச் சந்தைச் சூதாடிகளைக் காப்பாற்ற வட்டியைக் குறைத்து, தங்கள் கஜானாவைத் திறந்து வைத்துவிட்டன.

அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், அமெரிக்க முதலாளிகளைக் கைதூக்கி விட 70,000 கோடி அமெரிக்க டாலர் பெறுமான மானியத் திட்டத்தை அறிவித்த பொழுது, அதற்காக அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் நாடகத்தை நடத்த வேண்டியிருந்தது. மன்மோகன் சிங் - ப.சிதம்பரம் கும்பலோ, 1,85,000 கோடி ரூபாய் மானியத்தை வாரிக் கொடுக்க, யாருடைய ஒப்புதலுக்காகவும் காத்திருக்கவில்லை.

விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட பொழுது, அதனால் வங்கிகள் நட்டமடையும் எனக் கவலைப்பட்ட பொருளாதார நிபுணர்கள்; அத்திட்டத்தை ஓட்டுவங்கி அரசியல் எனக் கிண்டலடித்த நடுத்தர வர்க்கக் கனவான்கள், முதலாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள இந்த மானியம் பற்றி வாய் திறக்க மறுக்கிறார்கள். ஏதோ நாட்டு நலனுக்காகத் தான் இந்தப் பணம் கொடுக்கப்பட்டதைப் போலச் சாதிக்கப் பார்க்கிறார்கள்.

பங்குச் சந்தை வளர்ச்சி 20,000 புள்ளிகளாக ஊதிப் பெருத்திருந்த பொழுது, முதலாளித்துவ நிறுவனங்களின் பங்கு மதிப்பு 62,16,900 கோடி ரூபாயாக வீங்கியிருந்தது. இந்தச் சரிவினால், இந்தச் சந்தைத் திரட்சி சரிபாதியாக வீழ்ந்து விட்டது. இதனால், அம்பானி, மிட்டல் போன்ற உலகக் கோடீசுவரர்களின் சொந்த சொத்து மதிப்பும் படுத்துவிட்டது. மீண்டும் பங்குச் சந்தை வீங்கினால்தான் இவர்களின் சொத்து மதிப்பு உயரும். அதற்குத்தான் இந்த 1,85,000 கோடி ரூபாய் பயன்படும். வீட்டுக் கடன் மூலம் ரியல் எஸ்டேட் முதலாளிகளின் கைகளுக்கும்; நுகர் பொருள் கடன் மூலம் மேட்டுக்குடி ஊதாரிக் கும்பலின் பாக்கெட்டுக்கும் தான் இந்த 1,85,000 கோடி ரூபாய் செல்லப் போகிறது.

மாறாக, பங்குச் சந்தை வளர்ச்சியின் கவர்ச்சியில் மயங்கி, அதில் பணத்தைப் போட்டு, 3,00,000 கோடி ரூபாய் நட்டமடைந்திருக்கும் நடுத்தர வர்க்கத்து ஆசாமிகளுக்குக் கூட இந்தப் பணம் உதவப் போவதில்லை.



**''என்னுடைய பிசினஸில் 80 சதவீதம் அமெரிக்கா, ஐரோப்பாவில் இருந்து வருகிறது; இனி எங்கிருந்து பிசினஸ் வரும் என எனக்குத் தெரியவில்லை'' எனக் கவலைப்படும் ஆயத்த ஆடை ஏற்றுமதியாளர் ஷரத் ஷராஃப். *(நன்றி: இந்தியா-டுடே)***

•••

பங்குச் சந்தையை சேவைத் துறை எனப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருந்த மன்மோகன் சிங், இன்று அதனைச் சூதாட்டப் பொருளாதாரம் எனச் சொல்லும் அளவிற்கு இடிந்து போய் நிற்கிறார். ''பங்குச் சந்தை சூதாட்ட பேர்வழிகளைக் கட்டுப்படுத்த உலகளாவிய அளவில் கண்காணிக்கும் நிர்வாக அமைப்புகள் தேவை'' என சமீபத்தில் ஜப்பானில் நடந்த ஆசிய - ஐரோப்பிய நாடுகளின் மாநாட்டில் உபதேசம் செய்திருக்கிறார்.

இந்தியப் பங்குச் சந்தையின் சரிவுக்கு அந்நிய முதலீட்டு நிறுவனங்கள் தான் காரணம் என முதலாளித்துவப் பத்திரிகைகள் கூடக் குற்றஞ் சுமத்துகின்றன. அந்நிறுவனங்கள் 1,000 கோடி டாலர் பெறுமான பங்குகளைத் திடீரென `விற்று, இலாபத்தை எடுத்துக் கொண்டு ஓடிப் போனதால், பங்குச் சந்தை மட்டுமல்ல, இந்திய ரூபாயின் மதிப்பும் சரிந்து விட்டது. மன்மோகன் சிங், இந்த வெளியேற்றத்தைத் தடுத்திருக்க வேண்டும். ஆனால், அவரோ பங்குச் சந்தை சூதாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பதில், மேலும் பல சலுகைகளை வாரியிறைத்து வருகிறார்.

ஒருவர், தான் இன்னார் எனக் காட்டிக் கொள்ளாமல் பங்குச் சந்தையில் முதலீடு செய்ய பங்கேற்புப் பத்திரம் என்றொரு வசதி இருக்கிறது. கருப்புப் பணத்தை நல்ல வெள்ளைப் பணமாக மாற்றிக் கொள்ளப் பயன்படும் குறுக்கு வழி இது. இந்தியாவின் கருப்புப் பண முதலைகள், அந்நிய நிதி நிறுவனங்களின் மூலம் இந்த வழியைப் பயன்படுத்திக் கொண்டுதான் சூதாடுகிறார்கள் என மோப்பம் பிடித்துவிட்ட பங்குச் சந்தை பரிமாற்ற வாரியம், இந்தக் குறுக்கு வழியை முற்றிலுமாகத் தடை செய்ய வேண்டும் எனக் கோரியது. மன்மோகன் சிங் இத்தடைக்கு ஒத்துக் கொள்ளாததால் அந்நிய நிதி நிறுவனங்கள் பங்குச் சந்தையில் செய்யும் முதலீட்டில், பங்கேற்புப் பத்திரங்கள் 40 சதவீத அளவிற்குள்தான் இருக்க வேண்டும் எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஆனால், இப்பொழுதோ, பங்குச் சந்தை சரிவைத் தடுத்து நிறுத்துவது என்ற பெயரில், இக்கட்டுப்பாடு முற்றிலுமாக நீக்கப்பட்டு, கருப்புப் பணப் பேர்வழிகளின் முதலீட்டுக்கு முழுச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. பூனைக்கு மணி கட்ட வேண்டும் என்ற அவரது உபதேசம் ஊருக்குத்தான் போலும்!

•••

பங்குச் சந்தையை மட்டுமல்ல, இந்திய நிதி சந்தை முழுவதையும் அந்நிய நிறுவனங்களிடம் தூக்கிக் கொடுத்து விட வேண்டும் என்பதுதான் மன்மோகன் சிங் கும்பலின் இலட்சியம். அந்நிய நிதி நிறுவனங்கள் காப்பீடு துறையில் 26 சதவீதம் அளவிற்கு மூலதனம் இடுவதை அனுமதித்திருக்கும் மன்மோகன் சிங், அதனை 49 சதவீதமாக உயர்த்த விரும்புகிறார்.

இந்தியாவிலுள்ள தனியார் வங்கிகளைப் பன்னாட்டு பகாசூர வங்கிகள் கைப்பற்றிக் கொள்வதற்கு வசதியாக, அந்நிய வங்கிகள் இந்திய வங்கிகளில் மூலதனமிடுவதை 74 சதவீதமாக உயர்த்தவும்; இதற்காக வங்கி ஒழுங்கு முறைச் சட்டத்தைத் திருத்தவும் முயன்று வருகிறது, காங். கூட்டணி ஆட்சி.

தொழிலாளர் சேமநல நிதியை நிர்வகிப்பதை முற்றிலுமாகத் தனியார்மய



படிப்பகம்

www.padippakam.com



தடாலடி வேலை நீக்கத்தை எதிர்த்துப் போராட்டம் நடத்திய ஜெட் ஏர்வேஸ் நிறுவன ஊழியர்கள்.

மாக்கி, அந்நிதியைப் பங்குச் சந்தையில் கொட்டிச் சூதாடுவதைச் சட்டபூர்வமாக்குவதற்காக சேமநல நிதி ஒழுங்கு மற்றும் வளர்ச்சி ஆணையத்தை நிறுவ சட்டம் தயாரிக்கப்பட்டு, அது நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கின்றது.

மன்மோகன் சிங்கால் நிதித்துறை தொடர்பாக எடுக்கப்படும் ஒவ்வொரு ''சீர்திருத்தமும்'' வாடிக்கையாளர் நலனுக்கானது அல்ல; அரசின் அரைகுறைக் கட்டுப்பாட்டில் இயங்கும் நிதித்துறையை, அமெரிக்காவைப் போல நிதி ஆதிக்கக் கும்பலிடம் கொடுத்து விட வேண்டும் என்ற நோக்கமுடையது. பூனைக்கு மணிகட்ட வேண்டும் என்றால், மன்மோகன் சிங் இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகளைக் கைவிட வேண்டும். ஆனால், அவரது சிஷ்யப் பிள்ளை ப.சிதம்பரமோ, அமெரிக்காவின் தனியார் வங்கிகள் திவாலானதைப் பார்த்த பிறகும், ''இந்திய நிதித்துறையைச் சீர்திருத்தம் செய்வதற்குத் தடை போட முடியாது'' எனத் திமிராக அறிவிக்கிறார்.

அமெரிக்காவின் வீட்டுக் கடன் பிரச்சினையில் சிக்கிக் கொண்டு, இந்தியப் பொதுத்துறை வங்கிகள் 450 கோடி ரூபாயும்; இந்தியத் தனியார் வங்கிகள் 2,100 கோடி ரூபாயும் இழந்துவிட்டதாக அரசு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால் இது அரைகுறை உண்மைதான் என்ற சந்தேகம் ஒருபுறமிருக்க, இந்திய வங்கிகள் வகைதொகையின்றி அளித்திருக்கும் கிரெடிட் கார்டு கடன்கள், வீட்டுக் கடன்கள், தனிநபர் கடன்கள், நுகர்வோர் கடன்கள் ஆகியவை எதிர்காலத்தில் இந்தியாவிலும் அமெரிக்க பாணியில் ஒரு நெருக்கடியைத் தோற்றுவிக்கலாம் என வல்லுநர்களே அச்சப்படுகின்றனர். குறிப்பாக, தகவல்-தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டு வரும் வேலையிழப்பும், சம்பள வெட்டும் வங்கிகளுக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் என்கிறார்கள்.

மேலும், இந்தியப் பணத்தின் சந்தை மதிப்பை அரசின் தலையீடின்றி, சூதாடிகள் தீர்மானிக்க விட்டு விடவேண்டும் என்பதுதான் மன்மோகனின் வாழ்நாள் இலட்சியம். ஒருவேளை அவரது கனவு முன்பே நிறைவேறியிருந்தால், இந்நேரம் இந்தியா திவாலாகியிருக்கும். கட்டுப்பாடு பற்றி உபதேசிக்கும் மன்மோகன் சிங், தனது இந்தக் கனவைக் கைகழுவிவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

●●●

இந்தியா, அமெரிக்கா போல மாற வேண்டும் எனக் கத்திக் கொண்டிருந்த நடுத்தர வர்க்கத்துக்கு, இந்த ''நெருக்கடி'' சரியான பாடம் புகட்டிவிட்டது. தகவல் தொழில்நுட்பத் துறையில் கொழுத்த சம்பளத்தில் அதிகாரியாக வேலை பார்க்கும் சீமா குக்ரேஜாவை, அவரது நிர்வாகம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி, வேலை நீக்க உத்தரவில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, வீட்டிற்கு அனுப்பி விட்டது. ஜெட் ஏர்வேஸ் நிறுவனத்தைச் சேர்ந்த 1,900 ஊழியர்கள் ஒரே நொடியில் வேலையில் இருந்து துரத்தப்பட்டனர். அவர்கள் போராடிய பிறகு, ஜெட் ஏர்வேஸ் முதலாளி நரேஷ் கோயல் அவர்களைத் ''தாயுள்ளத்தோடு'' வேலைக்கு எடுத்துக் கொண்டார். இந்தக் கருணைக்குப் பின்னே சம்பள வெட்டு என்ற குருவாள் மறைந்திருந்தது. இரண்டு இலட்சம் வரை சம்பளம் வாங்கிய தனியார் விமான நிறுவன ஊழியர்களுக்கு இன்று 10,000 ரூபாய் சம்பளமாகக் கிடைத்தால் அதிருஷ்டம்தான்!

வேலை பறி போய்விடும் என்பதால் தகவல் தொழில்நுட்பத் துறையில் யாரும் வருடாந்திர சம்பள உயர்வு பற்றியோ, போனசு பற்றியோ வாயே திறப்பதில்லை எனக் கூறப்படுகிறது. சம்பள வெட்டு, இல்லையென்றால் வேலையிழப்பு - இந்த இரண்டில் ஒன்று ஊழியர்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிறது.

வியாபாரம் படுத்துவிட்டதால், வாடிக்கையாளர்களைக் கவர பெங்களூரில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சி.





படிப்பகம்

www.padippakam.com

தெருவில் இறங்கிப் போராடும் தொழிலாளர்களை, "நான்-சென்ஸ்" என எரிச்சலாகப் பார்த்த இந்த மூளை உழைப்பாளிகள், இன்று தெருவில் இறங்கி "வாழ்க, ஒழிக" முழக்கம் போட வேண்டிய நிர்பந்தம் உருவாகி விட்டது. தொழிற்சங்கத்தில் சேர்வதை கௌரவக் குறைச்சலாகப் பார்த்த இந்த மூளை உழைப்பாளிகள், இன்று தங்களுக்காக யாராவது பரிந்து பேச மாட்டார்களா எனத் தவிக்கிறார்கள். தாராளமயத்தால் இவர்கள் அனுபவித்த வசதிகள் - கிரெடிட் கார்டு, வண்டிக் கடன், வீட்டுக் கடன் ஆகியவை இன்று வேலையிழப்பாலும், சம்பள வெட்டாலும் சுமையாக மாறி, அவர்களுக்கு மன அழுத்தத்தை கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. நிரந்தரமானது என அவர்கள் நம்பிக் கொண்டிருந்த இந்த சொர்க்க வாழ்க்கை, இன்று நொறுங்கி விழுகிறது.

நெருக்கடியில் சிக்கிக் கொண்ட ஜெட் ஏர்வேஸ், கிங் ஃபிஷர் ஆகிய நிறுவனங்கள் எண்ணெய் நிறுவனங்களுக்கும், இந்திய விமான ஆணையத்திற்கும் தர வேண்டிய 3,000 கோடி ரூபாயை மெதுவாக அடைக்கலாம் என கருணை காட்டியிருக்கிறார், மன்மோகன் சிங். அதேசமயம், ஏர்-இந்தியாவில் இருந்து கட்டாய விடுப்பில் அனுப்பப்படவுள்ள 15,000 ஊழியர்களுக்குக் கருணை காட்ட அரசு தயாராக இல்லை.

இதுதான் அமெரிக்க பாணி; தொழிலாளர்களை வேலையில் இருந்து கறிவேப்பிலை போலத் தூக்கியெறிவதுதான் அமெரிக்காவின் தொழில் உறவுக் கொள்கை. இந்தத் தீவட்டிக் கொள்கையைத்தான் தொழிலாளர் நலச் சீர்திருத்தம் என்ற பெயரில் அமலாக்கத் துடிக்கிறார், மன்மோகன் சிங்.

தனியார்மயம் சூதாடிகளைத் தவிர, உழைக்கும் மக்களில் எந்தவொரு பிரிவினருக்கும் - விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், ஊழியர்கள், இடை நிலை அதிகாரிகள் - குறைந்தபட்ச வாழ்க்கை பாதுகாப்பையோ, வேலை பாதுகாப்பையோ அளிக்கப் போவதில்லை என்பது தெள்ளத் தெளிவாக நிரூபணமாகி விட்டது. இச்சூதாட்டப் பொருளாதாரத்தை, அமைப்பாகத் திரண்டு போராடி வீழ்த்துவதை விட்டு விட்டு, விதியே என்று நமது தலையில் சுமப்பது இனியும் அறிவுடைமையாகாது!

● ரஹீம்

# சோமாலியா: ஏகாதிபத்தியங்களின் அட்டூழியம்! யுத்தபிரபுக்களின் சூரத்தனம்!

அரபிக் கடலின் மேற்கே, ஆப்பிரிக்கக் கண்டத்தின் உச்சியிலுள்ள ஏடன் வளைகுடாவின் செங்கடலில் இதமாக அலைவீசிக் கொண்டிருந்தது. கடந்த செப்டம்பர் 25-ஆம் நாளன்று ஏடன் வளைகுடா வழியாக உக்ரேனிய நாட்டின் "எம்.வி.ஃபைனா" என்ற ஆயுதத் தளவாட சரக்குக் கப்பல் செங்கடலில் மெதுவாக முன்னேறிக் கொண்டிருந்தது. திடீரென அதிநவீன ஆயுதங்களுடன் விசைப்படகுகளில் திரண்டு வந்த நூற்றுக்கும் மேற்பட்டோர் அக்கப்பலை வழிமறித்து, மாலுமிகளைச் சிறைபிடித்து அச்சரக்குக் கப்பலைக் கடத்திச் சென்றனர். கப்பலையும் மாலுமிகளையும் விடுவிக்க வேண்டுமானால், அக்கப்பல் நிறுவனம் 80 லட்சம் டாலர் (ஏறத்தாழ 36 கோடி ரூபாய்) தரவேண்டும் என்றும், இல்லையேல் மாலுமிகளையும் கப்பல் ஊழியர்களையும் சுட்டுக் கொன்று விடுவோம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.


"ஐயோ! கடற்கொள்ளையர்கள்!" என்று அலறியது அக்கப்பல் நிறுவனம். உக்ரைன் நாட்டு சரக்குக் கப்பல் மட்டுமல்ல; கடந்த ஜனவரியிலிருந்து ஏடன் வளைகுடா பகுதியில் 69 சரக்குக் கப்பல்கள் கடற் கொள்ளையர்களால் தாக்கப்பட்டுள்ளன. 27 கப்பல்கள் கடத்திச் செல்லப்பட்டு கடற் கொள்ளையர்களின் பிடியில் உள்ளன. 200-க்கும் மேற்பட்ட மாலுமிகளும் கப்பல் ஊழியர்களும் பிணைக் கைதிகளாக்கப்பட்டுள்ளனர்.

உக்ரேனிய ஆயுதத் தளவாட சரக்குக்கப்பல் கடத்திச்செல்லப்படுவதற்கு ஒரு மாதம் முன்னதாக, ஹாங்காங்கில் பதிவு செய்யப்பட்ட "எம்.வி. ஸ்டோல்ட்வலோர்" என்ற இரசாயன சரக்குக் கப்பல் கடற்கொள்ளையர்களால் சிறை பிடிக்கப்பட்டுள்ளது. இக்கப்பலின் தலைமை மாலுமியான கேப்டர் பிரபாத்குமார் கோயல் இந்தியராவார். அவருடன் சேர்த்து இதர மாலுமிகளும் ஊழியர்களுமாக 21 பேர் அக்கப்பலில் சிறையிடப்பட்டுள்ளனர். டேராடூனைச் சேர்ந்த பிரபாத்குமாரின் மனைவி சீமா, தனது 7 வயது மகனுடன் கடந்த இரு மாதங்களாக அமைச்சர்கள் - அதிகாரிகளிடம் தனது கணவரைப் பாதுகாப்பாக மீட்டுத் தருமாறு கோரி கண்ணீருடன் அலைந்து கொண்டிருக்கிறார். அவரைப் போலவே பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு கப்பல் ஊழியர்களின் குடும்பத்தினர் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். மைய அரசோ, சிறைபிடிக்கப்பட்டுள்ள இந்தியர்களை மீட்க அனைத்துலக நாடுகளின் உதவியைக் கோரியுள்ளதாக அறிவித்துள்ளது.

ஏடன் வளைகுடாவில் அடுத்தடுத்து நடந்து வரும் இத்தகைய தாக்குதல்களுக்கு எதிராக பல்வேறு நாடுகளும் நடவடிக்கை எடுக்குமாறு முறையிட்டதும், ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் அவசரமாகக் கூடி, போர்க் கப்பல்களை ஏடன் வளைகுடாவுக்கு அனுப்புமாறு உலக நாடுகளிடம் கோரியுள்ளது. அதைத் தொடர்ந்து அனைத்துலக போர்க் கப்பல்களுடன் "நேட்டோ" நாடுகளின் சார்பில் 7 போர்க் கப்பல்கள் ஏடன் வளைகுடாவுக்கு விரைந்துள்ளன. கடற் கொள்ளையர்களை மிரட்டிப் பணியவைக்க இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், பிணைக் கைதிகளையும் சரக்குக் கப்பல்களையும் பத்திரமாக மீட்க அக்கடற் கொள்ளையர்களுடன் பேரங்களும் பேச்சு வார்த்தைகளும் நடந்து வருகின்றன.

ஏடன் வளைகுடாவை ஒட்டியுள்ள சோமாலிய நாட்டின் சில இனக்குழு படையினரே இத்தகைய கப்பல் கடத்தல் - சிறைப்பிடித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். "நாங்கள் கடற்கொள்ளையர்களோ தீவிரவாதிகளோ அல்ல; எமது நாட்டின் கடற்கரைப் பகுதிகளில் கொடிய நச்சுக் கழிவுகளை இரகசியமாகக் கொட்டிவிட்டுச் செல்லும் சரக்குக் கப்பல்களையே நாங்கள் சிறைபிடித்துள்ளோம். இந்நச்சுக் கழிவுகளால் சோமாலிய நாடும் மக்க

www.padippakam.com



செங்கடல் பகுதியில் கப்பல்களைத் தாக்கி சிறைபிடிக்க அலையும் சோமாலியா நாட்டைச் சேர்ந்த யுத்த பிரபுக்கும்பல்

ளும் பேரழிவுக்குள் தள்ளப் பட்டுள்ளனர். அதிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் மீட்டு புனருருவாக்கவே கோடிக்கணக்கில் பிணைத் தொகை கோருகிறோம்'' என்று இனக்குழு படையினர் நியாயவாதம் பேசுகின்றனர்.

1990-களிலிருந்து சோமாலியாவில் பல்வேறு இனக் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற ஆயுதமேந்தி உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வருகின்றன. பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் பீடித்துள்ள ஏழை நாடான சோமாலியாவில், தொடரும் உள்நாட்டுப் போரின் காரணமாக அந்நாட்டு அரசே செயலிழந்து பல வீனப்பட்டு நிற்கிறது. நாட்டைப் பல கூறுகளாக்கிக் கொண்டு இனக் குழுக்களின் யுத்தப் பிரபுக்களே நாட்டாமை செலுத்தி வருகின்றனர். இந்நிலைமையைச்சாதகமாக்கிக் கொண்டு ஏகாதிபத்திய நாடுகளின் பல்வேறு நிறுவனங்கள், தமது நாடுகளின் நச்சுக் கழிவுகளை ''மறுசுழற்சிக் கழிவுகள்'' என்ற பெயரில் சோமாலிய கடற்கரையில் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் கொட்டிவிட்டுச் செல்கின்றன. அரசு எந்திரம் பலவீனமான நிலையில் இருப்பதால் அமைச்சர்களும் அதிகார வர்க்கமும் இச்சதிச் செயலுக்கு விலை போகின்றனர்.

கடந்த 2004-ஆம் ஆண்டில் சோமாலியாவை சுனாமி தாக்கிய போது, ஏற்கெனவே பல ஆண்டுகளாக கடலில் கொட்டப்பட்டிருந்த நச்சுக் கழிவுகள் மலைபோல கரை ஒதுங்கின. கடல் நீரால் அரிக்கப்பட்டு சிதிலமடைந்த மிகப் பெரிய இரும்புப் பெட்டகங்களோடு நச்சுக் கழிவுகளும் சோமாலியாவின் வடக்கிலுள்ள புன்த்லாந்து கடற்கரையெங்கும் குவிந்தன. அதன் பின்னரே, நச்சுக் கழிவுகள் ஏடன் வளைகுடாவில் கொட்டப்பட்ட உண்மைகள் அம்பலமாகி உலகமே அதிர்ச்சியடைந்தது.

யுரேனிய கதிர்வீச்சுக் கழிவுகள், காரீயம், காட்மியம், பாதரசம் முதலான நச்சுக்கழிவுகள், ஆலைகள் - மருத்துவ மனைகளின் கழிவுகள், இரசாயனக் கழிவுகள் என பல்வேறு கொடிய கழிவுகள் கடற்கரைப் பகுதியில் குவிந்து, சோமாலிய மக்கள் தீராத நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். குறிப்பாக யுரேனிய கதிர்வீச்சுக் கழிவுகளால், சோமாலிய மக்கள் அடுத்தடுத்து மாண்டு வருவதோடு, இக்கடற்கரைப் பகுதியே நஞ்சாகிப் போயுள்ளது.

சோமாலியாவுக்கான ஐ.நா. தூதராகச் செயல்பட்டு வரும் அகமதோ அப்துல்லா, ''பல ஆசிய-ஐரோப்பிய தனியார் நிறுவனங்கள் அணுக் கழிவுகள் உள்ளிட்ட கொடிய நச்சுக் கழிவுகளை கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக இரகசியமாக ஏடன் வளைகுடாவில் கொட்டியுள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது'' என்று வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார். ஐ.நா. சுற்றுச் சூழல் திட்டத்தின் (UNEP) பிரமுகரான நிக் நுட்டல் என்பவர், ''நச்சுக் கழிவுகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பைப் பற்றி எங்களால் முழுமையாக மதிப்பீடு செய்ய முடியவில்லை. சோமாலிய கடற்கரைப் பகுதியில் அரசு ரீதியாகப் பாதுகாப்பு இல்லை. உள்நாட்டுப் போர் காரணமாக சுற்றுச் சூழல் இயக்கங்களும் இப்பிரச்சினையில் தலையிட முடியவில்லை'' என்கிறார்.

தற்போது சோமாலிய யுத்தப் பிரபுக்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ள ஹாங்காங் மற்றும் உக்ரேனிய சரக்குக் கப்பல்கள் மட்டுமல்ல; சுவிஸ் நாட்டின் ''அக்யர்'', இத்தாலிய நாட்டின் ''புரோகிரசோ'' ஆகிய கப்பல்களும், இன்னும் சுவீடன், போர்ச்சுகல், பின்லாந்து நாடுகளின் கப்பல்களும் யுத்தப் பிரபுக்களால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. இந்நாடுகள் 1992-இல் பேசல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இவ்வொந்தப்படி, நச்சுக் கழிவுகளை இந்நாடுகள் எந்த வழியிலும் வர்த்தகம் செய்வதோ, மறுசுழற்சிக்காக ஏற்றுமதி செய்வதோ கூடாது; போர் மற்றும் பதற்ற நிலை நீடிக்கும் உலகின் எந்தப் பகுதிக்கும் அனுப்பக் கூடாது. ஆனால், ஒப்பந்த மை உலருவதற்குள்ளாகவே இந்நாடுகள் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் நச்சுக் கழிவுகளைக் கொட்டியுள்ளன. எந்த நாட்டின் கப்பல் என்பதற்கான ஆதாரம் இல்லாமல், சட்டவிரோதமாகவும் இரகசியமாகவும் இந்நாடுகள் நச்சுக் கழிவுகளை ஏடன் வளைகுடாவில் கொட்டியுள்ளன.

சோமாலியாவில் 2004-ஆம் ஆண்டில் நடந்த சுனாமி தாக்குதலும், அதைத் தொடர்ந்து இனக்குழு யுத்தப் பிரபுக்கள் நச்சுக் கழிவு கப்பல்களைச் சிறைபிடித்து பிணைத் தொகை கேட்பதும் நடந்திராவிட்டால், இந்தக் கொடுமைகள் பற்றிய உண்மைகள் உலகுக்கே தெரிந்திருக்காது. யுத்தப் பிரபுக்கள், நச்சுக் கழிவுக் கப்பல்களைச் சிறைபிடித்த பிறகுதான், ஐ.நா. மன்றமும் ஏடன் வளைகுடாவில் நச்சுக் கழிவுகள் கொட்டப்படுவதாக ஒப்புக் கொள்கிறது. ஆனால், குற்றவாளிகளான ஏகாதிபத்திய நிறுவனங்கள் மீது போர் தொடுப்பதை விட்டு, யுத்தப் பிரபுக்கள் மீது போர் தொடுக்க உலக நாடுகளைக் கோருகிறது.

மறுபுறம், நச்சுக் கழிவுக் கப்பல்களைச்சிறைபிடித்து, அபராதம் விதித்து, அத்தொகையைக் கொண்டு சோமாலியா நாட்டையும், மக்களையும் மீட்டு புனருருவாக்கப் போவதாகக் கூறும் யுத்தப் பிரபுக்கள், நாட்டின் மீதும் மக்களின் மீதும் அக்கறை கொண்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளல்ல. உள்நாட்டுப் போரினால் நிலைகுலைந்து, பட்டினிச் சாவுக்குத் தள்ளப்பட்ட சோமாலிய மக்களுக்கு ஐ.நா. மன்றம் அனுப்பும் உணவு மற்றும் நிவா

www.padippakam.com

ரணப் பொருட்களையே சூறையாடி ஆதாயமடையும் கும்பல்கள்தான் அவை. தமது ஆதிக்கத்துக்கு இடையூறாக உள்ள பன்னாட்டு 'அமைதிப் படைகள்' மீது இக்கும்பல்கள் தாக்குதல் தொடுக்கின்றனவே தவிர, ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்கு எதிராக சோமாலிய மக்களைத் திரட்டி விடுதலைப் போரைத் தொடுப்பதற்கான திட்டம் எதுவும் இக்கும்பல்களிடம் இல்லை. நச்சுக் கழிவுக் கப்பல்களைச் சிறைபிடித்து பிணைத் தொகை கோருவதன் மூலம் கோடிகோடியாய் ஆதாயமடைந்து தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்திக் கொள்ளவும், தமது கிரிமினல் குற்றங்களை மறைத்துக் கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளாகக் காட்டிக் கொள்ளவும் இம்மாஃபியா கும்பல்கள் அண்மைக் காலமாக சூரத்தனம் காட்டி வருகின்றன.

**யுரேனிய கதிர்வீச்சுக் கழிவுகள், காரீயம், பாதரசம் உள்ளிட்ட இரசாயனக் கழிவுகள், எனப் பல்வேறு வகையான நச்சுக்கழிவுகளைக் கொட்டும் குப்பைத்தொட்டியாக சோமாலியா நாட்டை ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்தி வருகின்றன.**

சோமாலியா மட்டுமல்ல; நைஜீரியா, கினியா - பிசாவ், ஜிபொடி, செனகல் முதலான பல நாடுகளிலும் அணு உலைக் கழிவுகள் உள்ளிட்டு கொடிய நச்சுக் கழிவுகளை ஏகாதிபத்திய நிறுவனங்கள் கொட்டி வருகின்றன. இந்நச்சுக் கழிவுகளை செயலிழக்க வைத்து நீர்த்துப் போகச் செய்வதற்கு ஏகாதிபத்திய நிறுவனங்கள் பல்லாயிரம் கோடிகளைச் செலவிட வேண்டியிருப்பதால், அதைவிட மலிவான முறையில் இரகசியமாக ஏழை நாடுகளில் கொட்டும் நோக்கில் இந்நிறுவனங்கள் நச்சுக் கழிவு ஏற்றுமதியைச் செய்து வருகின்றன. தனியார்மயம் - தாராளமயத்தால் ஏழை நாடுகளின் அரசுகளது கட்டுப்பாடுகளும் கண்காணிப்புகளும் நீக்கப்பட்டுள்ளதால், இந்நச்சுக் கழிவு ஏற்றுமதி வியாபாரம் கொடி கட்டிப் பறக்கிறது. எந்தவொரு தனிநபரும் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் இறக்குமதி செய்து கொள்ள தாராள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதைச் சாதகமாக்கிக் கொண்டு, பல ஆப்பிரிக்க ஏழை நாடுகளின் விவசாயிகளை விலைபேசி, அவர்களது நிலத்தில் ஆலைக் கழிவுகள் என்ற பெயரில் கொடிய நச்சுக் கழிவுகளைக் கொட்டும் கொடுமையும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. ஆயுத வியாபாரம், போதை மருந்து வியாபாரம் ஆகியவற்றைவிட கொழுத்த லாபம் தரும் தொழிலாக நச்சுக் கழிவு வியாபாரம் வளர்ந்து விட்டது.

பல்வேறு ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் காடாக உள்ள இந்தியாவில், காகிதக் கழிவுகள் என்ற பெயரில் கொடிய நச்சுக் கழிவுகள் ஏகாதிபத்திய நிறுவனங்களால் கொட்டப்பட்டு வரும் கொடுமைகள் கேள்விமுறையின்றித் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியப் பெருங்கடல் பகுதியில்தான் நச்சுக் கழிவுக் கப்பல்கள் அதிகமாக மிதப்பதாக பசுமை அமைதி இயக்கம் அறுதியிட்டுக் கூறுகிறது. இவை தவிர இந்திய அணுசக்தித் துறை ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து எவற்றை இறக்குமதி செய்கிறது, அவை பாதுகாப்பான முறையில் உள்ளதா என்பதைப் பற்றி அறிந்து கொள்ள இந்தியக் குடிமகனுக்கு உரிமையில்லை. வரம்பற்ற அதிகாரத்தைக் குவித்துக் கொண்டு தேசப் பாதுகாப்புக்கான ரகசியம் என்ற பெயரில் அணுசக்தித் துறை அதிகாரிகள் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து நச்சுக் கழிவுகளை இறக்குமதி செய்தாலும் அதைத் தடுக்க பிரதமருக்கும் 'குடியரசு'த் தலைவருக்கும் கூட அதிகாரமில்லை. ஒருபுறம் தனியார்மயம் - தாராளமயத்தாலும், மறுபுறம் அணுசக்தித் துறையின் இரகசிய செயல்பாடுகளாலும் இந்திய நாடு, ஏகாதிபத்தியங்களின் குப்பைத் தொட்டியாக மாற்றப்பட்டுள்ளது.

பூவுலகை ஒரு பேரபாயம் கவ்வியுள்ளது. அணுஆயுத யுத்தம், இரசாயன யுத்தம் முதலானவற்றைப் போலவே நச்சுக் கழிவு யுத்தமும் கொடியது. இனம் புரியாத நோய்களும் நிலமும் நீரும் நஞ்சாகிப் போவதும் அதன் உடனடி விளைவுகள். அனைத்துலக மக்கள் விழித்தெழுந்து மனித குலத்தின் கொடிய எதிரிகளான ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக போர் தொடுக்காவிட்டால், பேரழிவுகளையும் ஏழை நாடுகள் சுடுகாடாகிப் போவதையும் தடுக்கவே முடியாது.

● குமார்

சிறைபிடிக்கப்பட்டுள்ள எம்.வி.ஃபைனா கப்பலும், அதில் பணியாற்றும் ஊழியர்களும்.



www.padippakam.com

# மின்வெட்டு: பற்றாக்குறையா? மோசடியா?

**பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தடையற்ற மின்சாரம் வழங்குவதற்காகத் தமிழகம் இருளில் தள்ளப்படுகிறது.**

குப்புறத் தள்ளிய குதிரை குழியையும் பறித்த கதையாக, ஏற்கெனவே தமிழகத்தில் கடும் மின்வெட்டு நிலவுவது போதாதென்று, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் மின்சாரத்துக்குக் கட்டுப்பாட்டு முறையைக் கொண்டுவர தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

ஏற்கெனவே நிலவி வரும் கடுமையான மின்வெட்டின் காரணமாக, தமிழகத்தின் தொழிலும் விவசாயமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் உற்பத்தி மூன்றில் ஒரு பங்கு குறைந்து விட்டது. கோவை, சேலம், ஈரோடு, கரூர், விருதுநகர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் ஜவுளித் தொழிலும், ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழிலும் ஏறத்தாழ முடங்கி விட்டன. தீப்பெட்டி, உப்பு, மீன் பதப்படுத்தல், அச்சகம் முதலான சிறு தொழில்கள் அனைத்தும் நசிந்து விட்டது. பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் வேலையிழந்து வாழ்விழந்து நிற்கின்றன. பல கிராமங்கள் மின்வெட்டால் வாரக்கணக்கில் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. மின்வெட்டால் குடிநீர் விநியோகம் பல நாட்களுக்குத் தடைப்பட்டு மக்கள் அவதிப்படுகிறார்கள்.

இந்நிலையில் கிராமப்புறங்களில் 10 முதல் 14 மணி நேரமும், பெருநகரங்களில் 4 மணி நேரமும், சிறு மற்றும் பெரிய ஆலைகள், வணிக வளாகங்களில் 40 சதவீதமும் மின்வெட்டைச் செயல்படுத்தப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதன் விளைவாக ஏற்கெனவே நசிந்து கிடக்கும் சிறு தொழில்கள் தற்போதைய கட்டுப்பாட்டு முறையால் முற்றாக முடங்கிப் போகும். இச்சிறுதொழில் நிறுவனங்களில் பணியாற்றும் பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்வு இருண்டு போய்விடும்.

தொடரும் இம்மின் பற்றாக்குறைக்கான காரணம் என்ன? புதிய தொழிற்சாலைகள் அதிக அளவில் தொடங்கப்பட்டுள்ளதாலும், ஏ.சி., ஃப்ரிட்ஜ் முதலானவற்றால் வீடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் மின்சாரத்தின் அளவு 50% அதிகரித்துள்ளதாலும் மின்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர் ஆற்காடு வீராசாமி. தற்போது தமிழகத்துக்குக் குறைந்தபட்சம் 9500 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் கிடைப்பது ஏறத்தாழ 7500 மெகாவாட் மட்டுமே. அதாவது, ஏறத்தாழ 2000 மெகாவாட் அளவுக்குப் பற்றாக்குறை நீடிக்கிறது.

1996 முதல் 2006 வரையிலான பத்தாண்டு காலத்தில் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் மாறி மாறி ஆட்சி செய்தபோது உபரியாக மின் உற்பத்தி இருந்ததால், புதிய மின் திட்டங்களை அவை உருவாக்கவில்லை. மின்துறையில் தனியார்மயம் புகுத்தப்பட்டு, தனியார் காற்றாலை நிறுவனங்களிலிருந்து கூடுதல் தொகைக்கு மின்சாரத்தைப் பெற்று, அதையே உபரியான மின் உற்பத்தி என்று கழக ஆட்சிகள் பீற்றிக் கொண்டன. ஆனால், காற்றின் வீச்சு குறைந்து, இத்தனியார் காற்றாலைகளில் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதும், நட்டத்தைத் தவிர்க்க அந்நிறுவனங்கள் தொழிலையே நிறுத்தி விட்டன. அத்தனியார் நிறுவனங்களை மின் உற்பத்திக்குச் சார்ந்திருந்த தமிழக அரசு, இப்போது பற்றாக்குறை பல்லவி பாடுகிறது.

இது ஒருபுறமிருக்க, ஏறத்தாழ 20 சதவீத மின் பற்றாக்குறையால் தமிழகத்தின் தொழிலும் விவசாயமும் இவ்வளவு பாதிப்படையக் காரணம் என்ன? சிறு-குறுந்தொழில்களை நம்பியுள்ள பல லட்சக்கணக்கான குடும்பங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு கடன் சுமையில் தத்தளிக்கக் காரணம் என்ன?

இந்துக் கடவுளாகிய சிவன், பிள்ளைக் கறி வேண்டுமென கேட்டபோது சொந்த மகனின் குரல் வளையை அறுத்து பக்தியோடு கறி விருந்து படைத்த சிறுதொண்ட நாயனாரைப் போல, தற்போது பன்னாட்டுக் கம்பெனிகளின் நலனுக்காக தமிழகத்தின் தொழிலையே நசிய விட்டு பக்தியோடு சேவை

**சிறுதொழில் நிறுவனங்கள் மின்வெட்டைக் கண்டித்து நடத்திய கடையடைப்பு -ஆர்ப்பாட்டத்தையொட்டி, கோவை நகரில் நடந்த பிரம்மாண்டமான பேரணி.**



www.padippakam.com



மின்வெட்டைக் கண்டித்து நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் நெடுஞ்சாலையில் மறியல் செய்த விசைத்தறி உற்பத்தியாளர்கள் மீது போலீசு நடத்திய தடியடி.

செய்கிறது தி.மு.க. அரசு. பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு மின்வெட்டின் பாதிப்பு சிறிதும் இல்லாமல் தடையின்றி மின்சாரம் தாராளமாக வழங்கப்படுகிறது. அதுவும் ஒரு யூனிட்டுக்கு ரூ. 1.60 வீதம் வழங்கப்படுகிறது. இதுதவிர, கட்டணச் சலுகைகள் தனி. ஆனால், உள்நாட்டுத் தொழில் நிறுவனங்களுக்குத் தொடர் மின் வெட்டு. கட்டணமோ ஒரு யூனிட்டுக்கு ரூ. 4.85 வீதம் வசூலிக்கப்படுகிறது.

மறுபுறம், ஏறத்தாழ 20% ஆக உள்ள மின் பற்றாக்குறையை உயர்மின்அழுத்தம், தாழ்மின் அழுத்தம் ஆகியவற்றுக்குச் சமமாகப் பிரிக்காமல், மொத்த பற்றாக்குறையும் தாழ்மின் அழுத்தத்தில் இயங்கும் துறைகளின் தலையில் சுமத்தப்படுகிறது. பன்னாட்டு பெருந்தொழில் நிறுவனங்கள், தரகுப் பெருமுதலாளிகளின் சிமெண்ட் - உருக்காலைகள், ஐந்து நட்சத்திர விடுதிகள், தகவல்-தொழில் நுட்பத்துறை நிறுவனங்கள் முதலானவற்றுக்கு உயர் மின் அழுத்தம் மூலம் மின்சாரம் விநியோகிக்கப்படுகிறது. வீடுகள், கடைகள், உணவு விடுதிகள், சிறு தொழிற்கூடங்கள், பொது மருத்துவமனை, விவசாயம், குடிநீர் விநியோகம் முதலானவை தாழ் மின் அழுத்த மின்சாரத்தின் மூலம் இயக்கப்படுகின்றன. மொத்த மின் உற்பத்தியில் உயர் மின் அழுத்தத்தின் மூலம் ஏறத்தாழ 85% மின்சாரமும், தாழ்மின் அழுத்தத்தின் மூலம் ஏறத்தாழ 15% மின்சாரமும் விநியோகிக்கப்படுகின்றன.

தற்போது கிடைக்கும் 7500 மெகாவாட் மின்சாரத்தை மேற்கூறிய விகிதப்படி, உயர்மின் அழுத்த விநியோகத்துக்கு 6375 மெகாவாட், தாழ்மின் அழுத்த விநியோகத்துக்கு 1125 மெகாவாட் என பங்கிட்டு மின்சாரத்தை விநியோகிக்க வேண்டும். ஆனால், தாழ்மின் அழுத்த விநியோகத்துக்கு ஏறத்தாழ 250 மெகாவாட் மின்சாரமே ஒதுக்கப்பட்டு, எஞ்சிய அனைத்தும் உயர்மின் அழுத்த விநியோகத்துக்கு அள்ளி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் தாழ்மின் அழுத்த விநியோகம் ஏறத்தாழ 78% அளவுக்குப் பற்றாக்குறையாகி, தமிழகத்தின் விவசாயமும் சிறு தொழில்களும் இருண்ட காலத்திற்குள் தள்ளப்பட்டு வருகின்றன.

1973-74-இல் தமிழகத்தில் 30% மின்வெட்டு நடைமுறைக்கு வந்தது. இருப்பினும், சிறு தொழில்கள் - வீடுகளுக்கான மின்சாரம் மிகக் குறைந்த மின்வெட்டுடன் தடையின்றிக் கிடைத்தது. உயர்மின் அழுத்தம், தாழ்மின் அழுத்தம் ஆகியவற்றுக்குச் சமமாக பற்றாக்குறையைப் பங்கிட்டதால், அப்போது பாதிப்பு கடுமையாக இல்லை. மேலும், உயர்மின் அழுத்த மின்சாரத்தைப் பயன்படுத்தும் பெருந்தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும், மின்வெட்டுக்கு முந்தைய ஓராண்டு காலத்தில் பயன்படுத்திய மின்சாரத்தின் சராசரியைக் கணக்கிட்டு அதில் 30% அளவுக்குக் குறைத்து மின்சாரம் வழங்கப்பட்டது. இதனைக் "கோட்டா" முறை என்று குறிப்பிட்ட அரசு, அனைத்து உயர் மின் அழுத்த மின் இணைப்புகளுக்கும் கோட்டாவைத் தீர்மானித்து, பயனீட்டாளர்களுக்கு முன்கூட்டியே அறிவித்ததோடு, அதை மீறினால் மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்றும் எச்சரித்தது.

ஆனால், இன்று அத்தகைய கோட்டா முறை கூட இல்லாமல், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் தரகு முதலாளிகளின் பெருந்தொழில் நிறுவனங்களுக்கும் எவ்விதத் தடையோ, கட்டுப்பாடோ இல்லாமல் தாராளமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. மறுபுறம், தமிழகத்தின் சிறு-குறுந் தொழில்களை அரசு இருளில் மூழ்கடித்து வருகிறது.

"கடந்த 10 மாதங்களாக மின்சாரம் சீராகக் கிடைப்பதில்லை. குறுந்தொழிலை நம்பியுள்ள பல லட்சக்கணக்கான குடும்பங்கள் இன்று கடனில் தத்தளிக்கின்றன. நசிந்துவிட்ட இத்தொழில்களைக் காப்பாற்ற இலவச மின்சாரம் வழங்க வேண்டும்" என்கிறார், தமிழக ஊரகத் தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவர் ஜேம்ஸ். தமிழ்நாடு வணிகர் சங்கப் பேரவைத் தலைவர் வெள்ளையன், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு வழங்கப்படும் மின்சாரம் மற்றும் உள்நாட்டுத் தொழிலுக்கு ஒதுக்கப்படும் மின்சாரம் ஆகியன பற்றி அரசு பகிரங்க வேண்டும் என்கிறார். ஆனால், தி.மு.க. அரசு இவை பற்றி மௌனம் சாதிப்பதோடு உள்நாட்டுத் தொழில் முனைவோரின் அதிருப்தியைச் சாந்தப்படுத்த பேச்சுவார்த்தை நாடகமாடுகிறது. மறுபுறம், மின்துறையைத் தனியார்மயமாக்கும் நோக்கத்துடன் இத்துறையை மூன்றாகப் பிரிக்கவும் திட்டமிட்டு வருகிறது.

தொடரும் மின்வெட்டுக்கு எதிராக உள்நாட்டு தொழில் முனைவோரும் உழைக்கும் மக்களும் போராடி வரும் நிலையில், மக்களின் அதிருப்தியைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயமடையும் நோக்கத்துடன் ஓட்டுக் கட்சிகளும் கோமாளித்தனமான போராட்டங்களை நடத்தி வருகின்றன. ஆனால், இக்கட்சிகள் எவையும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்படுவதைப் பற்றியோ, உள்நாட்டுத் தொழில்கள் புறக்கணிக்கப்படுவதைப் பற்றியோ வாய் திறப்பதில்லை. தி.மு.க. அரசின் காலைச் சுற்றிவரும் தி.க. வீரமணியோ, மின்வெட்டுக்கு எதிரான உழைக்கும் மக்களின் திடீர் சாலை மறியல போராட்டங்களைத் தடை செய்து ஒடுக்க வேண்டும் என்று குரைக்கிறார். இத்துரோகிகளை அம்பலப்படுத்தி, உள்நாட்டுத் தொழிலை நாசமாக்கும் தி.மு.க. அரசின் மின் கொள்கைக்கு எதிராக உழைக்கும் மக்கள் ஐக்கியப்பட்டு தொடர்ந்து போராடுவதே இன்றைய உடனடித் தேவையாக உள்ளது.

● சுப்பு

www.padippakam.com

# உத்தப்புரம்:

# இதுதான் சூத்திர ஆட்சி!

**ஆதிக்க சாதிவெறியர்களுக்குச் சாதகமாகத் தாழ்த்தப்பட்டோரை வேட்டையாடுகிறது, தமிழக போலீசு.**

மதுரை மாவட்டம், உத்தப்புரத்தில் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சித்ரா எனும் இளம்பெண் காச நோயினால் இறந்து விட்டார். அப்பெண்ணின் பிணத்தைப் பார்த்து அழுதிடக் கூட அவரைப் பெற்ற தந்தை வரவில்லை. உடன்பிறந்த சகோதரர்கள் மூவரும் வரவில்லை. அவர்கள் மட்டுமல்ல, பிணத்தைப் புதைக்கக் கூட அங்கு ஆண்களே வர முடியவில்லை.

போலீசின் தேடுதல் வேட்டைக்குப் பயந்து தாழ்த்தப்பட்ட ஆண்கள் அனைவரும் காடுகளில் ஒளிந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள நிலையில் பெண்களே பாடைகட்டி எடுத்துச் சென்று சித்ராவை அடக்கம் செய்துள்ளனர்.

உத்தப்புரத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர், கொடிக்கால் பிள்ளைமார் குடியிருப்பிற்குள் வரக்கூடாதென்பதற்காக, 300 அடி நீளச் சுவர் ஒன்றை எழுப்பி 18 ஆண்டுகளாக சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தனர், அச்சாதியினர். இந்த ஆண்டு ஏப்ரல்-மே மாதங்களில் 'மார்க்சிஸ்ட்' கட்சி இச்சுவரை இடிக்கக் கோரிப் போராடியது. 'மார்க்சிஸ்ட்' கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ்காரத் அங்கு வரப் போவதாய் அறிவித்தார். உடனே, வெறும் 15 அடி நீளச்சுவரை மட்டும் அவசரமாய் தமிழக அரசே இடித்துப் பொதுப்பாதை ஒன்றை உருவாக்கியது.

சுவர் இடிக்கப்பட்டதைக் கண்டித்து ஆதிக்கசாதியினர் மலையில் குடியேறப் போவதாய் நாடகம் ஆடினர். ரேசன் கார்டுகளைத் திருப்பித்தரப் போவதாக அரசை மிரட்டினர். வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் அவர்களை உள்ளே தள்ளாமல் அரசு அவர்களிடம் சமரசம் காணப் பேச்சு வார்த்தை நடத்தியது. எண்ணிக்கையில் சிறுபான்மையினரான கொடிக்கால் பிள்ளைமாருக்கு தேவர் சாதி உள்ளிட்ட இதர ஆதிக்க சாதிகள் கொம்பு சீவி விடும் வேலையைச் செய்தன. ஊரைவிட்டு வெளியேறி மலைப் பகுதியில் சென்று தங்கிய அவர்களுக்கு உணவும் மருந்தும் தந்து டாக்டர் சேதுராமன் என்ற தேவர் சாதித் தலைவர் அன்புக்கரம் நீட்டினார். பத்திரிக்கைகளோ 'மலையில் குடியேறிய மக்கள் வாடிவதங்குவதாக'க் குடம் குடமாய்க் கண்ணீர் வடித்தன.

உத்தப்புரத்தில் சுவர் இடிபட்டதும் தமது சாதியின் ஆதிக்கத்தையும் எங்கே அசைத்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் அப்பகுதியிலுள்ள குமணன் தொழு என்ற ஊரில் தேவர்சிலையைத் தேவர் சாதி வெறியர்களே அவமரியாதை செய்து விட்டு, தாழ்த்தப்பட்டோர் மீது குற்றம் சாட்டி சாலை மறியல் செய்தனர். சமரசம் பேசவந்த அதிகாரிகளிடம் அவர்கள், "தாழ்த்தப்பட்டவர்கள் வீட்டு விசேசங்களில் வெடிவெடிக்கக்கூடாது" போன்ற கோரிக்கைகளை வைத்தனர்.

செப்டம்பர் மாதம் உத்தப்புரத்தில் தாழ்த்தப்பட்டோர் வீட்டுத் திருமணம் ஒன்றில் வெடிவெடித்தபோது, உத்தப்புரத்தின் ஆதிக்கசாதியினர் தகராறு செய்துள்ளனர். தகராறு செய்தவர்களைக் கைது செய்திருக்க வேண்டிய போலீசு துறையோ, தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த வைரம், மகாலிங்கம் ஆகியோரைக் கைது செய்தது.

இடிக்கப்பட்ட சுவரை ஒட்டிய பகுதியில் நிலத்தகராறு உருவாகி, செப்டம்பர் இறுதியில் இருதரப்பினரும் மோதிக்கொண்டனர். இருதரப்பிலும் 15 பேர்கள் வீதம் 30 பேர் கைது செய்யப்பட்டனர்.

அக்டோபர் 9, 10 ஆகிய தேதிகளில் பிள்ளைமார்கள் முத்தாலம்மன் கோவிலுக்கு ரூ.12 இலட்சம் செலவில் குடமுழுக்கு நடத்த முடிவு செய்து, கோவில் சுற்றுச் சுவருக்கு வெள்ளை அடிக்கத் தொடங்கினர். முத்தாலம்மன் கோவில் பிள்ளைமார்களுக்குச் சொந்தமானது என்றாலும், அக்கோவிலுக்கு அருகில் இருக்கும் அரசமரம் தாழ்த்தப்பட்டோருக்குச் சொந்தமானது. அம்

**போலீசின் தேடுதல் வேட்டைக்குப் பயந்து தாழ்த்தப்பட்ட ஆண்கள் அனைவரும் காடுகளில் ஒளிந்து வாழும் நிலையில், மறைந்த சித்ராவின் சடலத்தை சவ வண்டியில் வைத்து தாழ்த்தப்பட்ட பெண்களே ஊர்வலமாக எடுத்துச் செல்லும் அவலம்.**





படிப்பகம்

www.padippakam.com



தாழ்த்தப்பட்டோர் மீதான போலீசின் தாக்குதலைக் கண்டித்து
சி.பி.எம்.கட்சியின் ஆர்ப்பாட்டம்: சாதிவெறியர்களை எதிர்த்துப் போராடாமல்,
அவர்களின் ஏவல் நாயை எதிர்க்கும் செக்குமாட்டுப் பாதை.

மரத்தை வழிபட அவர்கள் கோவிலுக்கு அருகில் வரக்கூடாது என்று பிள்ளைமார் கட்டுப்பாடு விதித்ததால் ஏற்பட்ட தகராறு இன்னும் தீராமல் இருந்து வருகிறது.

இந்நிலையில் பொதுச்சுவர் என்று கூறப்படும் கோவில் சுவருக்கு வெள்ளை அடிப்பதனை தாழ்த்தப்பட்டோர் எதிர்க்கவே, இரு தரப்பினருக்கிடையே மீண்டும் மோதல் மூண்டது. இரு தரப்பினரும் கற்களாலும் நாட்டுவெடிகுண்டுகளாலும் தாக்கிக் கொண்டனர். போலீசார் துப்பாக்கியால் வானை நோக்கி சுட்டுக் கூட்டத்தைக் கலைத்தனர்.

கிராம நிர்வாக அதிகாரி சீனியப்பன், தெற்குத்தெருவில் வாழும் தாழ்த்தப்பட்டோர் மீது மட்டும் குறிப்பாகப் புகார் கொடுத்தார். இதனை அடுத்து, தெற்குத்தெருவில் இருக்கும் ஆண்கள் அனைவரும் ஊரை விட்டு ஓடி விட்டனர். பெண்கள், குழந்தைகள் மட்டுமே இருந்தனர். போலீசாரோ சாதிவெறியுடன் தாழ்த்தப்பட்டோர் வீடுகளை அடித்து நொறுக்கினர். சுமார் 76 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. வீடுகளில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்விசிறிகள், குழல் விளக்குகள், ஜன்னல் கதவுகள் அனைத்தும் சிதைக்கப்பட்டன. சுவிட்சுகளையும் பம்புசெட்டுகளையும் கூட போலீசார் விட்டுவைக்கவில்லை.

ஓடிஒளிந்து கொண்ட ஆண்கள் எங்கே இருக்கின்றனர் என்பது தெற்குத் தெருப் பெண்கள் யாருக்குமே தெரியாது. சம்பவம் நடந்து இரண்டு வாரங்கள் வரை மாவட்ட ஆட்சியர் அங்கு வரவில்லை. போலீசாரின் தாக்குதலில் காயமடைந்த தாழ்த்தப்பட்ட பெண்களுக்கு மருத்துவ வசதிகளைக்கூட அரசு செய்து தரவில்லை. 'மார்க்சிஸ்ட்' கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மோகன், மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்தார். அரசு கொடுத்த அழுத்தத்தால் அதுவும் மறுநாளே நிறுத்தப்பட்டு விட்டது.

இந்நிலையில்தான் சித்ரா இறந்து போனார். அவரின் இறுதிச் சடங்குக்குக் கூட ஆண்களை வரவிடாமல் போலீசு குவிக்கப்பட்டது. வேறுவழியின்றிப் பெண்களே சவ ஊர்வலமும், இறுதிச்சடங்கும் செய்தனர்.

கோவில் தகராறில் இரண்டு தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்காமல், பெண்கள் உள்ளிட்ட தாழ்த்தப்பட்டோர் மீது மட்டுமே வழக்குகள் போட்டு சாதிக்கறை படிந்த போலீசு அவர்களைப் பழிவாங்கியுள்ளது. முன்னாள் எம்.எல்.ஏ. முருகவேல் ராஜன் உட்பட தலைமறைவாய் இருந்த சுமார் 116 பேர்கள் மீது 520 வழக்குகளைப் போட்டுள்ளது.

இத்தனை துயரங்களையும் தாழ்த்தப்பட்டோர் அனுபவித்துக் கொண்டிருக்கையில், பிள்ளைமார்களோ கும்பாபிசேகம் நடத்தியே தீர்வது என்று அடம் பிடித்தனர்.

பெற்ற தந்தையைக்கூட சித்ரா இறந்தபோது வரவிட முடியாமல் தடுத்த போலீசும் அரசும், கொடிக்கால்பிள்ளைமார்களுடன் சமமாக உட்கார்ந்து கொண்டு கெஞ்சிக் கொண்டிருந்தன. பேச்சுவார்த்தை பலனளிக்காமல் போகவே அரசு, உத்தப்புரத்தில் 144 தடையுத்தரவு போட்டுள்ளது. இதனால் குடமுழுக்கு தடைபட்டுப் போகும் எனக் கூறி, இதனைக் கண்டித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக ஆதிக்கசாதி வெறியர்கள் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

உத்தப்புரத்தில் பிள்ளைமார்களை உசுப்பேற்றி விட்டு அவர்களுடன் கூட்டணி கட்டி தாழ்த்தப்பட்டோரை ஒடுக்குவது என்னும் நோக்கில் அவ்வட்டாரத்தில் இருக்கும் அனைத்து இடைநிலை ஆதிக்க சாதியினரும் ஒன்றாய் அணிதிரண்டுள்ளனர். அரசும் அவர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்கிறது. போலீசோ, சாதிக்கூட்டணியின் ஏவல்நாயாகச் செயல்பட்டு, இன்னொரு கொடியங்குளத்தை நடத்தி இருக்கிறது.

சி.பி.எம். கட்சி, தாழ்த்தப்பட்டோர் மீதான போலீசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு நீதிவிசாரணை கோரியும் சேதப்படுத்தப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு கோரியும் போராடியது. அரசோ இவ்விரண்டையும் .

சமரச பேச்சுவார்த்தை என்ற பெயரில், சாதிவெறியர்களை மரியாதையாக
உட்காரவைத்து கெஞ்சிக் கூத்தாடும் அதிகாரவர்க்கமும் போலீசும்.





படிப்பகம்

www.padippakam.com

செய்யாமல் இருதரப்பையும் சேர்த்து 'அமைதிக் குழு' வை மட்டும் அமைத்துள்ளது.

கடந்த 5 மாதங்களில், எங்கெல்லாம் சம உரிமைக் கோரிக்கைகளை தாழ்த்தப்பட்டோர் எழுப்புகிறார்களோ, அங்கெல்லாம் உத்தப்புரம் பிள்ளைமாரின் மிரட்டல் நாடகத்தை அப்படியே பின்பற்றி ஆதிக்கசாதியினர் மலைக்குக் குடியேறுதல், குடும்ப அட்டையை ஒப்படைத்தல் என அரசை மிரட்டிப் பணிய வைக்கின்றனர். தங்களது ஆதிக்கத்தை நிலைநிறுத்த காக்கிவாடன்பட்டி, பெருமாள்பட்டி (சின்னாளபட்டி) முதலான ஊர்களில் இதே பாணியைப் பின்பற்றுகின்றனர்.

இந்நிலையில், உத்தப்புரத்தில் சி.பி.எம்.மின் தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் நடவடிக்கைகள் என்ன? மே மாதம் சுவரினை இடித்தவுடன் பிரச்சினை தீர்ந்துவிட்டதா? திறக்கப்பட்ட பாதையில் தாழ்த்தப்பட்டோர் சென்றுவர இன்னமும் பயந்து கொண்டுதானே உள்ளார்கள்? இரண்டாயிரம் ஆண்டுகளாய் அடிமனம் வரை வேரோடிக்கிடக்கும் சாதி வெறியை ஒரு கடப்பாரை தகர்த்து விடுமா?

சுவரினை இடித்ததும் வெற்றிக்களிப்பில் மிதந்த சி.பி.எம். கட்சி, அடுத்த கட்டமாக ஆதிக்க சாதியினர் மத்தியில் இருக்கும் நடுநிலை சக்திகளை வென்றெடுத்து, சாதிவெறியர்களைத் தனிமைப்படுத்த எந்த முயற்சியும் எடுக்கவில்லை. ஆதிக்க சாதிவெறியர்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்ளும் அரசையோ, சாதிவெறியர்களுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்துள்ள ஓட்டுக் கட்சிகளையோ அம்பலப்படுத்தவும் முன்வரவில்லை.

இவற்றில் எதையுமே செய்யாமல் சாதி ஆதிக்க அடையாளச் சின்னத்தை இடிப்பதால் மட்டும் சாதி ஆதிக்கத்தை முறியடித்துவிட முடியாது. சாதி ஆதிக்க வெறியர்களுடன் வெளிப்படையாகவும் இரகசியமாகவும் கூட்டணி கட்டியுள்ள பிழைப்புவாத ஓட்டுக் கட்சிகளையும் அரசையும் அம்பலப்படுத்தி வீழ்த்தாமல், தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவே முடியாது என்பதை மீண்டுமொரு முறை உணர்த்தியிருக்கிறது, உத்தரப்புரம்.

• சம்புகன்

# அமெரிக்காவின் தீவிரவாத எதிர்ப்புப் போர்: ஒட்டகம் மூக்கை நுழைத்த கதை


**தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற போர்வையில் ஆஃப்கானை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க இராணுவம் பாகிஸ்தானுக்குள்ளும் அத்துமீறி நுழைகிறது.**

ஆப்கானை ஆக்கிரமித்துப் பயங்கரவாத அட்டூழியங்களை நாளும் அரங்கேற்றி வரும் அமெரிக்கக் காட்டுமிராண்டிகள், இப்போது பாகிஸ்தானின் எல்லைப்புற பகுதிகளில் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டனர்.

கடந்த செப்டம்பர் 3-ஆம் நாளன்று பாகிஸ்தானின் மேற்கே, ஆப்கானின் எல்லையை ஒட்டியுள்ள வஜீரிஸ்தான் எனும் பழங்குடியின மாகாணத்திலுள்ள ஜலால்கேல் கிராமத்தில் அமெரிக்கப் படைகள் ஹெலிகாப்டரில் வந்திறங்கின. ஹெலிகாப்டர்களின் பேரிரைச்சலால் அச்சத்தோடு கிராம மக்கள் வீடுகளிலிருந்து வெளியே ஓடி வந்தனர். நிராயுதபாணிகளான அக்கிராம மக்கள் மீது அமெரிக்கப் படைகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தின. அதில் 40-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். இவர்களில் பெண்களும் குழந்தைகளும்தான் அதிகம். அக்கிராம மக்கள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருக்க, அமெரிக்கப் படைகள் எவ்விதச் சலனமுமின்றி பறந்து சென்றன.

ஜலால்கேல் கிராமத்தில் நடந்ததைப் போலவே கடந்த செப்டம்பர் மாதத்தில் மட்டும் பாகிஸ்தான் எல்லைப்புற பகுதியில் அமெரிக்கப் படைகள் நான்குமுறை அத்துமீறி நுழைந்து, கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு - குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இத்தாக்குதல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்துள்ளனர்.

ஆப்கானை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கப் படைகள்தான் அங்கிருந்து ஹெலிகாப்டர்கள் - போர் விமானங்கள் மூலம் வந்திறங்கி தாக்குதலை நடத்தியுள்ளன. ஆப்கானை பல்வேறு ஏகாதிபத்திய நாடுகளின் கூட்டுப் படைகள் ஆக்கிரமித்துள்ள நிலையில், அக்கூட்டுப் படைகளின் தலைமையகத்துக் கூடத் தெரியாமல் எவ்வித முன்னறிவிப்புமின்றி அமெரிக்கப் படைகள் பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து இத்தாக்குதலை நடத்தியுள்ளன. ஆப்கானைப் போலின்றி, பாகிஸ்தான் ஒரு சுயாதிபத்திய நாடு என்பதைக் கூட அமெரிக்க பயங்கரவாதிகள் ஏற்கவில்லை. ''அந்நாடு தனது சுயாதிபத்திய உரிமையைக் கட்டிக் காக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே அந்நாட்டின் சார்பில் நாங்கள் பயங்கரவாதிகள் மீது போர் தொடுத்துள்ளோம்'' என்று திமிராகக் கொக்கரிக்கிறார், அமெரிக்க ஆக்கிரமிப்புப் படைத்தளபதி.




வஜீரிஸ்தானில் அமெரிக்கப் படைகள் நடத்திய படுகொலைகளுக்கு எதிராக பாக். மக்களும் மனித உரிமை அமைப்புகளும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கியதும், பாக். நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அவசரமாகக் கூடின. அமெரிக்காவின் அத்துமீறிய தாக்குதலையும் மிருகத்தனமான படுகொலைகளையும் கண்டித்ததோடு, பாக். படைகளை முழு அளவில் குவித்து எல்லைப்புற பகுதியி


படிப்பகம்

www.padippakam.com

லிருந்து அமெரிக்கப் படைகளை முற்றாக வெளியேற்றி ஆக்கிரமிப்பைத் தடுக்க வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றின. பாக். அதிபர் சர்தாரியும், "இது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்; பாக். எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த அமெரிக்காவின் செயலை ஏற்க முடியாது" என்று குற்றம் சாட்டியுள்ளார்.




அமெரிக்காவின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் உற்றார்-உறவினர்களைப் பறிகொடுத்த துயரத்தில் கதறும் பழங்குடியினப் பெண்.

பாகிஸ்தானின் மேற்கு எல்லைப் பகுதியில் அமெரிக்கா அத்துமீறி நுழைந்து திடீர் தாக்குதல் நடத்தக் காரணம் என்ன? "இப்பகுதியில் தாலிபான் பயங்கரவாதிகள் பதுங்கியிருக்கிறார்கள். இப்பகுதியிலுள்ள பழங்குடியின மக்கள் மிகவும் வறிய நிலையில் உள்ளனர். இதைச் சாதகமாக்கிக் கொண்டு தாலிபான்கள் இஸ்லாமியப் பள்ளிக்கூடங்களை நிறுவிச் சிறுவர்களுக்கு உணவும் கல்வியும் அளித்து, தமது நோக்கங்களுக்கு ஏற்பப் பயிற்றுவித்து வளர்க்கிறார்கள். இச்சிறுவர்கள், இளைஞர்களாக வளரும் போது தாலிபான் பயங்கரவாதிகளாக மாறுகிறார்கள். இப்பகுதியில் கஞ்சா செடி வளர்த்து, போதை மருந்து வியாபாரம் மூலம் கோடிகோடியாய் குடித்து, அதிநவீன ஆயுதங்களை கள்ளச் சந்தையில் வாங்கி, பயங்கரவாதக் குழுக்களைக் கட்டியமைத்து தாலிபான்கள் தாக்குதல் தொடுக்கின்றனர். இப்பகுதி வாழ் பழங்குடியின மக்கள் தாலிபான்களை ஆதரிப்பதால், இப்பகுதி தாலிபான்களின் பாசறையாகி விட்டது. பயங்கரவாத தாலிபான்களை இப்பகுதியிலிருந்து வெளியேற்றி அழித்தொழிக்கவே அவசியத்தையொட்டி இத்தாக்குதல் நடத்தப்பட்டது" என்று நியாயவாதம் பேசுகிறது அமெரிக்கா.

இதில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது என்றாலும், இது பற்றி முடிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டியது பாகிஸ்தான் அரசு தானே தவிர, அமெரிக்க பயங்கரவாதிகள் அல்ல. ஆப்கானின் பொம்மை அரசோ, அல்லது பாக். அரசோ இப்படியொரு காரணத்தை வைத்து அமெரிக்காவிடம் உதவி கோரவுமில்லை. இராணுவ சர்வாதிகாரி முஷாரஃப்பின் ஆட்சி முடிவுக்கு வந்த பிறகு, பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்களும் நாய்ச்சண்டைகளும் நீடித்து வருவதாலும், அந்நாட்டு அரசும் அரசாங்கமும் பலவீனமான நிலையில் இருப்பதாலும் அமெரிக்கா பேட்டை ரௌடி போலக் கொட்டமடிக்கிறது.

அமெரிக்காவின் அத்துமீறல்களுக்கு எதிராக உலகெங்கும் கண்டனக் குரல்கள் எழத் தொடங்கியதும், தற்காலிகமாக பாக். எல்லைப் பகுதியில் தனது தாக்குதலை அமெரிக்கா நிறுத்தியுள்ளது. எனினும், தாலிபான்கள் மீது பாக். அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டி பாக். இராணுவத்தை ஏவித் தாக்குதலைத் தொடர்கிறது, அமெரிக்கா. தாலிபான் பயங்கரவாதிகளை வெளியேற்றுவது என்ற பெயரில் பாக். இராணுவம் இப்பகுதியில் நடத்திவரும் தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இவையெல்லாம் ஏதோ அண்டை நாட்டின் உள் விவகாரங்கள் என்று ஒதுக்கித் தள்ளி விட முடியாது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முகமூடியுடன் அமெரிக்கப் பயங்கரவாதிகள் எந்த நாட்டிலும் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தலாம். இஸ்லாமியப் பயங்கரவாதிகளை ஒழிப்பது என்ற பெயரில் இந்தியாவிலும் அமெரிக்கா தாக்குதல் நடத்தலாம். விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று அமெரிக்கா முத்திரை குத்தியுள்ளதால், நாளை ஈழத்தையும் அமெரிக்க பயங்கரவாதிகள் ஆக்கிரமிக்கலாம். தெற்காசிய வட்டகையில் தனது இராணுவப் போர்த்தந்திர நோக்கங்களை ஈடேற்றிக் கொள்ள, இவ்வட்டகையிலுள்ள நாடுகளின் சுயாதிபத்திய உரிமைகளை நசுக்கி, அமெரிக்க பயங்கரவாதிகள் போர்த் தாக்குதல் நடத்தலாம். பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முகமூடியுடன் எந்த நாட்டிலும் அத்துமீறி நுழைந்து தாக்குதல் தொடுக்கக் கிளம்பிவிட்ட அமெரிக்க மேலாதிக்கப் பயங்கரவாதிகளை முறியடிக்காமல், தெற்காசியாவில் அமைதியையோ, நாடுகளின் சுயாதிபத்திய உரிமைகளையோ பாதுகாக்கவே முடியாது. இந்த உண்மைகளை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது, பாக். எல்லையில் நடந்த அமெரிக்கத் தாக்குதல்.




• தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# நானாவதி கமிசன் அறிக்கை: குற்றப்பத்திரிகையே தீர்ப்பு!

**கோத்ரா முசுலீம்கள் மீது மோடி வாரியிறைத்த அவதூறுகளையே தீர்ப்பாகத் தந்துள்ளது, நானாவதி கமிசன்.**

குஜராத் மாநிலத்திலுள்ள கோத்ரா தொடர்வண்டி நிலையத்தில், சபர்மதி விரைவு வண்டியின் பெட்டிகள் தீப்பிடித்து எரிந்து போனதை விசாரித்து வந்த நானாவதி கமிசன், இச்சம்பவம் பற்றி இந்து மதவெறிக் கும்பல் எந்தப் பொய்யைப் பிரச்சாரம் செய்து வருகிறார்களோ, அந்தப் பொய்யையே தீர்ப்பாக அளித்திருக்கிறது. ''இச்சம்பவம் உள்ளூர் (கோத்ரா) முசுலீம்கள் திட்டம் போட்டு நடத்திய சதிச் செயல்; குஜராத் முதல்வர், அவரது அமைச்சர்கள், அம்மாநில போலீசு அதிகாரிகளுக்கும் இச்சம்பவத்திற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது; குஜராத் கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியும், மறுவாழ்வும் அளிப்பதில் குஜராத் மாநில அரசு எவ்விதச் சுணக்கமும் பாரபட்சமும் காட்டவில்லை'' என நானாவதி கமிசன், தனது தீர்ப்பின் முதல் பாகத்தில் அறிவித்திருக்கிறது. ''இச்சம்பவம், உள்ளூர் முசுலீம்களின் சதிச் செயல் என்பதற்குப் பதிலாக, பாகிஸ்தான் ஐ.எஸ்.ஐ.-யின் சதிச் செயல்'' என நானாவதி கமிசன் தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தால், நரேந்திர மோடி இன்னும் மகிழ்ந்திருக்கக் கூடும்!

காங். கூட்டணி மைய அரசைக் கைப்பற்றிய பிறகு, ரயில்வே அமைச்சகம் கோத்ரா சம்பவம் பற்றி விசாரிக்க யு.சி. பானர்ஜி என்ற முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதியின் தலைமையில் ஒரு கமிசன் அமைத்ததும்; அக்கமிசன் ''கோத்ரா சம்பவம் ஒரு எதிர்பாராத விபத்து'' எனத் தீர்ப்பளித்திருப்பதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். ஒரு சம்பவம், நேரெதிரான இரண்டு தீர்ப்புகள் - சுவாரசியமான முரண்பாடுதான்.

இந்து மதவெறிக் கும்பலின் ஊதுகுழலான துக்ளக் ''சோ'', ''பானர்ஜி கமிசனின் அறிக்கை, பீகார் சட்டசபை தேர்தலுக்காக லல்லு பிரசாத் யாதவ்-வால் அரங்கேற்றப்பட்ட நாடகம்'' என ஒதுக்கித் தள்ளுகிறார். சோ-வின் தர்க்கவாதம் உண்மையாகவே இருந்துவிட்டுப் போகட்டும்; ஆனாலும், நானாவதி கமிசனின் அறிக்கையை நீதிநெறி பிறழாதத் தீர்ப்பாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனென்றால், இத்தீர்ப்பு, உச்சநீதி மன்றத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்ட போலீசு அதிகாரி நோயல் பார்மரின் அறிக்கையின் (கோத்ரா சம்பவம் பற்றிய போலீசு விசாரணை அறிக்கை) நகலாக இருக்கிறது.

''1000 முசுலீம்கள் இரயிலுக்குத் தீ வைத்து இந்துக்களைக் கொல்லுங்கள் என்று கத்திக் கொண்டே தாக்குதல் நடத்தி, பெட்ரோலை ஊற்றி, எரிகிற துணிகளை உள்ளே வீசி, இந்தச் செயலைச் செய்திருக்கின்றனர்... அந்தப் பகுதியில் இருந்த மசூதியில் இருந்து இந்துக்களைத் தாக்குமாறு, முசுலீம்களைத் தூண்டிவிடும் முழக்கங்கள் ஒலிபெருக்கி வழியே ஒலிபரப்பப்பட்டன. இதற்கான சதி, சம்பவத்திற்கு முதல் நாள் கோத்ராவில் உள்ள அமன் விடுதியில் தீட்டப்பட்டது. அன்றிரவே, 140 லிட்டர் பெட்ரோல் வாங்கப்பட்டது... மௌல்வி உமர்ஜி என்பவர்தான் இச்சதியின் மூளை'' எனக் குறிப்பிட்டுள்ள நானாவதி கமிசன் 'இச்சதி'யில் பங்கேற்ற பிறரையும் தனது தீர்ப்பில் அடையாளம் காட்டியுள்ளது.

சம்பவம் நடந்த அன்று சபர்மதி விரைவு வண்டியில் பயணம் செய்த பயணிகள், உதவி நிலைய அதிகாரி, நிலையக் கண்காணிப்பாளர், ரயில்வே பாதுகாப்பு போலீசார் உள்ளிட்டு 100 சாட்சியங்களின் அடிப்படையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக நானாவதி கமிசன் கூறுகிறது. மேலும், தனது சாட்சியங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, ''பயணிகள் அளித்த சாட்சியம் கமிசன் முன்பு மட்டுமே கூறப்பட்டவையல்ல; சம்பவம் நடந்த உடனேயே மாவட்ட ஆட்சியரிடம் இதே விவரங்களை, இதே நபர்கள் அளித்திருக்கிறார்கள். எனவே, இந்த சாட்சியங்கள் கமிசனுக்காகப் புனைந்து கூறப்பட்டவையல்ல; சம்பவம் நடந்த உடனேயே - சாட்சிகள் தங்களுக்குள் கலந்து பேசி பொய்க்கதை புனைய நேரமில்லாத போது - பலரும் கூறிய ஒரே வகை விளக்கங்கள் இவை'' என நானாவதி கமிசன் தெளிவுபடுத்தியிருக்கிறது.

மாவட்ட ஆட்சியர் சம்பவம் நடந்த அன்று சம்பவம் நடந்த இடத்தில் இருந்ததை நானாவதி கமிசன் அறிக்கை சாட்சியங்களின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. அம்மாவட்ட ஆட்சியர் ஜெயந்தி ரவி, நானாவதி கமிசன் முன் அளித்துள்ள சாட்சியத்தில் ''நான் முசுலீம்கள் கும்பலாக நின்றதைப் பார்க்கவில்லை; 'இஸ்லாம் அபாயத்தில் இருக்கிறது, 'இந்துக்களை வெட்டுங்கள்' என ஒலி பெருக்கி வழியாக முழக்கமிடப்பட்டதை நான் கேட்கவில்லை'' எனக் கூறியிருக்கிறார். கமிசனின் 'கண்டுபிடிப்புக்கும்', மாவட்ட ஆட்சியரின் சாட்சியத்திற்கும் இடையே மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு இருப்பதால், நானாவதி கமிசன், ''மாவட்ட ஆட்சியர் ஓரிடத்தில் நில்லாமல், அங்கும் இங்கும் போய்க் கொண்டிருந்ததால், அவரால் கும்பலைக் காண முடியவில்லை; (மசூதியில் இருந்து ஒலிபரப்பான) அறிவிப்பைக் கேட்க முடியவில்லை'' என விளக்கம் அளித்திருக்கிறது.

மாவட்ட ஆட்சியர் மட்டுமின்றி சுதந்திரமான சாட்சிகளாகத் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, கமிசனிடம் சாட்சியம் அளித்திருக்கும் ரயில்வே ஊழியர்கள், ''ரயிலுக்கு வெளியே நின்றிருந்த கும்பல் ஆத்திரத்தோடு இருந்ததாகவும்; ரயில் மீது கற்களை வீசி எறிந்ததாகவும்தான்'' கூறியிருக்கிறார்களே தவிர, ''அந்தக் கும்பல் ரயிலுக்குத் தீ வைத்ததைத் தாங்கள் பார்த்ததாக''க் கூறவில்லை.

''ராம பக்தர்கள்'' எனத் தங்களைக் கூறிக் கொண்டு, கமிசனிடம் சாட்சியம் அளித்த சில பயணிகள்தான், ''ரயிலுக்கு வெளியே நின்றிருந்த முசுலீம் கும்பல்கள்தான் தீ வைத்ததாக'' கூறியுள்ளனர். இந்த ராம பக்தர்களின் சாட்சியத்தில் உள்நோக்கம் இருக்குமா என கமிசன் சந்தேகிக்கவில்லை. அப்படி சந்தேகிப்பது தெய்வ குற்றம் ஆகிவிடுமோ எனப் பயந்துவிட்டது போலும். அதனால், ரயில் மீது கல்லை எறிந்த


படிப்பகம்


www.padippakam.com

வந்தான் (ரயில் மீது கல்லெறியப்பட்டதை பானர்ஜி கமிசனும் ஏற்றுக் கொண்டுள்ளது) தீயை வைத்திருப்பான் என்ற எளிமையான முடிவுக்கு வந்துவிட்டது போலும்.

இக்கல்லெறிச் சம்பவம் கூட காரணமின்றி நடந்து விடவில்லை. சபர்மதி விரைவு ரயில் கோத்ரா நிலையத்தில் வந்து நின்றபொழுது, ராம பக்தர்கள் ரயில் நிலைய முசுலீம் வியாபாரிகளிடம் தகராறு செய்ததையும்; ஒரு இளம் பெண்ணை ரயிலுக்குள் பலவந்தமாக இழுக்க முயன்றதையும் பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன. ஆனால் நானாவதி கமிசனோ இவையெல்லாம் முசுலீம்கள் பரப்பிய வதந்திகள் என ஒதுக்கித் தள்ளிவிட்டது.

குஜராத்தில் இருந்து ராம பக்தர்கள் அயோத்தி சென்று விட்டு சபர்மதி விரைவு வண்டி மூலம் திரும்புவது, குஜராத் மாநில உளவுத்துறைக்கே தெரியாத பொழுது, கோத்ரா முசுலீம்கள் இச்சதித் திட்டத்தை எந்த அடிப்படையில் தீட்டியிருக்க முடியும் என்ற அடிப்படையான கேள்விக்கு நானாவதி கமிசன் எந்தவொரு விளக்கமும் அளிக்கவில்லை.

கோத்ரா ரயில் நிலையத்தை விட்டுக் கிளம்பிய சபர்மதி விரைவு வண்டி, சில நிமிட நேரத்திற்குள்ளாகவே ஏன் திரும்ப நின்றது? ரயிலை யார் நிறுத்தியது? என்பது சர்ச்சைக்குரியதாகவே இருக்கிறது. நானாவதி கமிசன் வெளியே இருந்தவர்கள்தான் ரயிலை நிறுத்தியதாகக் கூறுகிறது. ஆனால், ரயில்வே ஊழியர்கள் தற்பொழுது பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் வெளியே இருந்து நிறுத்துவது சாத்தியமில்லை என்கிறார்கள்.



குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் எரிக்கப்படும் நானாவதி கமிசன் அறிக்கை.

சபர்மதி விரைவு வண்டியை எரிக்கும் நோக்கத்தோடு கோத்ரா முசுலீம்கள், உள்ளூர் பெட்ரோல் நிலையத்தில் இருந்து 140 லிட்டர் பெட்ரோல் வாங்கியதைச் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. கலாபாய் பெட்ரோல் நிலையத்தைச் சேர்ந்த பிரதாப்சிங் ஜி.படேல், ரஞ்சித்சிங் ஜே.படேல் என்ற இரண்டு ஊழியர்கள் ஏப்ரல் 10, 2002 அன்று கமிசனின் முன் அளித்த சாட்சியத்தில், ''நாங்கள் யாருக்கும் சில்லறையாக பெட்ரோல் விற்கவில்லை என்றும்; தங்களின் பெட்ரோல் நிலையத்தில் சில்லறையாக பெட்ரோல் விற்பனை செய்யப்படுவதில்லை'' என்றும் கூறியுள்ளார்.

ரஞ்சித்சிங் தனது வாக்குமூலத்தை பின்னால் மாற்றிக் கொண்டு விட்டார். இதற்கு போலீசார் ரூ. 50,000 இலஞ்சமாக அளித்ததாக ''தெகல்கா'' வார இதழ் குஜராத் முசுலீம் படுகொலை பற்றி நடத்திய இரகசியப் புலனாய்வில் ஒப்புக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக, குஜராத்தின் தடய அறிவியல் துறை, பல்வேறு விதமான சோதனைகளை நடத்தி, வெளியில் இருந்து எரிபொருளை வீசியெறிந்து ரயில் பெட்டியை எரித்திருக்க வாய்ப்பில்லை எனத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறது. ரயில் பெட்டி உள்ளிருந்து தீப் பிடித்திருக்க வேண்டும்; ஏறத்தாழ 60 லிட்டர் பெட்ரோலை ரயில் பெட்டியில் தரையில் கொட்டி, அதனால் தீ பிடித்திருக்கலாம் என்பதுதான் குஜராத் தடய அறிவியல் துறையின் அனுமானம். இந்த அறிவியல் பூர்வமான ஆய்வை அடிப்படையாகக் கொண்டுதான் பானர்ஜி கமிசன், ''இது எதிர்பாராதவிதமாக நடந்த விபத்தாக இருக்கலாம்'' என்ற முடிவுக்கு வந்தது.

''வெளியே நின்று கொண்டிருந்த முசுலீம்கள் ஏதோவொரு எரிபொருளை ரயில் பெட்டிக்குள் வீசியெறிந்து தீ வைத்ததாக''க் குற்றச்சாட்டைப் பதிவு செய்திருந்த போலீசார், தடய அறிவியல் துறையின் அறிக்கை வெளிவந்த பிறகு, புதுக் கதை ஒன்றை சோடித்தார்கள்; முசுலீம்களுள் ஒருவர் ரயில் பெட்டியை இணைக்கும் கண்டை கிழித்துக் கொண்டு பெட்டிக்குள்ளே போய், பெட்ரோலைக் கொட்டி தீ வைத்ததாக குற்றப்பதிவு அறிக்கையினை மாற்றி எழுதினார்கள். மோடி அரசுக்கு நெருக்கமான நோயல் பார்மர் என்ற போலீசு அதிகாரிதான் இந்த மாற்றத்தை செய்தவர். நானாவதி கமிசனும், இப்போலீசு அதிகாரியின் ''கண்டுபிடிப்பை'' எவ்விதமான விசாரணைக்கும் உட்படுத்தாமல் ஏற்றுக் கொண்டுள்ளது.

''ராம பக்தர்கள் நிறைந்துள்ள பெட்டிக்குள் முசுலீம் ஒருவர் பெட்ரோல் கேனுடன் ஏறி பெட்ரோலை கீழே கொட்டி, தீயை வைத்துவிட்டு வெளியே வந்து விடமுடியுமா?'' என்ற கேள்விக்கு போலீசு மட்டுமின்றி, நானாவதி கமிசனும் பதில் அளிக்க மறுத்து விட்டது.

முசுலீம்களால் கிழிக்கப்பட்டதாகக் கூறப்படும் அந்தக் கூண்டு, முக்கியமான சாட்சியமாகப் பாதுகாக்கப்படவில்லை. மாறாக, அக்கூண்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு விட்டது. தங்களது ''கண்டுபிடிப்பில்'' யாரும் ஓட்டையைக் கண்டுபிடித்து விடக்கூடாது என்பதற்காகவே, இந்த முக்கியமான சாட்சி அதிகாரிகளால் அழிக்கப்பட்டுள்ளதாகக் கருதலாம்.


படிப்பகம்

www.padippakam.com

குஜராத்தில் இனப்படுகொலை நடந்தபொழுது கூடுதல் போலீசு இயக்குனராகப் பணியாற்றிய ஆர்.பி.சிறீகுமார், இந்த இனப்படுகொலையில் மோடியும், அவரது அமைச்சரவையும் போலீசு துறையும் வெளிப்படையாகப் பங்கெடுத்துக் கொண்டதைத் தக்க ஆதாரங்களுடன் நானாவதி கமிசனிடம் கொடுத்திருக்கிறார். ''காலனிய காலத்தில் நடந்த ஜாலியன்வாலா பாக் படுகொலையை விசாரித்த வெள்ளை நீதிபதி ஹண்டர் கூட, நாணயத்தோடு வெள்ளை அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும் எனத் தீர்ப்புக் கூறினார். சுதந்திரமான, ஜனநாயகமான, மதச்சார்பற்ற இந்தியாவில் நடத்தப்பட்ட இவ்விசாரணையில் நாணயத்தை அறவே காணமுடியவில்லை'' என ஒப்பிட்டு, இத்தீர்ப்பை எள்ளி நகையாடியிருக்கிறார், அவர்.

இக்கமிசனின் தீர்ப்பு மட்டுமல்ல, இக்கமிசனில் அமர்ந்திருக்கும் இரண்டு நீதிபதிகளின் அறிவு நாணயம் கூட கேள்விக்குரியதாகத்தான் இருக்கிறது. இக்கமிசனின் இரண்டு நீதிபதிகளுள் ஒருவரான அக்சய் மேத்தாதான், நரோடா பாட்டியாவில் நடந்த படுகொலையில் முக்கிய குற்றவாளியான பாபு பஜ்ரங்கிக்கு, நரேந்திர மோடியின் இரகசிய உத்தரவின் பேரில் பிணை வழங்கியவர். இந்த உண்மையை, ''தெகல்கா'' வார இதழ் நடத்திய இரகசியப் புலனாய்வில் பாபு பஜ்ரங்கியே போட்டு உடைத்து விட்டான்.

ஜி.டி. நானாவதி, ''உண்மை''யைக் கண்டுபிடிக்க விசாரணை நடத்திக் கொண்டிருந்தபொழுது, அவரது மகன் மௌலிக் நானாவதி உச்சநீதி மன்றத்தின் குஜராத் அரசின் வழக்குரைஞராக நியமனம் பெற்றார். இதைக் கையூட்டு எனச் சொல்ல முடியாதா? அதனால்தான் பாதிக்கப்பட்ட முசுலீம்களுள் பெரும்பாலோர் இக்கமிசனின் முன் சாட்சியம் அளிப்பதையே தவிர்த்து விட்டனர். இப்படிப்பட்ட மோடியின் விசுவாசிகளிடமிருந்து, மோடிக்கு நற்சான்றிதழ் அளிக்கும் தீர்ப்பைத் தவிர, வேறெதை எதிர்பார்க்க முடியும்?

● பாலன்

## குடியிருப்புப் பகுதியா? திறந்தவெளி மதுபான விடுதியா?
## "டாஸ்மாக்" கடையை அகற்றக் கோரி ஆர்ப்பாட்டம்.

உழைக்கும் மக்களின் போராட்ட வரலாற்றில் ம.க.இ.க.வின் பெயரைப் பலமுறை பதிவு செய்திருக்கிறது, சென்னை-சேத்துப்பட்டு. கடந்த 23.10.08 அன்று மீண்டும் ஒருமுறை கம்பீரமாகப் பதிவு செய்தது. ''சேத்துப்பட்டு ஸ்கூல் ரோடு டாஸ்மாக் சாராயக் கடையை இழுத்து மூடு! குடிகாரர்களின் அலம்பல்கள் - அட்டாகசங்களிலிருந்து உழைக்கும் மக்களுக்குப் பாதுகாப்பு கொடு!'' என்ற முழக்கங்களுடன் பகுதிவாழ் மக்களை அணிதிரட்டி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் - மறியல் போராட்டத்தை நடத்தி முதற்கட்ட வெற்றியைச் சாதித்திருக்கிறது, ம.க.இ.க.

சேத்துப்பட்டில் சாராயக் கடைக்கு எதிரான போராட்டத்துக்கு நீண்ட வரலாறு உண்டு. ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கு முன்பு இதே ஸ்கூல் ரோடில் இருந்த திருப்தி ஒயின்ஸ் என்ற சாராயக் கடையை அகற்றக் கோரி ம.க.இ.க. தலைமையில் மக்கள் போராடினர். சேத்துப்பட்டிலிருந்த பிரபல ரவுடி தங்கையாவை வைத்து அச்சாராயக் கடை முதலாளி மிரட்டிப் பார்த்தான். ஆனால், ம.க.இ.க.வின் உறுதியான போராட்டத்தால் ரவுடி தங்கையா அலறியடித்துக் கொண்டு ஓடிப் போனான். இப்போது, அந்தச் சாராயக்கடை இருந்த இடத்தில் அரசின் டாஸ்மாக் கடை வந்துள்ளது.

குடிகெடுக்கும் இச்சாராயக் கடையால், உழைக்கும் மக்கள் இத்தெருவில் நடமாட முடியாத அளவுக்கு குடிகாரர்களின் அலம்பல்களும் அராஜகங்களும் தொடர்ந்ததால், குடியிருப்புப் பகுதியிலுள்ள இச்சாராயக் கடையை அகற்றக் கோரி இப்பகுதியெங்கும் விரிவாக ம.க.இ.க. பிரச்சாரம் செய்தது. ஏற்கெனவே குமுறிக் கொண்டிருந்த தாய்மார்களும் இளைஞர்களும் இந்நியாயமான கோரிக்கையை ஆதரித்து உற்சாகத்துடன் அணிதிரண்டனர். 23.10.08 அன்று செங்கொடிகள் விண்ணில் உயர ம.க.இ.க. தலைமையில் உள்ளூர் மக்கள் பெருந்திரளாக அணிவகுத்து முழக்கமிட்டபடியே ஊர்வலமாக வந்து டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டனர்.

உடனே பெருந்திரளாகக் குவிந்த போலீசு, ''ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வாங்கவில்லை; உங்கள் அனைவரையும் கைது செய்வோம்'' என்று மிரட்டியது. தாய்மார்களோ, ''எங்களின் தாலி அறுக்கும் இச்சாராயக் கடையை அகற்றாமல் நகர மாட்டோம்'' என்று பதிலடி கொடுத்து, அங்கேயே சாலை மறியல் போராட்டத்தைத் தொடர்ந்தனர். ஒரு மணி நேரத்தில் ஏ.சி., டி.சி. முதலான போலீசு உயரதிகாரிகள் வந்து, ''நீங்கள் செய்வது சட்டவிரோதச் செயல்'' என்று மிரட்டி விட்டு, ''இன்னும் 15 நாட்களில் இக்கடையை அகற்றிவிடுகிறோம்; குடிகாரர்களின் அலம்பல் - அராஜகங்கள் நிகழாமல் உரிய பாதுகாப்பு தருகிறோம்'' என்று வாக்குறுதி அளித்து, முன்னணியாளர்கள் 50 பேரைக் கைது செய்தனர். பின்னர், அனைவரையும் விடுவித்ததோடு, வாக்குறுதியை எழுத்துப்பூர்வமாகவும் அளித்தனர். இம்முதற்கட்ட வெற்றி, பகுதிவாழ் மக்களிடம் ஆரவாரமான வரவேற்பைப் பெற்றுள்ளதோடு, மக்கள் நலனில் அக்கறை கொண்டு போராடும் ம.க.இ.க.வின் மீது எல்லையற்ற நம்பிக்கையையும் விதைத்துள்ளது.



— ம.க.இ.க., சென்னை

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



பொது வாக்கெடுப்பில் வாக்களித்ததற்கான ஆதாரங்களைக் காட்டும் வதாவ் கிராம விவசாயி ஏக்நாத் மாத்ரே.

விழ்த்துவிட்டது. விவசாயிகளும் சி.பொ.ம. எதிர்ப்புப் பிரச்சாரத்தில் தீவிரமாக இறங்கினர். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் கிராமம் கிராமமாகச் சென்று கலை நிகழ்ச்சிகள் நடத்தி, சி.பொ.ம.வுக்கு எதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. தேர்தலுக்குண்டான அனைத்துப் பரபரப்புகளுடனும், பலமான போலீஸ் காவலுடனும் வாக்குப்பதிவு நடந்தது.

ராய்காட் மாவட்ட ஆட்சியர் 30,000 விவசாயிகளுக்கு வாக்குப்பதிவில் கலந்துகொள்ள அழைப்பு அனுப்பியிருந்தார். 6,000 வாக்குகள் பதிவாயின. எனினும் ஒரு விவசாயிக்கே 23 அழைப்புகள் அனுப்பப்பட்டிருந்ததால் இது அதிகபட்ச வாக்குப்பதிவுதான்.

இதில் 82% விவசாயிகள் சி.பொ.ம.வுக்கு எதிராக, அவை தங்களுக்கு வேண்டவே வேண்டாம் என வாக்களித்துள்ளனர். வெகுசிலரே, 1 கோடி ரூபாய்க்கு, 99 வருடக் குத்தகைக்குத் தங்களது நிலத்தைத் தருவதாகவும், அதுவும் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதமளித்தால் மட்டுமே தருவதாகவும் வாக்களித்துள்ளனர். ஏக்கருக்கு 10 லட்சம் தரும் ரிலையன்சின் தற்போதைய வாக்குறுதிக்கு ஆதரவாக யாரும் வாக்களித்ததாகத் தெரியவில்லை.

இந்த வாக்கெடுப்பில் சி.பொ.ம. வுக்கு எதிராக வாக்களித்துவிட்டு வந்த தாமாஜி பட்டீல் எனும் விவசாயி, ''அரசின் பக்கபலத்துடன் அம்பானி, எங்கள் நிலத்தை ஆக்கிரமித்துத் தொழிற்சாலை கட்டுவதை அனுமதிக்க நாங்கள் என்ன முட்டாள்களா? நிலத்திற்கு பணம் மாற்றாகுமா?'' என்று கேட்கிறார். நரேந்திர பரசுராம் பட்டீல் எனும் இன்னொரு விவசாயி, ''இது விவசாயிகளின் போராட்டம், நாங்கள் தொடர்ந்து கடுமையாகப் போராடக்கூடியவர்கள். எங்களது நிலம் எங்கள் கைகளில் வரும் வரை எங்களின் இந்தப் போராட்டம் ஓயாது' என்று கூறினார்.

அவர் கூறியது போலவே கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தொடர்ந்து கடுமையாகப் போராடி, அரசை நிர்பந்தித்து, இப்படி ஒரு வாக்கெடுப்பை நடத்தச் செய்ததுடன், அதில் சி.பொ.ம.வுக்கு எதிரான தங்களது கருத்தைப் ஆழமாகப் பதிவு செய்துள்ளனர். ஆனால், வாக்கெடுப்பு நடந்த அன்றே அரசு அதிகாரி ஒருவர் 'வாக்கெடுப்பு மக்களின் கருத்தை அறிவதற்காக மட்டும்தான் நடத்தப்பட்டுள்ளது, ஆனால், இறுதி முடிவு மாநில அரசினுடையதாக இருக்கும்' என்று கூறியுள்ளார். மக்களின் முடிவை அரசு ஏற்காத பொழுது, சி.பொ.ம.வுக்கெதிரான தங்களது போராட்டம் இன்னும் அதிக வீரியத்துடன் இருக்கும் என விவசாயிகள் கூறியுள்ளனர்.

நாடு முழுவதும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப் பொருளாதார வல்லுநர்கள், தரகு முதலாளிகள், மைய அமைச்சர்கள், மாநில அரசுகள் என அனைவரிடமும் கருத்துக் கேட்ட இந்த அரசு, இதனால் நிலமிழந்து ஓட்டாண்டியாகப் போகும் விவசாயிகளில் ஒருவரிடம் கூடக் கருத்துக் கேட்கவில்லை. ஆனால், சிங்குரிலும், நந்திகிராமிலும், ஒரிசாவிலும், மராட்டியத்திலும் விவசாயிகள் தங்களது கருத்தைப் போராட்டங்களின் மூலமாகப் பதிவு செய்து வருகிறார்கள். சாம்ராஜ்யக் கனவுடன் தங்களது நிலங்களைக் கொள்ளையடிக்க வரும், பன்னாட்டு, தரகு முதலாளிகளைத் துரத்தியடிக்காமல் இந்தப் போராட்டங்கள் ஓயப்போவது இல்லை.

• அழகு

## 24-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே!**

**இந்த இதழிலிருந்து ''புதிய ஜனநாயகம்'' 24-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.**

**பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையே, இம் மார்க்சிய-லெனினிய அரசியல் ஏட்டின் புரட்சிகர பயணத்தைச் சாத்தியப்படுத்திய வாசகத் தோழர்களுக்கும் முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த ஓராண்டு காலத்தில், புரட்சிகர அரசியலை உழைக்கும் மக்களிடம் கொண்டு செல்லும் நோக்கத்துடன் விற்பனையை விரிவுபடுத்தியும், புதிய சந்தாதாரர்களை உருவாக்கியும், இதழ் வளர்ச்சிக்கு நன்கொடைகள் அளித்தும் ஆதரித்த அனைவருக்கும் எமது புரட்சிகர வாழ்த்துகள். நாடு மீண்டும் காலனியாக்கப்படுவதற்கு எதிராகவும், இந்துவெறி பார்ப்பன பாசிசத்துக்கு எதிராகவும் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத்தான கடமையை நிறைவேற்ற உங்களது உறுதியான ஆதரவுடன் 24-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.**

**வாசகத் தோழர்கள் அனைவருக்கும் எமது நவம்பர் புரட்சிநாள் வாழ்த்துக்கள்!**

**— ஆசிரியர் குழு**


படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்போம்!
# ஈழத் தமிழர் படுகொலைக்குத் துணைபோகும்
# இந்திய அரசை முறியடிப்போம்!

**சிங்கள இனவெறி பாசிச அரசு நடத்திவரும் ஈழத் தமிழின படுகொலையைக் கண்டித்தும்;**
**இந்த இன அழிப்புப் போருக்குத் துணை நிற்கும் இந்திய அரசின் சதிகளையும்,**
**மேலாதிக்க நோக்கங்களையும் அம்பலப்படுத்தியும்**
**தமிழகமெங்கும் ம.க.இ.க.-பு.மா.இ.மு.-வி.வி.மு.-பு.ஜ.தொ.மு.-பெ.வி.மு. ஆகிய**

# புரட்சிகர அமைப்புகள் நடத்திய ஆர்ப்பாட்டம்


சென்னையில்...



துறையூரில்...


கிருஷ்ணகிரியில்...



திருச்சியில்...

**கொலைகாரன் மன்மோகன் சிங்கே,**
**உன் டாடாவும், அம்பானியும்**
**இலங்கையில் கொள்ளை லாபம் அடிக்க**
**எங்கள் ஈழத்தமிழர்கள் சாக வேண்டுமா?**

**இந்திய ஆளும் வர்க்கங்களின் தெற்காசிய**
**மேலாதிக்கத்திற்காக,**
**டாடா-அம்பானி போன்ற தரகு முதலாளிகள்**
**இலங்கையில் கொள்ளை லாபம் ஈட்டுவதற்காக,**
**சிங்கள இனவெறி இராணுவத்திற்கு**
**ஆயுதமும் பயிற்சியும் கொடுத்து ஏவிவிடும்**
**கொலைகார மன்மோகன் சிங் அரசை எதிர்த்துப்**
**போராடுவோம்!**

**ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்குக்**
**குரல் கொடுப்போம்!**

படிப்பகம்